விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள்: பதினாறு + பதினாறு
Registered as a Newspaper in Srilanka

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-3690)

# வலம்புரி
# Valampurii

E-mail :valampurii@yahoo.com
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 02 ஞாயிற்றுக்கிழமை (14.02.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 057

# மின்சாரக் கதிரையிலிருந்து மகிந்தவை காப்பாற்றினேன்

## தெளிவுபடுத்துகிறார் ஜனாதிபதி மைத்திரி

(பொலநறுவை)

சர்வதேச மட்டத்தில் இலங்கை கடும் சவால்களை எதிர்நோக்கியிருந்த காலத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மின்சாரக் கதிரையிலிருந்து நாமே காப்பாற்றினோம் என்பதை தெளிவாக அனைவருக்கும் தெரிவிக்கிறேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தவின் புதிய கூட்டணிக்கு அண்ணன் சமல் ஆதரவு மறுப்பு

### மைத்திரியின் பக்கமே தான் என அறிவிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பிளவுபடுத்தி புதிய கட்சி உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தனது சகோதரர் மற்றும் அவருக்கு நெருக்கமானவர்களுக்கு ஆதரவாக செயற்பட போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான உறுதிமொழியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், சமல் ராஜபக்ஷ வழங்கியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவினால் வேறு

15ஆம் பக்கம் பார்க்க

### சோதிட நம்பிக்கை காரணமாக

## பின்புறம் திரும்பிக்கொண்டு அலுவலகத்தை திறந்த மகிந்த!



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு சோதிட நம்பிக்கை அதிகமாக உள்ளதன் காரணமாக தனது புதிய அலுவலகத்தை பின்புறம் திரும்பிக்கொண்டு திறந்து வைத்துள்ள சுவாரசியமான சம்பவம் ஒன்று நடந்துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசினால் நன்மை ஏற்படவில்லை

### ரில்வின் சில்வா யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஆட்சி புரிந்த ஏனைய அரசாங்கங்கள் போலவே புதிய அரசாங்கமும் தனது அதிகாரத்தை பலப்படுத்துவதில் மட்டுமே குறியாக இருப்பதாக தெரிவித்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) பொது செயலாளர் ரில்வின் சில்வா, வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மக்களுக்கு அரசு எந்தவித நன்மைகளையும் ஏற்படுத்தி கொடுக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ்.அரியாலை புங்கன்குள சந்திக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் புதிய அலுவலக திறப்பு விழா நேற்றைய தினம் யாழ்.மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்றது. இதன் போது கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி ஒரு இனவாத கட்சி என வடக்கு மக்களால் கூறப்பட்டு வருகின்றது. இது உண்மையல்ல, எமது கட்சியின் நோக்கம் பாதிக்

15ஆம் பக்கம் பார்க்க

## மைத்திரி நாளை ஜேர்மனி பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை 15ஆம் திகதி ஜேர்மனிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவ்விஜயத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை மேம்படுத்திக் கொள்வது தொடர்பில் அவர் ஜேர்மனி அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அத்துடன் ஜேர்மனி ஜனாதிபதி ஏஞ்சலா மோர்கல் உள்ளிட்ட பலரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ள ஜனாதிபதி, அதன் பின்னர் அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்க

16ஆம் பக்கம் பார்க்க

## குவைத் சென்ற 104 பேர் நேற்று நாடு திரும்பினர்

வீட்டுப் பணிப்பெண் உள்ளிட்ட பல்வேறு தொழில்களுக்காக குவைத் நாட்டுக்குச் சென்று பல்வேறு கஷ்டங்களை அனுபவித்த 104 பேர் நேற்றுக் காலை நாடு திரும்பியுள்ளனர்.

இவர்களில் 8 பேர் ஆண்கள் என இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இவர்கள் அனைவரும் குவைத்தில் உள்ள இலங்கை தூதரகத்தில்

16ஆம் பக்கம் பார்க்க

### புதிய அரசியலமைப்பு;

## முல்லையில் நேற்று மக்கள் சந்திப்பு

(கொழும்பு)

புதிய அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக மக்கள் கருத்துப்பெறும் சந்திப்பு நேற்றும் முல்லைத்தீவில் இடம்பெற்றது.

இதில் 43 பேர் தமது கருத்துக்களை பதிவு செய்திருந்துடன் தனிநபர்களாகவும் குழுக்களாகவும் வருகை தந்திருந்தனர்.

இவ் அமர்வில் அதிகமானவர்கள் வடக்குக் கிழக்கு இணைக்கப்பட

15ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் காட்டுப் பகுதியில் கஞ்சா பொதிகள் மீட்பு



(மன்னார்)

மன்னார் - சிலாபத்துறை காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 17 இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற விசேட தகவலின் அடிப்படையில் இக் கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

கடல் மார்க்கமாக வங்காலை

15ஆம் பக்கம் பார்க்க

## நாய் வேலைக்கு இடமில்லை-ரணில்

(கொழும்பு)

அரசாங்கத்தின் மக்கள் நேய முயற்சிகளுக்கு அரசியல் குழு ஒன்று இடையூறு விளைவிப்பதாக நேற்று பதுளையில் விசேட உரை நிகழ்த்திய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மேலும், பெண்களை அவதூறு செய்யும் சில ஊடகங்களின் செயல்பாடுகளையும் பிரதமர் கண்டித்தார்.

அதுபற்றி பிரதமர் தெரிவித்ததாவது,

16ஆம் பக்கம் பார்க்க

## ‘மகிந்தவே எமக்கு முக்கியம்’

# சு.கட்சியிலிருந்து நீக்கப்பட்டவர்கள் ஜனாதிபதிக்கு பகிரங்க சவால்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டவர்கள் நேற்று கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி கட்சித்தலைமைக்கு சவால் விடுத்து உள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களாக கடமையாற்றிய பிரதேச அரசியல்வாதிகள் பத்துப் பேர் நேற்று முன்தினம் தொடக்கம் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் கூடிய சுதந்தி ரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. குறித்த பத்து அரசியல்வாதிகளுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சுதந்திரக் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட பிரதேச அரசியல்வாதிகள் நேற்று கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி கட்சித் தலைமைக்கு சவால் விடுத்துள்ளனர்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்

15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் பரவும் ஐ.எஸ் தீவிரவாதம்

(நியூயோர்க்)

இலங்கை உள்ளிட்ட தெற்காசிய நாடுகளில் ஐ.எஸ் தீவிரவாதம் வேகமாக பரவி வருவதாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் உத்தியோகபூர்வ அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

உலகளாவிய ஐ.எஸ் தீவிர

15ஆம் பக்கம் பார்க்க

## மகிந்த அணி நேற்றும் தேங்காய் உடைப்பு

(கொழும்பு)

மகிந்த ஆதரவு கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்றைய தினமும் தேங்காய் உடைத்து கடவுள் வழிபாட்டில் ஈடுபட்டனர்.

அரசாங்கத்தின் ஓராண்டு பூர்த்தி மற்றும் நிதி மோசடி விசாரணைப் பிரிவு ஆகியவற்றிற்கு எதிராகவே கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்நடவடிக்கையில் ஈடு

15ஆம் பக்கம் பார்க்க

# கொள்ளைச் சம்பவங்கள் உரும்பிராயில் அதிகரிப்பு

## இருவேறு திருட்டுச் சம்பவங்களில் 50 பவுண் நகை இழப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பகுதியில் அடுத் தடுத்து இடம் பெறுகின்ற அதிகரித்த திருட்டுச்சம்பவங்களினால் அப்பகுதி மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

இரண்டு கிழமைகளுக்குள் இடம் பெற்ற இருவேறு திருட்டுச் சம்பவங்களில் மட்டும் சுமார் 50 பவுண் நகை, மற்றும் ஒரு தொகை பணம் என்பன பறிகொடுக்கப் பட்டுள்ளது.

உரும்பிராய் தெற்கு ஐயப்பன் ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் பகல் கொள் ளைச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

உரும்பிராய் தெற்கு ஐயப்பன் ஒழுங்கையில் அமைந்துள்ள வீட்டில் பகல் 11 மணியளவில் வீட்டார் வெளியில் சென்றிருந்த சமயம் வீட்டின் கதவினை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் நகைகள் மற்றும் பணத்தினை கொள்ளை யிட்டுச் சென்றுள்ளனர்.

குறித்த வீட்டில் இருந்த வர்கள் வெளியில் சென்ற தனை அவதானித்த திருடர் கள் வீட்டின் கதவினை உடைத்து உள்ளேநுழைந்து வீட்டினுள் வைக்கப்பட்டி ருந்த 30 பவுண் நகை கள் மற்றும் நான்கரை இலட்சம் பணம் என்பவற்றை கொள்ளையடித்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

வெளியில் சென்ற வீட் டார் வீட்டிற்கு வந்தபோதே திருட்டைப்பற்றி அறிந் துள்ளனர். உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக் கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலி ஸார் விசாரணையை மேற் கொண்டதுடன் மேலதிக விசாரணையையும் ஆரம் பித்துள்ளனர்.

இதேவேளை உரும் பிராய் தெற்கு கோப்பாய் வீதியில் உள்ள வீடொன் றிலும் கடந்த 03-ம் திகதி இரவு கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. உரும்பிராய் தெற்கு கோப் பாய் வீதியில் அமைந்துள்ள வீட்டின் புகை போக்கி வழி யாக உள்நுழைந்த திருடர்கள் நகை கள் மற்றும் பணத்தினை கொள்ளை யிட்டுச் சென்றுள்ளனர்.

குறித்த வீட்டில் வயோதிபத் தாயா ரும் அவருடைய மகளும் தனித்திருந்த வேளை இரவு ஒரு மணியளவில் வீட்டின் புகைபோக்கி வழியாக திரு டர்கள் உள்ளே நுழைந்துள்ளனர்.

வயோதிபத் தாயார் ஒரு அறை யிலும் அவருடைய மகள் மற்றொரு அறையிலும் உறக்கத்தில் இருந்த தை அவதானித்து திருடர்கள் மகளை அடித்து கயிற்றினால் கட்டிய போது அவர் அவலக் குரல் எழுப்பியுள்ளார். அப்போது திருடர்கள் அவருடைய வாயினுள் துணியை திணித்து வாயை அடைத்துள்ளனர்.

எனினும் மகளின் அவலக்குரல் கேட்டு எழுந்த அந்த தாயார் மின் விளக்கை போட்டுள்ளார், அப் போது அந்த வயோதிப் மாதுவையும் தாக்கி அவரையும் கயிற்றினால் கட்டி வைத்து விட்டு வீட்டை சல்லடை போட்டுத் தேடி அங்கிருந்த சுமார் 20 பவுண் நகை கள் மற்றும் 50 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை அத்திருடர்கள் கொள்ளை யடித்து தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலி ஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம் பவ இடத்திற்கு வந்த பொலிஸார் தட யங்களை பதிவுசெய்து விசாரணையை மேற்கொண்டதுடன் மேலதிக விசாரணை யையும் ஆரம்பித்துள்ளனர்.

அண்மைக்காலமாக உரும் பிராயில் அடுத்தடுத்து இடம்பெறும் திருட்டுக்களால் மக்கள் இரவுப் பொழுதை அச்சத்துடனேயே கழித்து வருகின்றனர். இதனால் இரவுவேளை களில் பொலிஸார் கூடுதல் கண் காணிப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ)


# விற்பனைக்கு

நல்லின செம்மறி ஆடுகள் கிடாய், மறி விற்பனைக்கு உண்டு. (3594)

தொடர்புகளுக்கு - 0769216452

முத்துச்சிப்பி ஆற்றுகைப் பள்ளி
Muthuchsippi School of Performance

Grade 1 - A/L, B.A





அழகியல்
பாடங்களுக்கான
செய்முறையுடனான
கற்பித்தல்
Grade 6 - G.C.E (O/L)
Group Class
English Medium

Special Traning for Olympiad Students
Special Leading Resource Persons in Jaffna

நாடகமும் அரங்கியலும்
செய்முறை பரீட்சைக்கு தோற்ற
உள்ள O/L மாணவர்களுக்கான
பயிற்சிகள் தினமும்
3.00 - 5.00 P.M வரை
இடம் பெறும்.
மாணவர் எண்ணிக்கை
மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
பதிவுகளை மேற்கொள்ளவும்

உங்களது உன்னத
இலட்சியங்களை அடைந்து
உலகில் ஒருவராய்
உயர்ந்திட வாரீர்

200m இருபாலை கோண்டாவில் வீதி 071 8034248
(கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு முன்பாக)

(C-3694)


# இ.போ.ச - தனியார் பேருந்துகளின் சாரதிகளுக்கிடையில் முறுகல்நிலை

## மஞ்சள் கோட்டு கடவையிலும் பேருந்து தரிப்பு



(பரந்தன்)

ஏ-9 வீதியில் ஒன்றன்பின் ஒன்றாக போட்டி போட்டு பயணித்த பேருந்துகள் ஒன்றையொன்று முந் திச் செல்ல முற்பட்ட வேளையில் சாரதிகளுக்கு இடையில் வாய்த்தர்க் கம் ஏற்பட்டதுடன் பேருந்து ஒன்று மஞ்சள் கோட்டு கடவையில் தரித்து வைக்க வேண்டிய நிலையும் ஏற் பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனால் குறித்த பேருந்து களில் பயணித்த பயணிகளின் பயணம் தாமடைந்ததுடன் தாம் உரிய நேரத்திற்கு செல்ல வேண் டிய இடத்திற்கு சமுகமளிக்க தாம தம் அடைந்ததாகவும் பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி பரந்தன் சந்தியில் இடம்பெற்றது. இது தொடர்பில் தெரியவருவதா வது,

காரைநகரில் இருந்து வவு னியா பயணித்த இ.போ.ச பேருந் தும் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா பயணித்த தனியார் பேருந்தும் ஒன்றையொன்று போட்டி யிட்டு பயணித்த வேளை முன் னால் பயணித்துக் கொண்டிருந்த இ.போ.ச. பேருந்தின் சாரதி சடுதி யாக பிரேக்பிடித்து பேருந்தை மேற் படி இடத்தில் நிறுத்தியுள்ளார்.

இதனால் பின்னால் பயணித்த தனியார் பேருந்து மஞ்சள் கோட்டு கடவையில் நிறுத்தப்பட்டது.

இதனையடுத்து இரு பேருந் தின் சாரதிகளுக்கும் இடையில் வாய்த் தர்க்கம் மூண்டதில் பயணம் தாமதம் அடைந்தது.

பயணிகளின் தலையீட்டை அடுத்து பேருந்துகளின் பயணம் ஆரம்பிக்கப்பட்டது. (2)

# குடும்பப் பெண்ணின் சங்கிலி அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் தெற்கு ஞான வைரவர் ஆலய வீதியால் மோட் டார் சைக்கிளில் சென்று கொண் டிருந்த குடும்பப் பெண்ணொரு வரின் தங்கச் சங்கிலி, மோட்டார் சைக்கிளில் வந்த திருடர்களால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் 12 மணியள வில் உரும்பிராய் ஞானவைரவர் வீதி யால் சென்று கொண்டிருந்த குடும் பப் பெண்ணை பின் தொடர்ந்து வந்த திருடர்கள் வீதியில் ஆள் நடமாட்டத்தை அவதானித்து அவருடைய தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

திருடர்கள் சங்கிலியை அறுக் கும் பொழுது அவர் கையால் பற் றிப்பிடித்தபோதும் ஒரு சிறிய துண்டு சங்கிலி மட்டுமே எஞ்சியுள்ளது.

குறித்த பெண் உடனே கூக் குரல் இட்டதையடுத்து அருகில் இருந்த வீட்டார் திருடர்களின் மோட் டார் சைக்கிளை துரத்தி யுள்ளனர் எனினும் திருடர்கள் அகப்படா மல் தப்பிச்சென்றுள்ளனர்.

அதேவேளை அவர்கள் பய ணித்த மோட்டார் சைக்கிள் இலக் கத்தை குறித்து கொண்டதாக வும் சம்பவம் தொடர்பாக பொலி ஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ள தாகவும் அப்பகுதி மக்கள் தெரி வித்தனர். (செ)


வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# மரண அறிவித்தல்

## தில்லையம்பலம் சண்முகலிங்கம்

பிறப்பு 29-11-1947 இறப்பு 12-02-2016



சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் இல.157, ஸ்கந்தபுரம் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் சண்முகலிங்கம் 12.02.2016 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம்-சரஸ்வதியின் மூத்தமகனும் காலஞ்சென்ற வர்களான நாகலிங்கம்-சின்னம்மா அவர்களின் அன்பு மருமகனும், காலஞ் சென்ற சரஸ்வதி (கிளி) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கிருபாகரன் மற்றும் பிரபாகரன் (லண்டன்), விநோகரன்(கனடா), பிரதீபா (ஸ்கந்தபுரம்), சண்முகப்பிரியா (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும், தசிறூபா, ஜனகன், கோபு, யசோதா ஆகியோரின் அன்பு மாமனாரும், காவியா, நன்நிலா, இலக்கியா, இலட்ச்சியா, ஜெஸ்ரன், ஜெரூபா, பிவிசியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.157, ஸ்கந்தபுரம் கிளிநொச்சியில் 15-02-2016, திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் ஸ்கந்தபுரம் பொது மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C-3697)

# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

**போக்குவரத்து நடவடிக்கைக்காக வாடகை அடிப்படையில் வான் வாகனம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளல் (சாரதியுடன்)**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் சேவையாற்றும் பொருட்டு, மாதாந்த வாடகை அடிப்படை யில் பயணிகளையும் பொருட்களையும் ஏற்றிச்செல்வதற்காக இரட்டைவழிச்சீராக்கல் வசதிகளுடன் கூடிய 8-10 இருக்கைகளைக் கொண்ட வான் வாகனம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள முத்திரையிடப்பட்ட கேள்விமனு இத்தால் கோரப்படுகின்றது.

மீளளிக்கப்படக்கூடிய ரூபா.1000/- இனை வைப்பிலிட்டு மீளளிக்கப்படாத ரூபா.500/- பணத்தைச்செலுத்தி 26.02.2016ஆந் திகதி பி.ப 2.00 மணிவரை திறந்த பல்கலைக்க ழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்திற்கு வருகைதந்து கேள்விமனுப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

முத்திரையிடப்பட்ட கேள்விமனுப்பத்திரம் இரண்டு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் கேள்விமனுப்பத்திரம் அனுப்பப்படக்கூடிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "போக்குவரத்துச்சேவையினை வழங்குவதற்கான கூறுவிலை" என எழுதி முத்திரையிட்டு 2016.02.26ஆந் திகதி பி.ப 2.00மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "உதவிப்பணிப்பாளர், யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், பிறவுண் வீதி, கொக்குவில்." என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவோ அல்லது யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் வைக் கப்பட்டுள்ள கேள்வி மனுப் பெட்டியினுள் இட முடியும். அன்றையதினம் பி.ப 2.00 மணிக்கு கேள்விமனுப்பத்திரம் திறக்கப்படும்.

பதிவாளர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,

(C-3696)

# சு.க. உறுப்பினர்கள் பிளவடைந்தால் தோல்வியைத் தவிர்க்க முடியாது

**ஷான் விஜயலால் தெரிவிப்பு**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பிளவடைந்தால் தோல்வியைத் தவிர்க்க முடியாது என தென் மாகாண முதலமைச்சர் ஷான் விஜயலால் டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுதந்திரக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பல்வேறு கட்சிகளாக பிளவடைந்தால் அது சுதந்திரக் கட்சிக்கு பாரிய இழப்பாகவே அமையும்.

இலங்கை அரசியல் வரலாற்றில் முற்போக்குச் சக்திகள் பிளவடைந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் தேர்தல் தோல்வியை சந்திக்க நேரிட்டுள்ளது.

கட்சியின் உறுப்பினர்கள் பிளவடைந்தால் அது கட்சி எதிர்பார்க்கும் நன்மைகளைப் பெற்றுக்கொடுக்காது.

எனவே, இந்த விடயங்களை கருத்திற்கொண்டு சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டுமென இதன்போது தெரிவித்துள்ளார். (இ)




# வடக்கு தமிழ் மக்களின் கதாநாயகன் பிரபாகரன்

## கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

**விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனே வடக்கிலுள்ள தமிழ் மக்களின் கதாநாயகனாக இருந்தார் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

மகிந்த ஆட்சியை வெளிப்படையாக கண்டிக்கும் வகையிலேயே, மக்கள் உங்களைத் தோற்கடித்தனர் என்று நினைக்கிறீர்களா என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

“வடக்கு மாகாணத்தில் தேர்தல் முடிவுகளை ஆய்வு செய்தால், மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக மக்கள் வாக்களித்தனர். இது ஒன்றும் ஆச்சரியமில்லை.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டமை இதில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது. அங்குள்ள மக்கள் பிரபாகரனால் மூளைச் சலவை செய்யப்பட்டவர்கள்.

அங்குள்ள மக்களின் கதாநாயகனாகவே பிரபாகரன் இருந்தார்” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(இ)

# எமில்காந்தனின் பயணத்தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும்

தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவராக அடையாளப்படுத்தப்படும் எமில்காந்தனின் பயணத் தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட போது வீடமைப்பு திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 169 மில்லியன் ரூபா மோசடி செய்யப்பட்டதாக ராடா நிறுவனம் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களில் ஒருவராக எமில்காந்தன் கருதப்படுகின்றார்.

குறித்த காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண நிதிப் பொறுப்பாளராக எமில்காந்தன் கடமையாற்றியிருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

எமில்காந்தனுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள பயணத் தடையை நீக்குமாறு அவரது சட்டத்தரணி நீதிமன்றில் நேற்று முன்தினம் முன்வைத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

எமில்காந்தன் நீதிமன்றில் முன்னிலையாக தயார் எனவும் அவருக்கு எதிரான வெளிநாட்டுப்பயணத்தடையை நீக்குமாறும் நீதிமன்றில் சட்டத்தரணிகள் கோரியிருந்தனர்.

எனினும் இந்தக் கோரிக்கையை கொழும்பு கோட்டை நீதவான் பிரியந்த லியனகே நிராகரித்துள்ளார். (இ)

# ஊழியர்கள் பற்றாக்குறை விநியோகிக்கப்படாத நிலையில் இலட்சக்கணக்கான கடிதங்கள்

விநியோகிப்பதற்கு தாமதம் ஏற்பட்டுள்ள சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் கடிதங்கள் மத்திய தபால் பரிமாற்றத்தில் தேங்கியுள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி சுட்டிக் காட்டியுள்ளது.

இவற்றுள் சுமார் ஒரு இலட்சம் சாதாரண கடிதங்களும் காணப்படுவதாக முன்னணியின் இணை ஏற்பாட்டாளர் சிந்தக்க பண்டார தெரிவித்தார்.

சுமார் 50 ஆயிரம் வெளிநாட்டுக் கடிதங்களும் மத்திய தபால் பரிமாற்றத்தில் தேங்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த கடிதங்களை விரைவில் பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கான ஊழியர்கள் மத்திய தபால் பரிமாற்றத்தில் இல்லையென ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணை ஏற்பாட்டாளர் கூறினார்.

மத்திய தபால் பரிமாற்றத்திற்கு நாளாந்தம் சுமார் இரண்டு இலட்சம் முதல் இரண்டரை இலட்சம் வரையான பதிவுத் தபால்கள் வந்து சேர்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையின் கீழ், மத்திய தபால் பரிமாற்றத்தில் இரண்டாம் நிலை தபால் உத்தியோகத்தர்கள் 155 பேருக்கான வெற்றிடம் நிலவுவதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணை ஏற்பாட்டாளர் சிந்தக்க பண்டார சுட்டிக் காட்டினார்.

இந்த விடயம் குறித்து தபால்மா அதிபர் ரோஹண அபேரத்ன தெரிவிக்கையில்,

மத்திய தபால் பரிமாற்றத்தில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது மற்றும் ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான செயற்பாடுகள் குறித்து தபால் தொழிற்சங்கங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்துரையாடியுள்ளதாக தபால்மா அதிபர் இதன் போது கூறினார்.

எவ்வாறாயினும், மத்திய தபால் பரிமாற்றத்தில் நிலவும் பிரச்சினைகளுக்கு எதிர்வரும் புதன்கிழமைக்குள் உரிய தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தபால் சேவைகள் அமைச்சர் அப்துல் ஹலீம் தெரிவித்தார். (இ)

# அதிவேகப் பாதையால் 50 ஆயிரம் வழக்குகள்

(கொழும்பு)

2015 ஆம் ஆண்டின் தெற்கு அதிவேகப் பாதை மற்றும் கட்டுநாயக்க அதிவேகப் பாதை ஆகியவற்றில் இடம்பெற்ற விபத்துக்கள் மற்றும் அது சம்பந்தமான அறிக்கையை இலங்கை பொலிஸ் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

தெற்கு அதிவேகப் பாதையில் மாத்திரம் பயங்கர விபத்து சம்பவங்கள் 03 இடம்பெற்றுள்ளன. அதில் இரு பெண்கள் உட்பட மூவர் உயிரிழந்திருப்பதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இதுதவிர தெற்கு அதிவேகப் பாதையில் இடம் பெற்ற விபத்து சம்பவங்களில் சிறு காயங்களுக்கு உள்ளான 55 பேர் பதிவாகியுள்ளதுடன், கட்டுநாயக்க அதிவேகப் பாதையில் 07 பேர் சிறு காயங்களுக்கு உள்ளாகிய தாக பதிவாகியுள்ளது.

அத்துடன் தெற்கு அதிவேகப் பாதையில் அதி வேகமாக வாகனங்களை செலுத்திய மற்றும் ஏனைய குற்றங்கள் தொடர்பாக 32,263 வழக்குகளும், கட்டுநாயக்க அதிவேகப் பாதையில் 18,423 வழக்குகளும் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

# மனதில் பொறாமைத் தீ மூளாமல் இருக்க விளையாட்டுப் போட்டிகள் உதவுகின்றன

**விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு**

மற்றவர் வளர்ச்சி கண்டு மனதில் பொறாமைத் தீ மூளாமல் இருக்க விளையாட்டுப் போட்டிகள் உதவுகின்றன என்று வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றும்போது,

வெற்றி தோல்விகளைச் சமமாக ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் வேண்டும். அடுத்தமுறை எம்மால் இன்னமும் சிறப்பாகச் செய்யமுடியும் என்று நினைத்தால் தோல்வி மனப்பாங்கு இல்லாமல போய்விடும். தோல்வி மனப்பான்மையை வளர்த்துக் கொண்டால் அடுத்தவர் வெற்றியையோ வளர்ச்சியையோ பார்த்துப் பொறாமை கொள்ள நேரிடும்.

மற்றவர் வளர்ச்சி கண்டு மனதில் பொறாமைத் தீ மூளாமல் இருக்க விளையாட்டுப் போட்டிகள் உதவுகின்றன. விளையாட்டுகள் உடலுக்கு ஆரோக்கியத்தை மாததிரம் வழங்குவதில்லை. நற்பண்புகளையும் கற்றுத் தருகின்றன. விளை யாட்டுப் போட்டிகளில் ஈடு படும்போது ஒவ்வொருவரும் தாம் வெற்றி பெற வேண்டும் என்று நினைக்கின்றனர். குழுப்போட்டிகளில் ஈடுபடும்போது நான் என்பது மறைந்து நமது குழு வெறறி பெற வேண்டும் என்ற மனப்பாங்கு வளர்கிறது. பாடசாலையில் மாணவர்களுக்கிடையில், இல்லங்களுக்கிடையில் போட்டி மனப்பான்மை நிலவினாலும் பாடசாலைகளுக்கிடையான போட்டிகள் என்று வரும்போது வேறுபாடுகள் மறந்து எமது பாடசாலை வெற்றிபெற வேண்டும் என்று மனம் அவாவுறுகிறது. இத்தகைய விளையாட்டுப் போட்டிகள் மாணவர்களிடையே கூட்டாக இயங்கும் மனப்பாங்கைத் தோற்றுவிக்கும். கூட்டு மனப்பாங்கு தோல்வி உணர்வை இல்லாமல் செய்து வெற்றியில் நானும பங்காளன் என்ற உணர்வைத் தோற்றுவிக்கும். இந்த உணர்வு தனிமனித ஆளுமை விருத்திக்கும், சமூக வளர்ச்சிக்கும் அவசியம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# யோசித மீதான விசாரணைகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

கடற்படை லெப்டினனட் யோசித ராஜபக்ஷவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வந்த அனைத்து விசாரணைகளையும் இடைநிறுத்தியுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

யோசித தற்போது பணச்சலவை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளமையை அடுத்தே தமது விசாரணைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி தெரிவித்துள்ளார்.

யோசிதவின் கல்வித்தரம் மற்றும் கடற்படைக்கு அறிவிக்காமல் அவர் 70 தடவைகள் வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டமை தொடர்பில் கடற்படையினர் ஏற்கனவே விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்களில் பெரும்பாலும் யோசிதவின் குற்றங்கள் நிரூபிக்கக் கூடிய வகையில் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)



பக்தி எழுச்சியுடன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பமான அனைத்துலகச் சைவ மாநாட்டின் நேற்றைய இரண்டாம் நாள் அமர்வில் இடம் பெற்ற ஆய்வு அரங்குகளின் காட்சியை படத்தில் காணலாம்.

## 2 இலட்சம் பேருக்கு அ.அட்டை இல்லை

நாட்டில் தேசிய அடையாள அட்டை இல்லாத நிலையில் சுமார் 2 இலட்சம் பேர் காணப்படுவதாக குறிப்பிட்டுள்ள அமைச்சர் எஸ்.பி. நாவின்ன, அடையாள அட்டை உள்ளோருக்கும், இல்லாதோருக்கும் மூன்று மாத காலப் பகுதியினுள் இலத்திரனியல் அடையாள அட்டை வழங்கப் படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரனவினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர், தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் குறித்து சரியான தகவல் கிடையாது. அடையாள அட்டைபெற விரும்பாதோர், வெளிநாட்டில் பிறந்தோர், பிறப்புச் சான்றிதழ் விபர மற்றோர் என பலர் இருக்கிறார்கள்.

இதில் பிறப்புச் சான்றிதழ் விபரமற்றவர்களுக்கு மாற்று வழியினூடாக அடையாள அட்டை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 15 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் அடையாள அட்டை வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

## இந்து ஆலயத்தை உடைத்து நகை, பணம் கொள்ளையடிப்பு

(கொழும்பு)

தலவாக்கலை லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லிந்துலை மட்டுக்கலை மேற்பிரிவு தோட்டத்தில் உள்ள ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம் உடைக்கப்பட்டு ஆலயத்தில் இருந்த உண்டியல் பணம் மற்றும் அம்மன் கழுத்தில் இருந்த தாலி, ஏனைய பொருட்களும் திருடப்பட்டுள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு கடந்த மாதம் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் இடம்பெற்று தொடர்ச்சியாக மண்டலாபிஷேகம் இடம்பெற்று வந்த நிலையில், நேற்றுமுன் தினமும் பூஜைகள் இடம்பெற்று பொதுமக்கள் பூஜை வழிபாட்டில் ஈடுபட்டு வீடு திரும்பிய பின்னரே ஆலயம் உடைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

## மரண அறிவித்தல்

### ஸ்ரீமதி சுப்பிரமணியக் குருக்கள் அமிர்தகுணவல்லி (பங்கஜம்)



ஸ்ரீமதி சுப்பிரமணியக் குருக்கள் அமிர்தகுணவல்லி 13-02-2016 சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் இறைபதமடைந்த அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ இ.சுப்பிரமணியக் குருக்களின் அன்புப் பாரியாரும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியக்குருக்கள்- அன்னலட்சுமி அம்மாள் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதிக் குருக்கள்-புவனேஸ்வரி அம்மாள் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான ரேவதி, இரவிநாத சர்மா மற்றும் முரளீதரக் குருக்கள் (பிரதமகுரு, அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயம்), சுகந்தி, பகீரதி (ஆசிரியர், யா/கனகரத்தினம் ம.ம.வி- இயக்குநர், கீதவாகினி இசைக்கல்லூரி நல்லூர்க் கிளை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவசுப்பிரமணிய சர்மா, அனுராதா ஆகியோரின் அன்பு மாமியாரும் சுகன்யா, ஸ்ரீவித்யா-கமலேஸ்வர சர்மா, ஸ்ரீபிரணவரூபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இராஜாராமின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இல.144, நெடுங்குளம் வீதி, அரியாலையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
பிரம்மஸ்ரீ சு.முரளீதரக் குருக்கள்
தொடர்புகளுக்கு - 0779582338 , 0212216588

(3596)



26 வருடங்களாக உள்செல்ல முடியாதிருந்த பலாலி உயர் பாதுகாப்பு வலயப்பகுதியை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்ஜன் இராமநாதன் நேற்று பொதுமக்களுடன் இணைந்து நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். அப்பகுதியில் அமைந்துள்ள குளத்து கண்ணகி அம்மன் ஆலயம் மற்றும் சென் றோசாரி தேவாலயம் ஆகியவற்றில் வழிபாடாற்றிய பின்னர் பொதுமக்கள் தமது பூர்வீக இடங்களையும் பார்வையிட்டனர்.

# தம்மாலோக்க தேரரை கைது செய்ய பணிப்புரை

(கொழும்பு)

யானைக்குட்டி ஒன்றை அனுமதிப்பத்திரம் இல்லாமல் வைத்திருந்த குற்றச்சாட்டின பேரில் உடுவே தம்மாலோக்க தேரரை சந்தேகநபராக கருதி அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் சீ.ஐ.டி.க்கு பணிப்புரை வழங்கியுள்ளார். தம்மாலோக்க தேரர் குற்றம் புரிந்துள்ளார் என்பதற்கான போதிய ஆதாரங்கள் உள்ளதாகவும் சட்டமாஅதிபர் குறிப்பிட்டுள்ளார்.

தேரர் தம்வசம் வைத்திருந்த யானைக் குட்டியன் பெறுமதி 5.9 மில்லியன் ரூபாய்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த யானைக குட்டி கடந்த ஜனவரி28ஆம்திகதியன்று பொல்ஹேக கொட அலன் மதினியாராமய விஹாரையின் உட்பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. (இ)


## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42 ஆவது வீதியில் 3 ஆம் இலக்க தொடர்மாடி இணைந்த குளியலறையுடன் கூடிய 2 அறை வீடு நாள்/கிழமை/மாத வாடகைக்குண்டு.

தொடர்பு:- 077 837 8597

(3451)


# விண்ணப்பங்கள் கோரல்

திறந்த போட்டி பரீட்சையொன்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மே மாதத்தில் கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

ஆண் மற்றும் பெண் இருபாலாரிடமிருந்தும் இப் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவுத் திகதியன்று (2016.03.14) 22 வயதுக்கு குறையாதவராகவும் 28 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் பின்வரும் கல்வித் தகைமைகளை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(அ) அங்கீகரிக்கப்பட்டதொரு பல்கலைக்கழகத்தில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அத்துடன்

ஆ) க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஆங்கில மொழியில் ஆகக்குறைந்தது திறமைச்சித்தியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இக.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தியினை பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக்கான கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம் த.பெ.இ. 1503, கொழும்பு என்ற விலாசத்திற்கு 2016.03.14 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

மேலதிக தகவல் 12.02.2016 இல் வெளியான வர்த்தமானிப் பத்திரிகையை பார்வையிடவும்.

(இ)


BLOOMING BUDS

The Wisdom of Children

## BLOOMING BUDS INTERNATIONAL E CAMPUS

PV 94034

ENGLISH MEDIUM TEACHER TRAINING DIPLOMA PROGRAMME

பயிற்சியின் மூலம் ஆசிரியர்களை சேர்த்துக் கொள்ளல்

## 12 Months

### தகைமைகள்

- க.பொ.த சாதாரண தரம் 6 பாடங்களிலை திறமைச்சித்தி மற்றும் க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல் வேண்டும்.
- ஆங்கில பாடத்தில் குறைவானவர்களிற்கு 60 நாட்களிற்கு ஆங்கிலப்பயிற்சி. கொடுக்கப்படும்
- பயிற்சி கிழமையில் 5 நாட்கள் என்ற அடிப்படையில் 10 மாதங்களிற்குக் கொடுக்கப்படும.
- பயிற்சி முடிவடைந்த பின்னர் எமது கிளை நிறுவனங்களில் வேலைக்கு அமர்தப்படுவீர்கள்.
- போயாதினம் உட்பட அரசாங்கவிடுமுறை தவிர ஏனைய நாட்கள் காலை 8.30- 5.00வரை வேலை நாட்களாகும்.

### மேலதிகமாக

சிங்களக் கல்வி மற்றும் கனணி கற்கை நெறியும் இணைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா, சிங்கள டிபளோமா (பேசும் ஆங்கிலம் அடங்கியது) ஆங்கில இலக்கிய டிப்ளோமா, சுயதிறன் விருத்தி டிப்ளோமா என்பன இலவசமாக கற்பிக்கப்படும்

ஐந்து வருடங்களாய் சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளுக்காக பயிலுனர் ஆசிரியர்களை பயிற்றுவித்து எமது நிறுவனம் நாடெங்கிலும் ஆங்கிலம் கற்றலிலும் கற்பித்தலிலும் பேசுவதிலும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் குறைப்பாடுகள் நிவர்த்திசெய்யும் முகமாக எல்லா மாகாணங்களிலும் எங்களது 45 புதிய நிறுவனங்களுக்கு 300 ஆசிரியர்களை இணைத்துக்கொள்ள முன் வந்துள்ளோம்

பயிற்சியின் பின்னர் மாதாந்தக் கட்டணம் 34,000 ஐ சம்பளமாகக் கொடுத்து உங்களை எங்கள் நிறுவனத்தின் சிறந்த ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுக்க நாங்கள் தயார்

கற்கை நெறிக்கான கட்டணங்களுக்கு வங்கிகடன் ஏற்பாடு செய்து தரப்படும்
(நிபந்தனைக்கு உட்பட்டது *)

உங்கள் விண்ணப்பத்தினைப் பிறப்பு அத்தாட்சி பத்திரம் தராதரப்பத்திரக் குறிப்புப் பிரதி எடுத்து அத்துடன் (9x4) அளவுள்ள தபாலுறையில் 45.00 மேல் மூலையில் 01-11 ஆம் வகுப்பு வரை என்று எழுதி பதிவுத்தபாலில் அனுப்பவும்.

பதிவுத்தபாலில் அனுப்பவேண்டிய முகவரி
Officer.
Blooming Buds International
Teacher Training School
390/2/1 Baseline Road,
Dematagoda, Colombo-09
www.bloomingbudescampus.com

No.390/2/1, Baseline Road Dematagoda
Colombo- 9 .
T.P :0113 054641
071-5669641,077-1529731
(சி-3689)

Thavadi Road
Suthumalai South Manipay
Jaffna
021 225 6641. 071 566 9641


# இராசி பலன்

14.02.2016
(மாசி 02,ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு,
சஷ்டி காலை 8.47 மணிவரை
சப்தமி பின்னிரவு 6.31 மணிவரை
அச்சுவினி முற்பகல் 9.46 மணிவரை
சுபநேரம் 9.33-11.03 மணிவரை
இராகுகாலம்- 5.03-6.33 மணிவரை
ரத சப்தமி, காதலர் தினம்

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| கேது சூரி | கிரகநிலை சந்திராஷ்டமம் அத்தம், சித்திரை | | |
| புத சுக் | | | குரு ராகு |
| | சனி | செவ் | |

**மேடம்** திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம்,சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**இடபம்** பிரியமான சிலருக்காக சில செயல்களைச் செய்ய முற்படுவீர்கள், வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு உட்பட நேரிடலாம்.

**மிதுனம்** பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும்.

**கடகம்** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், நண்பர்கள் மத்தி யில் பாராட்டும் புகழும் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** மறைமுகப் போட்டிகள் மாறும், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், ஆதாயம் தரும் பயணங்கள் இடம் பெறலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும்.

**கன்னி** மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஒரு வழியில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் செலவாகலாம், பிரயாண பயமுண்டு, முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

**துலாம்** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம், பணவரவு திருப்தி தரும் வகையில் அமையும், உடன் பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ்பெறுவீர்கள், மைத்துனர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும்.

**மகரம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கும்பம்** பக்குவமாய்ப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவார்கள்.

**மீனம்** பொது வழியில் பாராட்டும் புகழும் கூடும் நாள், குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்கும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு, முயற்சிகளில் முன்னேற்றமுண்டு.

வளவன்

## சைவ மாநாட்டின் மூன்றாம் நாள் அமர்வு இன்று

யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை நடத்தும் முதலாவது அனைத்துலகச் சைவ மாநட்டின் மூன்றாம் நாள் அமர்வில் ஆய்வடங்கல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணிவரை நடைபெறவுள்ளது.இந்த ஆய்வு அரங்குகள் 8 அரங்குகளாக 8 மண்டபங்களில் நடைபெறவுள்ளன.

இதற்கமைய காலை 9 மணிக்கு புவியியல் துறை மண்டபம் இல.2 இல் நடைபெறும் பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் அரங்கிற்கு பேராசிரியர் கே.இராமநாதன், கலாநிதி திருமதி ஜெ.இராசநாயகம் ஆகியோர் தலைமைதாங்கவுள்ளனர்.

காலை 9 மணிக்கு பொருளியல் துறை மணடபம் இல. 02 இல் நடைபெறும் சுவாமி விபுலாநந்தர் அரங்கிற்கு சிரேஷ்ட பேராசிரியர் நா.சணமுகலிங்கன், பேராசிரியர் சி.மௌனகுரு ஆகியோரின் தலைமையில் இடம்பெறும்.

காலை 9 மணிக்கு புவியியல்துறை மண்டபம் இல. 03 இல் நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அரங்கிற்கு பேராசிரியர் கி.விசாகரூபன், திருமதி சாந்தினி கேசவன் ஆகியோர் தலைமைதாங்கவுள்ளனர்.

காலை 9 மணிக்கு கலைபீட விரிவுரை மண்டபம் இல.410 (மூன்றாம் மாடி) இல் நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் அரங்கிற்கு பேராசிரியர் ஏ.என். கிருஸ்ணவேணி, எஸ்.எஸ் உதயகுமார் ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 10.45 மணிக்கு புவியியல்துறை மண்டபம் இல.02 இல் நடைபெறும் பேராசிரியர் கைலாசநாத குருக்கள் அரங்கிற்கு பேராசிரியர் வ.மகேஸ்வரன், பேராசிரியர் சு.ரமேஷ் ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 10.45 மணிக்கு புவியியல்துறை மணடபம் இல.03 இல் நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அரங்கிற்கு சிரேஷ்ட பேராசிரியர் ஜீ.பாஸ்கரன், கலாநிதி ரி.கருணாகரன் ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 10.45 மணிக்கு பொருளியல்துறை மணடபதில் நடைபெறும் சுவாமி விபுலாநந்தர் அரங்கிற்கு பேராசிரியர் எஸ். கிருஷ்ணராஜா, பேராசிரியர் மா. இரகுநாதன் ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 10.45 மணிக்கு கலைப்பீட விரிவுரை மண்டபம் இல.410 (மூன்றாம் மாடி)இல் நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் அரங்கிற்கு கலாநிதி நா.வி.மு.நவரத்தினம், கலாநிதி திருமதி அ.சத்தியசீலன் ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதனைத்தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு மாலை அமர்வாக மேனாள் பீடாதிபதி கலைப்பீடம் பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ண ஐயர் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தகைசார் பேராசிரியர் சி.பத்மநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் மேனாள்துணைவேந்தர் நா.சண்முகலிங்கன் ஆகியோர் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் க.பாஸ்கரன்,அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் துணைத் தலைவர் சா.தில்லைநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்புரைஞர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கிலத்துறை மேனாள் விரிவுரையாளர் சிவத்தமிழ் செல்வர் ச.விநாயகமூர்த்தி, தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான தலைவர் செஞ் சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வரவேற்புரையினை யாழப்பாணப்பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை தலைவர் சிவசிறி.ச.பத்மநாபன் நிகழ்த்தவுள்ளார்.

ஆசியுரைகளை அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன ஆன்மீகச்சுடர் தொண்டுநாதன் சுவாமிகள்,நல்லூர் சின்மயாமிஷன் வதிவிட ஆச் சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்ய சுவாமிகள், சைவக் குருமார் ஒன்றிய முதலவர் சிவஸ்ரீசதாமகாலிங்க சிவகுருக்கள்,லண்டன் என்பீல்ட நாகபூஷணி அம்பாள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இ.கமலநாதக் குருக்கள் ஆகியோர் வழுங்கவுள்ளனர்.

வாழ்த்துரைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மேனாள் பதில் துணை வேந்தர் இ.குமாரவடிவேல், யாழ்ப்பாண பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் சு.மோகனதாஸ், யாழ்ப்பாண இந்து நாகரிகத்துறைமேனாள் தலைவர் திருமதி கலைவாணி இராமநாதன் நிகழ்த்தவுள்ளார்.மாநாட்டு தலைமையுரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மேனாள்பீடாதிபதிப.கோபாலகிருஸ்ண ஐயர் நிகழ்த்தவுள்ளார்.

மாநாட்டு கலை நிகழ்வுகளாக உமாசுதன், சாந்தரூபன் ஆகியோரின் யோக அசைவுகளும் யாழ்ப்பாணப பலகலைக்கழக நடனத்துறை மாணவர்களின் நாட்டிய நாடகமும் இடம்பெறவுள்ளன.

நன்றியுரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் மா.வேதநாதன் நிகழ்த்தவுள்ளார். (இ)

## எழில் பூக்கள் அறிமுக விழா

அவுஸ்திரேலியாக் கவிஞர் தம்பிள்ளை நந்திவர்மனின் எழில் பூக்கள் என்ற கவிதை நூல் இசைக்குறுந்தகடு அறிமுகவிழா இன்று 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை4 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (இ)

## அரசியல் சீர்திருத்தங்கள் தொடர்பில் கருத்தறியும் அமர்வுகள் 15, 16-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில்

அரசியல் சீர்திருத்தங்கள் தொடர்பில் பொதுமக்கள் கொண்டுள்ள யோச னைகளை முன்மொழிவதற்கு அரசியல மைப்பு சீர்திருத்த ங்கள் மீதான பொது மக்கள் யோசனைகள் குழு செயலகத்தினால் நடத்தப் படவுள்ள பொது மக்களுக்கான மாவட்ட அமர்வுகள் நாளையும் நாளை மறுதினமும் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவிருக் கின்ற இவ் அமர்வுகள் இரண்டு நாட்களும் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.30மணி வரை நடைபெறவுள்ளது.

இவ் அமர்வுகளில் பொது மக்கள் பங்குபற்றி அர சியலமைப்புச் சீர்திருத்தங்கள் மீது கொண்டுள்ள யோசணைகளைமுன்மொழியமுடியும்.

பொது மக்கள் ஒவ்வொருவரும் தமது வாய்மொழி மூலமான தமது யோச னைகளை குழுவிற்கு எடுத்துரைக்கும் போது அது தொடர்பா ன எழுத்து மூலமான பிரதியையும் சமர்ப்பிக்க வேண்டும்.

இருபது உறுப்பினர்கள் கொண்ட இக் குழுவானது அமைச்சரவை யின் அங்கீகாரத்துடன் நியமிக்கப் பட்டுள்ளது.இக்குழுவானது அரசியலமை ப்புச் சீர்திருத்தங்களுக்கான முன் மொழிவுகளை பொது மக்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நியமிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தொடர்புகளுக்கு 01124 3 7676, 077 386 8563 என்ற தொலை பேசி இலக்கங்களுடன் Constitutional Reforms @gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியுடனும் தொடர்பு கொள்ள முடியும்.

நேரடி விபரங்களுக்கு தவிசாளர், அரசியலமைப்புச் சீர்திருத்த ங்கள் மீதான பொது மக்கள் யோசனைகள் குழு செயலகம், விசும்பாய, ஸ்ரோபிள்ஸ் வீதி, கொழும்பு-02 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ள முடியும். (இ-5)




### வட.சுகாதார அமைச்சு,பல்கலை. மருத்துவபீடம்,குடும்ப மருத்துவத்துறை நடத்தும்

## ஆரோக்கிய நடை பயணம் நாளை

வடமாகாண சுகாதார அமைச்சும்,யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறையும் இணைந்து மாபெரும் ஆரோக்கிய நடையபணத்தையும் மாகாண ஆரோக்கிய விழா கண்காட்சியையும் ஏற்பாடு செய்துள்ளதாக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

இன்றைய நவீன உலகில் நடுத்தர மற்றும் குறைந்த வருமான நாடுகளில் மக்களின் இறப்பிற்கான முக்கிய காரணியாக தொற்றா நோய்களே தோற்றம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. தொற்றாநோய்களைப் பொறுத்தமட்டில் இதய நோய்கள்,நீரிழிவு,உயர் குருதி அமுக்கம், புற்றுநோய்கள் மற்றும் சுவாசநோய்கள் பிரதான பங்கெடுக்கின்றன.

மேற்குறிப்பிட்டநோய்கள் பெரும்பாலும் பொதுவான ஆபத்துக்காரணிகளை தவிர்ப்பதன் மூலம் தடுக்கப்படக் கூடியதாக உள்ளதோடு இந்நோய்களை ஆரம்பத்தில் இனங்காண்பதன் மூலமும் சர்ரான உடற்பயிற்சி,ஆரோக்கிய உணவுப்பழக்கங்கள் மற்றும் சிகிச்சைகள் மூலம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்.

எனவே இதனை கருத்தில் கொண்டு வடமாகாண சுகாதார அமைச்சும்,யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறையும் இணைந்து 35ஆம் அணி மருத்துவ மாணவர்கள் ஊடாக தொற்றா நோய்களிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கான ஆரோக்கிய வாழ்க்கை முறைகள் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளனர்.

வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி மாகாண ஆரோக்கிய விழா-2016 எனப்பெயரிடப்பட்டு கடந்த பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி ஆரோக்கிய உணவு சமையல் போட்டி ஆரம்பமாகியிருந்தது. அடுத்து நாளை 15 ஆம் திகதி ஆரோக்கிய நடை பயணமும் தொடர்ந்து 18, 19,20 ஆம் திகதிகளில் யாழ். மருத்துவப் பீடத்தில் மாகாண ஆரோக்கிய விழா கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆரோக்கிய நடை பயணம் மக்கள் நடைபயிற்சியிலீடுபடுவதை தூண்டுவதற்காகவும் தொற்றாநோய்களை தடுப்பதில் உடற்பயிற்சியின் பங்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் மேற்கொள்ளப் படுகின்றது.

மேற்படி நடை பவனியானது நாளை காலை 8 மணிக்கு யாழ்.பண்ணையிலுள்ள வடமாகாண சுகாதார பணிமனையில் ஆரம்பமாகி முற்பகல் 10 மணிக்கு யாழ். மருத்துவபீட விளையாட்டு மைதானத்தை வந்தடையும். எனவே பொதுமக்கள் அனைவரும் இந்நடை பவனியில் பங்குபற்றி பயனடையுமாறு வேண்டப்படுகின்றனர்.

மருத்துவபீடத்தில் மாசி மாதம் 18,19,20 ஆம் திகதிகளில் நடக்கவிருக்கும் மாகாண ஆரோக்கிய விழாவில் ஆரோக்கிய உணவுகள்,சிற்றுண்டிகள் மற்றும் பானங்கள் தயாரிப்பு முறைகள்,சிறுவர்களுக்கான உணவு தயாரிக்கும் முறைகளும் பாரம்பரிய உணவு தயாரிக்கும் முறைகளும் தொற்றாநோய்த் தடுப்பில் அவற்றின் பங்கும் இவ்வாறு தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் காட்சிப்படுத்தவும் ஏற்பாடாகி இருக்கின்றது.அத்துடன் இவ்வுணவு வகைகளை ருசித்துப்பார்ப்பதற்கான அரிய சந்தர்ப்பமும் கண்டுகளிப்பவர்களுக்கு கிட்டும்.

மேலும் சேதன முறையிலான வீட்டுத் தோட்டம் அமைத்தல் பற்றி இவ் விழாவில் செயன்முறை விளக்கமளிக்கப்படும்.

உடற் பயிற்சி மற்றும் வாழ்க்கைமுறை சீரமைப்பு இந்நோய்களை கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கெடுக்கின்றது. இதனை கருத்தில் கொண்டு உடற்பயிற்சி மற்றும் வாழ்க்கைமுறை சீரமைப்பு பயிற்சிகளும் கலந்து கொள்வோருக்கு வழங்கப்படவுள்ளது.

ஆரம்பத்தில் இந்நோய்களை கண்டறிந்தால் குணப்படுத்துவது இலகுவானதாகும். எனவே வருகைதரும் அனைவரும் தங்களை பரிசோதனை செய்துபார்த்துக் கொள்ளமுடியும். இவற்றை இலவசமாக பெற்றுக்கொள்ள முடிவது ஒரு கொடையாகும். இதற்கான ( Screening) ஏற்பாடுகளையும் ஏற்பாட்டுக்குழு சிறப்புற வடிவமைத்திருக்கிறது.

சிறுவர் முதற் கொண்டு வயோதிபர் வரை அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற பலதரப்பட்ட ஆரோக்கிய வாழ்க்கைமுறைகள் 6 தனித்தனி பிரிவுகளாக காட்சிப்படுத்தப்படுகின்றன. மேற்படி தினங்களில் முற்பகல் 10 மணி முதல் இரவு 8 மணி வரை மேற்படி கண்காட்சி பிரமாண்டமாக நடைபெறுவதுடன் முற்றிலும் இலவ சமாக காணவருபவர்கள் காட்சிகளை பார்வையிட முடியும்.

இக்கண்காட்சியில் ஆரோக்கிய உணவு தயாரித்தல் மற்றும் வாழ்க்கைமுறை மறு சீரமைப்பு அடங்கிய கையேடுகள் மற்றும் இறுவெட்டுக்களையும் பெற்றுக் கொள்ளமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)





வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் நவாலி பால் கொள்முதல் நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நிலையத்தைத் திறந்து வைத்தார். நிகழ்வில் மானிப்பாய் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் அ.ஜெபநேசன் மற்றும் முன்னாள் உறுப்பினர்களான ஆ. சி.கணேசவேல் சிவபாதம்,பொ.கனகரத்தினம் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.



மு/உடையார்கட்டு தமிழ் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற போது...

# முள்ளிவாய்க்காலில் ஊடுருவியுள்ள சீனர்களை அடையாளம் கண்டு விசாரணை செய்யவேண்டும்

## சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

2009 இல் யுத்தம் முடிவடைந்த பின்னர் பெருந்தொகையான சீனர்கள் நந்திக்கடலில் மீன்விட வருவதாக கூறி தங்களது கட்டுப்பாட்டில் அப்பிரதேசத்தை வைத்துக் கொண்டு தடயங்களை அழிக்க முற்பட்டியிருக்கின்றார்கள். எனவே ஐ.நா.விசாரணைக்கு முன்னர் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் ஊடுருவிய சீனர்களும் அடையாளம் காணப்பட்டு விசா.ரணை செய்யப்படவேண்டுமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

மு/உடையார்கட்டு தமிழ் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 8 ஆம் திகதி நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனது உரையில்,

உடையார்கட்டு பிரதேசத்தில் பொதுக்காணிகள் யுத்த காலத்தில் பொதுமக்களால் ஊடறுக்கப்பட்டது ஒரு பாரிய சமுதாய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. எனவே பொதுமக்களுக்கு பாதிப்பில்லாத வகையில் பிரதேச அபிவிருத்திக்குரிய காணிகளை விடுவித்து கொடுப்பது எமது கடமையாகும்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக முன்னாள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டதே மக்ஸ்வெல் பராக்கிரம பரணகமவின் தலைமையிலான ஆணைக்குழுவாகும். இது தமிழ் மக்களைப் பொறுத்தவரை உண்மைகளை மூடி மறைக்கும், நீதியை மறுக்கும் பக்கச்சார்பான ஒரு ஆணைக்குழு என்பதை அவரகளின் பல நடவடிக்கைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

2013 ஒக்டோபர் 31ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்பட வேண்டிய மேற்படி ஆணைக்குழுவின் செயற்பாடு இன்றும் தற்போதைய அரசிலும் காலநீடிப்புக்களைக் கோரி வருவதில் இருந்து இவர்களது இழுத்தடிப்புகள் எமது தமிழ் மக்களின் நீதியைத் தரப்போவதில்லை என்பது திண்ணமாகிறது. ஐ.நா. சபையின் மனித உரிமை ஆணைக்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி கலப்பு நீதிமன்றம் மூலம் எமக்கான நீதி உடன் நிலைநாட்ட நல்லாட்சி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம ஒரு தடவை ஊடகத்துக்கு வெளியிட்ட அறிக்கையில் ,படையினருக்கு எதிராக தமது செயற்பாடு அமையாது என தெரிவித்தது. அதில் இருந்தே இது ஒரு அநீதிக்கு துணைபோகும் ஆணைக்குழு என்பது தமிழர்பால் உள்ள நிலைப்பாடு. பல இடங்களில் காணாமற போன தங்கள் உறவுகளைப்பற்றி ஆதங்கப்பட்ட மக்களுக்கு ஆடு தரலாம், கோழி தரலாம் என்று கூறியிருக்கிறார். மரண சான்றிதழ் தரலாம் எனவும் கூறியிருக்கிறார்கள்.

40 ஆயிரம் தமிழர்கள் முள்ளிவாய்க்கால் மண்ணில் கொல்லப்பட்ட போது ஐ.நா. சபையின் தாருஸ்மான் அறிக்கையுடன் காணொலி, செயற்கைக்கோள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரும் வெறுமனே அது பொய் என்கிறார்.

எனவே இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவை தவறான உதாரணமாகாமல் உடன் அதை இரத்துச் செய்துவிட்டு சர்வதேச உள்ளக நீதிபதிகளை கொணட கலப்பு நீதிமன்றத்தை நியமித்து ஐ.நா. மன்ித உரிமை ஆணைக்குழுவின் ஆலோசனைப்படி செயற்பட முன்வர வேண்டும.

2009 இல் யுத்தம் முடிவடைந்த பின் பெருந்தொகையான சீனர்கள் நந்திக கடலில் மீன் விட வருவதாக கூறி தங்களது கட்டுப்பாட்டில் அப்பிர தேசத்தை வைத்துக் கொண்டு தடயங்களை அழிக்க முற்பட்டிருக்கின்றார்கள். எனவே ஐ.நா. விசாரணைக்கு முன் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் ஊடுருவிய சீனர்களும் அடையாளம் காணப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும் அவர்களை அடையாளம் காண்பதற்கு உரிய சர்வதேச தொழில் நுட்ப ஆலோசனைகள் வழுங்கப்பட வேணடும். சீனர்களின் போரிற்கு பின்னரான ஊடுருவல் எமது மக்களுக்கு தெரிந்த விடயமும் ஆகும் என தெரிவித்தார். (2)

# வீதியைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட கோப்பாய் தெற்கு நித்தானிலுப்பை வீதியானது நீண்ட காலமாக திருத்தப்படாது காணப்படுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதியைதிருத்தம்செய்து தருமாறு வலி.கிழக்கு பிர்தேச சபை,கோப்பாய் உப அலுவலகம்,கோப்பாய் தெற்கு கிராம சேவையாளர், கோப்பாய் பிரதேச செயலகம் மற்றும் அரசியல் கட்சிகளிடமும் அப் பிரதேச பொதுமக்களால் பல தடவைகள் எழுத்து மூலம் கோரிக்கைகள் விடுத்த போதும் எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப் படவில்லை.மழைக் காலங்களில் பலதரப்பட்ட சிரமங்களை போக்குவரத்தின் போது மக்கள் எதிர்நோக்குகின்றனர்.

எனவே கவனிப்பாரின்றிய நிலையில் காணப்படுகின்ற இவ்வீதி தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொண்டு வீதிக்குத் தார் இட்டு செப்பனிட்டுத் தருமாறு பாதிக்கப்பட்ட பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5)

# அவசர கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்டதாரி மாணவர் ஒன்றியம் எதிர்வரும் 20 ஆம் திகதி வெளிவாரி பட்டதாரி மாணவர்களுக்கான பட்டச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு ஒன்றை நடத்தவுள்ளது.

இதற்கான நிகழ்வு ஒழுங்கமைப்பு தொடர்பாக கலந்துரையாட B.B.M.1st Batch B.A2011 B.com-2010,2011 ஆகிய கல்வியாண்டு பட்டச் சான்றிதழ் பெறும் பட்டதாரி மாணவர்களை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ)

# மகிந்தவுக்கு சட்ட ஆலோசனை காரியாலயம் தேவைப்படுகிறது

## சுஜீவ சேனசிங்க சுட்டிக்காட்டு



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு தற்போது சட்ட ஆலோசனை காரியாலயமொன்றே தேவைப்படுவதாக சர்வதேச வர்த்தக விவகார இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லயில் நேற்று முன்தினம் மகிந்தவினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட காரியாலயம் தொடர்பில் கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்த ராஜபக்ஷவிற்கு தற்போது தேர்தல் நிர்வாக காரியாலயமொன்றை விடவும் சட்ட ஆலோசனை வழங்கும் காரியாலயமொன்றே தேவைப்படுகின்றது.

அரசியல் அதிகாரம் இருந்த காலத்தில் மகிந்தவும் அவரது குடும்ப உறுப்பினரகளும் மேற்கொண்ட மோசடிகள் தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த தகவல்களின் அடிப்படையில் எதிர்காலத்தில் விசாரணைகள் நடத்தப்பட உள்ளன.

இவ்வாறான விசாரணைகளின் போது மகிந்தவிற்கு சட்ட ஆலோசனை மிகவும் தேவைப்படும். புதிய தகுதியான சட்டமா அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார். சுயாதீனமான முறையில் அவர் செயற்படுவார்.

சட்டத்தை உரிய முறையில் சட்டமா அதிபர் அமுல்படுத்துவார்.

மகிந்தவினால் நியமிக்கப்பட்டவர்கள் உயர் பதவிகளை வகித்து வந்த காரணத்தினால் மகிந்த தரப்பிற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை காணப்பட்டது என இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ)


இவர்களுக்கு மணமகள் தேவை

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா:22செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L இத்தாலி PR
தொ.இ: B/3921

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 45செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L இத்தாலி PR
தொ.இ: B/3926

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 18
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:BSc/பொறியியலாளர் சிங்கப்பூர்
தொ.இ: B/3929

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 42
உயரம்: 180cm
தகைமை/தொழில்:BSc
லண்டன் NOT PR
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: B/3931

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 17
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BSc
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: G/4474

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 67செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/Lவங்கியாளர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/4476

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 52செவ் 2 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: G/4482

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 15
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/4484

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# இலங்கை போர்க்குற்ற விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்கு;

## இலங்கையின் புதிய நிலைப்பாட்டை தெளிவுற அறிந்து கொள்ள வருகிறார் ஷெய்ட் அல் ஹுசேன்

வெளிநாட்டு நீதிபதிகளை அழைப்பதா? இல்லையா?... இதுவே தற்போது இலங்கையில் விடை தேடப்பட வேண்டிய கேள்வியாக தோன்றுகிறது. மனித உரிமைகளுக்கான ஐ.நா. தூதுவர் இளவரசர் ஷெய்ட் அல் ஹுசேன் தனது இலங்கை விஜயத்தின்போது இந்தக் கேள்விக்கான விடையை தேடிக்கொள்ள முயற்சிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்தமாத இறுதி நாட்களில் இலங்கைக்கான தமது விஜயத்தினை ஆரம்பித்த அவரது நிகழ்ச்சி நிரலின்படி முதலில் அரசுடனும் அடுத்து எதிர்க்கட்சியுடனும் கொழும்பில் பேச்சுவார்த்தைகள் மேற்கொண்ட பின்னர் உள்ளூர் சிவில் சமூகத்தினரையும் சந்திக்கவிருக்கிறார்.

கடந்தமாத இறுதி வாரங்களின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அவர்கள் ‘BBC’ க்கு அளித்திருந்த பேட்டியொன்றில் போர் அத்துமீறல்கள் மட்டிலான உள்ளக விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதி ஈடுபடுத்தப்படுவதை தான் அனுமதிக்கப்போவதில்லை என்று கூறியதைத் தொடர்ந்து “நீதிபதிகள் தலையீடு” என்ற இவ்விடயம் மீண்டும் தீப்பிடித்து எரியத் தொடங்கியுள்ளது.

எப்படியும் சில நாட்களின் பின்னர் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்கள் ‘சனல்-4’ ஊடகத்திற்கு கருத்துக் கூறியபோது, ‘உள்ளக விசாரணை பொறிமுறை சர்வதேசத்தின் தலையீட்டை அரசு மறுப்பதற்கில்லை’ என்று கூறியிருந்தார். யுத்த மீறல் குற்றச்சாட்டுக்கள் மட்டில் விசாரணை மேற்கொள் வதென்ற இலங்கையினது கடப்பாட்டின் உறுதிப்பாட்டிற்கு அனுசரணையாக இலங்கையின் புதிய அரசுக்கு ஆதரவளித்து வரும் சர்வதேச சமூகத்துடன் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் உள்ளூர் சிவில் சமூகம் போன்றவை மத்தியில் மேற்படி ஜனாதிபதியின் கூற்றானது கடுமையான பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்தியிருந்தது.

மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் போன்ற இலங்கை மீதான குற்றச்சாட்டுக்கள் மட்டில் பொருத்தமான புலன் விசாரணைகளை மேற்கொள்வதற்கென விசேட ஆலோசனைகளுடன் கூடிய சட்ட ரீதியான பொறிமுறையொன்றை ஏற்படுத்துவதென இணக்கம் காணப்பட்டிருந்தது. அதன்படி குறையற்ற மற்றும் பாகுபாடற்ற தன்மைகளுக்கு பெயர் போன விதத்தில் தனித்துவம் வாய்ந்தவர்களும் பக்கச் சார்பற்றவர்களுமான தனியாட்கள் தலைமையில் வழக்காளி தரப்பு சுயாதீன சட்ட நிறுவனங்களை உள்ளடக்கும் விதத்தில் நம்பக விதத்தில் பொதுநலவாய அமைப்பு மற்றும் வெளிநாட்டு நீதிபதிகளது அவதானிப்புடன் அங்கீகரிக்கப்பட்ட வழக்கறிஞர் மற்றும் வழக்காளிகள் தரப்பு சட்டவாளர்கள், புலன் விசாரணையாளர்கள் போன்றோரையும் உள்ளடக்குவது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

எனவே, விசாரணைகளுக்கு வெளிநாட்டு நீதிபதிகளை வரவழைப்பதில்லை என்ற ஜனாதிபதி சிறிசேனாவின் வாக்குமூல அறிக்கையானது ஜெனீவா தீர்மானத்தின் பிரதான அனுசரணையாளராகிய ஐக்கிய அமெரிக்க இராச்சியம் உள்ளிட்ட பல தரப்புக்களதும் குற்றச்சாட்டுக்களையும் ஈர்த்திருந்தது.

மீதான இத்தீர்மானம் கடந்த ஒக்டோபர் ஐ.நா. மனித உரிமைகள் சபை நிகழ்ச்சித் திட்டத்தில் அதிகாரபூர்வமாக சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு முன்னர் இலங்கையுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு அதன் வரைபு ஏற்றுக்கொள்ளப்பட்டே சபையில் சமர்ப்பிக்கப்பட்டு இறுதியில் சபையால் அங்கீகரிக்கப்பட்டது. இந்தப் பேச்சுவார்த்தைகளிலெல்லாம் ஹாப்பர் தொடர்ந்து பங்குபற்றியிருந்தார். மேற்படி விசாரணைப் பொறிமுறைகளில் வெளிநாட்டு நீதிபதிகள் உள்வாங்கப்பட் டால் மட்டுமே அதன் நம்பகத் தன்மை ஏற்புடையதாயிருக்க முடியும் என்றே தீர்மானமும் கூறுகிறது.

வதில் சர்வதேசத்தின் பங்காற்றலை வழங்குவதென்ற ஐ.நா. தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டிரு ந்த (2016 21 இல் BBC) வாய்மூல அறிக்கை மட்டில் மேற்படி, உலகத் தமிழர் பேரவை தனது ஆழ்ந்த கவலையையும் அதிருப்தியையும் வெளிப்படுத்தியுள்ளது. இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. சபையின் 30/1 இல. தீர்மானத்தை நேரடியாக மீறும் செயலே ஜனாதிபதியின் மேற்படியான அறிவிப்பு என்று அது கூறுகிறது. பிரத்தியேகமான சர்வதேச சட்ட நியமங்களைத் தவிர்த்துக் கொள்ளும் இலங்

**சண்டே லீடர் பத்திரிகையில் “இலங்கை போர்க்குற்ற விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்கு: இலங்கையின் புதிய நிலைப்பாட்டை தெளிவுற அறிந்துகொள்ள வருகிறார் ஷெயிட் அல் குசேயின்” எனும் தலைப்பில் ஈஸ்வரன் ரட்ணம் எழுதிய அரசியல் கட்டுரையின் தமிழாக்கம்...**

கடந்த வருடம் ஜெனீவாவில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமை சபை கூட்டத் தொடரின் போது இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறை வேற்றப்பட்ட தீர்மான மொன்றினூடாக இதற்கான இலங்கை யின் கடப்பாடு உறுதிப் படுத்தப் பட்டதாயிருக்கிறது.

இந்த தீர்மானத்தில் யுத்த மீறல்கள், மான நீதி நடைமுறைகள் இலங்கையின் நீதிக்கான சட்டநடைமுறைகளில் பங்களிப்புச் செய்வதை முக்கியத்துவப்படுத்தும்



இலங்கை யின் போர்க் குற்ற மீறல் கள் தொடர் பான பொறுப்புக் கூறல் பொறிமுறை யின் நம்பகத் தன்மையின் பொருட்டு, வெளிநாட்டு நீதிபதிகளின் பிரசன்னம் அதில் உள்ளடக்கப்படுவது கட்டாயமானதென ஜெனீவாவிலிருக்கும் ஐ.நா.மனித உரிமை சபைக்கான அமெரிக்க தூதுவர் கெய்த் ஹாப்பர் கூறுகிறார். இலங்கை

புலம்பெயர் தமிழ் குழு அமைப்புக்களுள் இலங்கை அரசுடன் பேச்சுக்கள் நடத்தி வந்த முன்னணி அமைப்பொன்றாக விளங்கும் ‘உலகத் தமிழர் பேரவை’ இலங்கை மீதான ஐ.நா. தீர்மானம் மட்டில் அது வழங்கியிருந்த வாக்குறுதிகளின்படி விதிவிலக்கில்லாமல் அதன் அனைத்து அம்சங்களையும் முழுமையாகவே நடைமுறைப்படுத்துவதை சர்வதேச மனித உரிமைகளுக்கான ஐ.நா.தூதுவர் இளவர சர் செய்ட் அல் ஹுசேன் உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டுமென்று பேரவை அவரைக் கேட்டுக்கொண்டிருந்தது.

இலங்கையில் இடம் பெற்ற யுத்தத்தின் போது அதில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளுமே அதன் போது இடம் பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்குமான நீதிநடை முறைகளுக்கு உட்படுத்தப்படுவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை வழங்கு

கையின் பற்றாக்குறையான நீதியியல் சட்ட நடைமுறைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வளவோ கூடுதலாக தேவைப்படும் நீதி நியாயங்களையோ அவை மட்டிலான பொறுப்புக்கூறலில் நம்பிக்கையையோ தானும் அளிக்கு மென்பது முடியாத காரியமென்பதுடன் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் குற்றங்கள் மட்டில் வழக்காளி தரப்புக்குத் தேவைப்படும் சட்ட விபரங்களையும் கொடுக்காது என்பது ஐ.நா. தீர்மானத்திற்கும் அப்பால் மனித உரிமைகளுக்கான ஐ.நா....... தூதுவர் ஹுசெய்ன் அவர்களது அலுவலக அறிக்கையொன்றின் மூலமும் தெளிவுபடுத்தப்பட்டதாகவேயிருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களுடன் தமிழ் சமூகமுங்கூட நீதிக்கான தமது தேடல்களில் குறிப்பாக சர்வதேசத்தின் பங்களிப்பு அத்தியாவசியமானதென்றே கருதுவதாக உலகத் தமிழர் பேரவையும் குறிப்பிட்டுக் கூறியிருந்தது.

10ஆம் பக்கம் பார்க்க....

# காணாமற்போனவர்களின் குடும்பங்களுக்கு உதவ சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தயார் - அரசாங்கம்

(கொழும்பு)

**போரினால் காணாமற்போனோரின் குடும்பங்களுக்கு உதவியளிப்பதில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட தயார் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது என வெளியுறவுத்துறை அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.**

இலங்கையில் காணாமற்போனோர் குடும்பங்களுக்கான தேவைகள் என்ற தலைப்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் வெளியுறவுத்துறை அமைச்சு கலந்துரையாடல் ஒன்றை நடத்தியது.

இந்தக் கலந்துரையாடல் பிரதி வெளியுறவுத்துறை அமைச்சர் ஹர்ச டி.சில்வாவின் தலைமையில நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது கருத்துரைத்த பிரதியமைச்சர், காணாமற்போனோர் தொடர்பான விடயத்தில் அரசாங்கம் முக்கியத்துவம் செலுத்தி செயற்பட்டு வருவதாக குறிப்பிட்டார. சர்வதேச செஞ்சிலுவை சங்கம் இலங்கையில் 25 வருடங்களாக மேற்கொணடு வரும் சேவைகளை அவர் பாராட்டினார்.

கலந்துரையாடலில் கருத்துரைத்த சர்வதேச செஞ்சிலுவை சங்க தூதுக்குழுவின் தலைவர் கிளரி மேருட், காணாமற்போனோர தொடர்பாக அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு தமது செயற்பாடுகள் உதவியாக இருக்கும் என்று தெரிவித்தார். (இ)

# கைவிலங்கு இன்றி சிறையில் யோஷித



சிறைச்சாலைக் கைதிகள் அனைவருக்கும் பொதுவான கட்டுப்பாட்டு விதிகள் யோஷித ராஜபக்ஷ விடயத்தில் முற்றாக தளர்த்தப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

சி.எஸ்.என். தொலைக்காட்சி நறுவனத்தின் ஊடாக பணச்சலவை குற்றச்சாட்டுக்கு இலக்காகியுள்ள யோஷித ராஜபக்ஷ தற்போது கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அங்கு அவர் ஏனைய தடுப்புக் கைதிகளை விட சுதந்திரமாக சுற்றித்திரிவதுடன், விசேட மின்விசிறி வசதி, தூங்குவதற்கான மெத்தை என பவற்றையும்பெற்றுக்கொண்டுள்ளார்.

அத்துடன் சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்படும் போதும், மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்து வரப்படும் போதும் அனைத்துக் கைதிகளுக்கும் கைவிலங்கு மாட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது சிறை விதியாகும்.

இந்த விதியும் யோஷித விடயத்தில் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளது. கடந்த 11 ஆம் திகதி அவர் நதிமன்றத்திலிருந்து சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது பெயரளவுக்கு கையில் விலங்கு மாட்டப்பட்டிருந்ததுடன், அது சாவி கொடுத்து பூட்டப்பட்டிருக்கவில்லை. இதுகுறித்த சமீப காட்சிப்படம் ஒன்று சிங்கள ஊடகம் ஒன்றில் வெளியாகியுள்ளது.

சரிவர பூட்டப்படாத விலங்கு யோஷிதவின் உள்ளங்கைப் பகுதியில் அழுத்திக் கொண்டிருப்பது குறித்த புகைப்படத்தில் தெளிவாக காணப்படுகின்றது.

இந்நிலையில் இது குறித்து பல்வேறு தரப்பினரும் விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றனர். நாட்டின் சட்டங்கள் நபர்களின் செல்வாக்கைக் கொண்டு மீறப்படுவதானது நல்லதன்று என்றும் அவர்கள் கருத்துரைத்துள்ளார்கள். (இ)

# சபாநாயகரின் தீர்மானத்தை சவாலுக்குட்படுத்திய கம்மன்பில

(கொழும்பு)

சபாநாயகர் கரு ஜயசூரிய எடுத்த தீர்மானத்தை நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில நேற்று முனதினம் சவாலுக்கு உட்படுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மொழி மூல கேள்வி ஒன்றின் போது ஏற்பட்ட விவாதத்தில் கம்மன்பில, சபாநாயகரின் தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தினார்.

உலக தமிழர் பேரவை உட்பட சில அமைப்புகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளதா? என உதய கம்மன்பில, கேள்வி எழுப்பியதுடன் வெளிவிவகார பிரதியமைச்சர் ஹர்ச டி.சில்வா பதிலளித்துள்ளார்.

வழங்கப்பட்ட பதிலால் திருப்தியடையாத அவர், மீண்டும் கேள்விகளை எழுப்பிய நிலையில், சபையில்சூடான வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனையடுத்து இடையீட்டு கேள்வி ஒன்றை எழுப்ப சபாநாயகர், கம்மன்பில சந்தர்ப்பம் வழங்கிய போதிலும் அவர் அதனை நிராகரித்துள்ளார். சபாநாயகரின் தீர்மானத்தை தான் சவாலுக்கு உட்படுத்துவதாகவும் கம்மன்பில தெரிவித்தார். (இ)



# வாரம் ஒரு தகவல்

## எது விரதம்?

துறவியானவர் கடுமையான விரதங்களை மேற்கொண்டு வருபவர். அவர் சூரிய உதயத்தின் பின்னர் உணவு உண்பதையோ தண் ணீர் பருகுவதையோ செய்யமாட்டார். அவரது நெறி தவறாத தன்மையை போற்றும் வகையில் அண்ட வெளியில் பகல் வேளை யில் ஒரு விண்மீன் தோன்றியது.

இவ்வாறான சிறப்புக்கள் பொருந்திய அந்தத் துறவி ஒரு நாள் அருகிலிருந்த ஒரு மலையின் உச்சிக்கு செல்ல வேண்டியிருந்தது.

அந்தத் துறவியுடன் அவ்வூரில் வசிக்கும் சிறுமி தானும் வருவ தாக அடம்பிடித்துக் கொண்டிருந்தாள்.

''சரி வா...'' என அழைத்துக் கொண்டு இருவரும் பயணத்தை தொடங்கினார்கள். சிறிது தூரம் சென்றதும் வெயில் அதிகமாக இருந்த தனால் தாகம் எடுத்தது.

தண்ணீர் கேட்ட சிறுமிக்கு துறவி தண்ணீர் கொடுத்து பருகுமாறு கூறினார்.

நீங்கள் தண்ணீர் குடித்தால் தான் தானும் குடிப்பதாக சிறுமி கூறினாள்.

"அம்மா நான் விரதத்தில் இருக்கின்றேன். சூரிய உதயத்தின் பின் எதுவும் உட்கொள்வதில்லை எனத் துறவி கூறினார்.

அவற்றைப் பற்றிய சிந்தனையே இல்லாத சிறுமி துறவியிடம் நீங்கள் தண்ணீர் குடித்தேயாக வேண்டும் என அடம்பிடித்தாள். துறவிக்கு குழப்பம் ஏற்பட்டது.

ஒரு புறம் தம்முடைய விரதம். மறுபுறம் சிறுமியின் தாகம்.... எதைப் பார்ப்பது என்றே அவருக்கு புரியவில்லை.

சிறிது யோசனை செய்த பின்னர் துறவி தண்ணீரை எடுத்துப் பருகினார். சிறுமியும் தண்ணீரைப் பருகித் தாகத்தைத் தீர்த்தார். ஆனால் துறவியோ தலை குனிந்தபடியே ஆகாயத்தைப் பார்க்க துணிவில்லாமல் நடந்து சென்றார்.

''விரதத்தை விட்டு விட்டோமே... எனவே, வானில் காணப்பட்ட அந்த விண்மீனும் மறைந்து போயிருக்கும்'' என நினைத்துக் கொண்டிருந்த துறவி, மலை உச்சிக்கு சென்ற பின் தற்செயலாக ஒருமுறை தலை நிமிர்ந்து வானைப் பார்த்தார்.

அங்கே... இரண்டு விண்மீன்கள் இவருக்காக ஒளி வீசிக் கொண்டிருந்தன.

# சந்திரிகா பாராட்டு

அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க அரசாங்கம் சட்டதிருத்தம் ஒன்றை கொண்டு வந்துள்ளமை குறித்து பாராட்டுவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போதைய பெண்களுக்கு பொருத்தமான உரிமைகளை இந்த திருத்தச் சட்ட மூலம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்திற்கு கொண்டு வந்த போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொண்ட விதம் குறித்து கவலையடைவதாகவும் சந்திரிகா தெரிவித்தார்.

பெண்களின் விடுதலைக்காக முக்கியமான திருத்தச் சட்டம் ஒன்று நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் இருக்கும் போது, அரசியல் சந்தர்ப்பவாதத்தை நிலைநாட்டிக் கொள்ளும் நோக்கில் செயற்படுவது கவலைக்குரியது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

# மூவின மக்களும் இணைந்து பணியாற்ற வேண்டும்-றிசாத்

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள இணைந்து பணியாற்றினால் கூட்டுறவுச் சங்கங்களை தரம் உயர்த்த முடியுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸின்தலைவரும்கைத்தொழில், வர்த்தக அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மதுராங்குளி பலநோக்கு கூட்டுறவு சங்க சமாசத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அமைச்சர், அங்கு கூட்டுறவு சங்கத்தை பார்வையிட்ட பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக் கூட்டத்தில உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் அரசியல் வரலாற்றிலே எதிரும் புதிருமாக இருந்த இரு பெரும் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்று சேர்ந்து இந்த ஆட்சியை நடத்துவதே ஒற்றுமைக்கு பிரதான முன்னுதாரணம்.

கூட்டுறவே நாட்டுயர்வு. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்ற பழமொழிக்கு அமைய நாம் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும். அனைத்து சமூகங்களின் பங்களிப்பும் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கு பிரதானமானது.

அந்த வகையில் சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் இணைந்து பணியாற்றினால் கூட்டுறவுச் சங்கங்களை மேலும் விருத்தி செய்யலாம்.

கூட்டுறவு வங்கிகளில் இஸ்லாமியர்கள் அதிகம் ஆர்வம் காட்டாமைக்கு வட்டி ஒரு பிரதான காரணமாக அமைந்து விடுகின்றது. எனவே தான், கூட்டுறவு வங்கிகளில் இஸ்லாமியர்கள் ஈடுபாடு காட்டும் ஷரியாவின் அடிப்படையிலான கொடுக்கல்-வாங்கல்களை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளேன்.

கூட்டுறவுத்துறையில் கடந்த காலங்களில் நிலவிய ஊழல், மோசடிகளை இல்லாமலாக்கி இதனை புனிதமான ஒரு துறையாக மக்களுக்கு பயனளிக்கக் கூடிய ஒரு துறையாக, நியாயமான விலையில் பொருட்களை வாங்குவதற்குரிய ஒரு துறையாக மாற்றியமைக்கும் வேலைத்திட்டங்கள் எம்மிடம் உண்டு.



இலங்கையிலுள்ள அநேகமான கூட்டுறவுச் சங்கங்கள் மாகாண சபையின் கீழ்வருவதனால், எனது அமைச்சின் கீழ் அவைகளுக்கு நேரடியாக உதவமுடியாதசிக்கல்கள்இருக்கின்றன.

கூட்டுறவுத் துறையில் புதிய கடன் திட்டங்களை உருவாக்கி மக்களுக்கு உதவ இருக்கின்றோம். எதிர்காலத்திலே இந்தத் துறையில் மறுமலர்ச்சி ஏற்படக்கூடிய வகையில் புதிய செயலணி ஒன்றை உருவாக்கியுள்ளோம்.

அந்த செயலணியில் துறை சார்ந்த நிபுணர்கள் பலர் உள்ளடக்கப்பட்டுள்ளனர். அதன் மூலம் நட்டத்தில் இயங்கி வரும் கூட்டுறவுத் துறையினை இலாபமீட்டும் துறையாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# இலங்கை போர்க்குற்ற விசாரணைகளில்...

**(08 ஆம் பக்கத்தில் வெளியான கட்டுரையில் தொடர்ச்சி)**

2015 ஒக்டோபரில் இடம்பெற்ற ஐ.நா.மனித உரிமை சபையின் 30 ஆவது கூட்டத் தொடரின்போது இருதரப்புக்களினதும் இணக்கப்பாட்டுடன் நிறைவேற்றப்பட்ட குறித்த அந்த ஐ.நா. தீர்மானம் மட்டிலான இலங்கையின் கடப்பாடுகளிலிருந்து அரசு பின்வாங்குவதாகவே தோன்றுவதாக கூறும் உள்ளூர் அமைப்புக்களும் மனித உரிமைக்கான தீவிர செயற்பாட்டாளர்களும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வாய்மூல அறிக்கையை கண்டித்திருந்தனர். ஜெனீவாவில் இணை அனுசரணையின் பேரில் தீர்மானித்து அங்கீகாரத்துடன் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானத்தின் பொறுப்பிற்குரிய தரப்பு என்ற மட்டில் அதன் சரியான நிபந்தனைகளை அரசு நினைவிற்கொள்வது மிகுந்த பயனளிப்பதாகவே இருக்கும் என்பதை இலங்கை எண்ணிப் பார்த்தேயாக வேண்டும் என இலங்கையின் 144 உள்ளூர் அமைப்புகளும் தீவிர மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும் இணைந்த விதமான ஒரு அறிக்கை மூலம் இலங்கை அரசைக் கோரியுள்ளன.

அதே அறிக்கையானது, ஜனாதிபதியவர்கள் 'BBC' ஊடகத்திற்கு அளித்திருந்த நேர்காணலைத் தொடர்ந்து வந்த ஒரு சில நாட்களில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க சனல்-04 ஊடகத்திற்கு அளித்திருந்த பேட்டியின் போது ஜெனீவாவில் இலங்கை வரித்துக்கொண்ட கடப்பாடுகளை அரசு நிறைவேற்றுமென கூறியிருந்தார். இப்படி கூறியதானது முதலில் ஏற்படுத்தியிருந்த பாதிப்புகளை சீர்ப்படுத்துவதாக இருப்பதையும் சுட்டிக்காட்டியிருந்தது.

“எப்படியும் ஜனாதிபதிக்கும் பிரதம மந்திரிக்கும் இடையிலான இந்த முரண்பாடுகள் புதியவை அல்ல என்பதுடன் 'ஐ.நா. தீர்மானம்' நிறைவேற்றப்பட்டதிலிருந்தே அதுமட்டிலான அவர்களது கடப்பாடுகள் பற்றிய அரசின் பிரபல்யமான தகவல் தொடர்பு அம்சமாகவும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது” என்பதே மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களதும் அமைப்புகளதும் இணைந்த விதமான மேற்படி அறிக்கை கூறும் மேலதிக தகவலாகும்.

'போர்க்கால அத்துமீறல்கள்' மட்டில் பொறுப்புக்கூறலின் நம்பகத்தன்மையின் பொருட்டு 'ஐ.நா.மனித உரிமை சபை ஆணை'யின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளும் பாதிக்கப்பட்டவர்களுக்காக வாதாடும் வழக்காளி தரப்பினரும் குறிப்பிடத்தக்க முக்கிய பங்கு வகிக்கின்றனர் என்பதை உறுதிப்படுத்திச் செயற்படுத்துவதன் மூலம் மேற்படி ஐ.நா. சபைக்கான தனது கடப்பாடுகளை இலங்கை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என நியூயோர்க்கில் தளங்கொண்டிருக்கும் மனித உரிமைகள் அமைப்பாகிய 'மனித உரிமைகள் கண்காணிப்பகம்' ('HRW') இலங்கையை கேட்கிறது.

இலங்கை அரசு தனது யுத்த குற்றவியல் விசாரணைகளுக்கான தனது சொந்த திட்டங்களின் கீழ் சர்வதேச பங்காற்றலுடன் உண்மை, நீதி, மீள் இணக்கப்பாடு, மீளவும் தவறிழைக்காமை போன்றவற்றை கண்காணிக்கும் ஆணைக்குழு மற்றும் காணாமற்போனோரைக் கண்டறிவதற்கான செயற்பாடுகளையும் ஆரம்பித்து அவற்றின் அடிப்படையில் தனது திட்டங்களை தானே நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன் இவையனைத்தும் ஐ.நா. தீர்மானம் மட்டிலான அதனது சொந்தக் கடப்பாடுகளுகேற்ப இருத்தல் வேண்டுமென்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் மேலும் கூறுகிறது. ஆனாலும் இலங்கையின் கடப்பாடுகள் மட்டிலான அதன் செயல் முன்னேற்றமென்பது மிகவும் மெதுவாகவே இருப்பதுடன் பெரும்பாலும் வெளிப்படைத் தன்மையற்றதாகவே காணப்படுவதாக கண் காணிப்பகம் குறிப்பிட்டுக் கூறுகிறது.

ஐ.நா. தீர்மானம் மட்டில் ஆலோசனைகளைப் பெறுவதற்கென விசேட பணி ஏற்பாடொன்று செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகார ஆணை, நிபந்தனைகள் வரையறைகள் பற்றிய தகவல்கள் பெரிதும் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே இருப்பதாக கூறும் கண்காணிப்பகம், பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது பிரதிநிதிகள் குழுக்களுக்கும் மேற்படி விடயங்கள் மட்டில் ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்படுவது பற்றிய விபரங்களெதுவும் தெரிவிக்கப்படாதபடியால் உண்மையான நீதி அவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற வெளிப்படையான நோக்கத்தின் பொருட்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த பொறிமுறை பற்றிய சிறப்பையும் உண்மைத் தன்மைகள் பற்றியும் அறிந்திராத பலரும் தாம் இதுவிடயமாக தனிமைப்படுத்தப்பட்டவர்களாகவும், விடயங்கள் தமக்கு மூடி மறைக்கப்பட்டிருப்பதாகவுமே உணர்வது அவர்களுக்கு நீதியாக அமையுமா? அந்த நீதியும் நியாய மானதாக உணரப்படுமா? (முற்றும்)

**தமிழில் யோகர்**

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனாமடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 80 | 70 | 70 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 50 | 50 | 60 | 60 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 200 | 200 | 220 | 250 | 200 |
| தக்காளி | 40 | 50 | 50 | 50 | 60 | 80 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 40 | 50 | 40 | 40 |
| கோவா | 60 | 100 | 80 | 80 | 90 | 80 | 80 |
| கரட் | 180 | 200 | 200 | 240 | 200 | 300 | 200 |
| பூசணி | 80 | 100 | 70 | 100 | 50 | 100 | 60 |
| புடோல் | 60 | 50 | 30 | 70 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 60 | 50 | 45 | 40 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 70 | 80 | 70 | 80 | 80 | 100 | 70 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 50 | 60 | 100 | 60 | 60 |
| பாகற்காய் | 100 | 100 | 80 | 80 | 80 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 70 | 100 | 120 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | — | 80 | 80 | 100 | 70 |
| பயற்றங்காய் | 120 | 120 | 140 | 120 | 120 | 120 | 150 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 | 100 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 80 | 60 | 80 | 80 | 100 | 120 | 80 |
| கறிமிளகாய் | 250 | 200 | 160 | 240 | 240 | 240 | 180 |
| முருங்கைக்காய் | 900 | 300 | 400 | 700 | 600 | 500 | 1000 |
| போஞ்சி | 60 | 100 | 70 | 70 | 100 | 100 | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | 60 | — | 80 | 70 | 60 |
| கீரை - 1பிடி | 20 | 10 | 15 | 30 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 50 | 50 | 70 | 80 | 40 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 30-45 | 50 | 45 | 35-45 | 40 |
| இராசவள்ளி | 140 | 100 | 100 | 160 | 140 | 140 | 150 |
| வெங்காயப்பூ | 60 | 50 | 80 | 80 | 100 | 100 | 80 |
| முள்ளங்கி | 30 | 40 | 30 | 40 | 60 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 50 | — | — | — | 100 | — |




- 1779 - ஹவாயில் ஆதிவாசிகளால் கப்டன் ஜேம்ஸ் குக் கொல்லப்பட்டான்.
- 1876 - எலீஷா கிறே மற்றும் அலெக்சாண்டர் கிரகம் பெல் இருவரும் வேறு வேறாக தொலை பேசிக் காண காப்புரிமம் பெற விண்ணப்பித்தனர்.
- 1879 - சிலியின் இராணுவப்படைகள் பொலீவியாவின் அன்டோபகாஸ்டா நகரைக் கைப்பற்றினர்.
- 1900 - இரண்டாம் போவர் போர்: தென்னாபிரிக்காவில் ஒரேஞ்ச் மாநிலத்தை 20,000 பிரித்தானியப் படைகள் ஆக்கிரமித்தன.
- 1918 - சோவியத் ஒன்றியம் கிரெகோரியின் நாட்காட்டியை ஏற்றுக் கொண்டது
- 1919 - போலந்து-சோவியத் போர் ஆரம்பமானது.
- 1924 - ஐபிஎம் நிறுவனம் அமைக்கப்பட்டது.
- 1929 - சிக்காகோவில் வேலண்டைன் நாளன்று "அல் காப்போன்" என்பவனின் எதிராளிகள் ஏழு பேர் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: சிங்கப்பூரில் பசிர் பஞ்சாங் என்ற இடத்தில் ஜப்பானியர்களின் தாக்குதல் ஆரம்பித்தது.
- 1946 - ENIAC என்ற முதல் தலைமுறைக் கணினி அறிமுகமானது.
- 1956 - சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது மாநாடு மொஸ்கோவில் ஆரம்பமானது.
- 1961 - 103 ஆவது தனிமம் லோரென்சியம் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1966 - அவுஸ்திரேலியாவில் முன்னர் பாவனையில் இருந்த அவுஸ்திரேலிய பவுண்டிற்குப் பதிலாக அவுஸ்திரேலிய டொலர் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1979 - ஆப்கானிஸ்தானுக்கான ஐக்கிய அமெரிக்காவின் தூதுவர் அடொல்ஃப் டப்ஸ் காபூலில் கடத்தப்பட்டார். இவர் பின்னர் காவற்றுறையினருக்கும் கடத்தல்காரருக்கும் இடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் அகப்பட்டு இறந்தார்.
- 1987 - தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி நிதர்சனம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1989 - ஜி.பி.எஸ் திட்டத்தின் 24 செய்மதிகளில் முதலாவது விண்ணில் ஏவப்பட்டது.
- 1989 - யூனியன் கார்பைட் நிறுவனம் 1984 போபால் அழிவிற்காக இந்திய அரசிற்கு 470 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நட்ட ஈடாக வழங்க சம்மதித்தது.
- 2005 - லெபனானின் முன்னாள் பிரதமர் ரஃபீக் ஹரீரி சுட்டுக் கொல்லப்பட்டார்.

**பிறப்புகள்**

- 1483 - ஸாகிருதீன் பாபர், முகலாயப் பேரரசர் (இ. 1530)
- 1869 - சார்ல்ஸ் வில்சன், நோபல் பரிசு பெற்ற இயற்பியலாளர், (இ. 1959)
- 1917 - ஹேர்பேர்ட் ஹோப்ட்மன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க கணிதவியலாளர்

**இறப்புகள்**

- 1779 - ஜேம்ஸ் குக், பிரித்தானிய கப்பற் தளபதி, நாடுகாண்பயணி (பி. 1728)
- 1968 - அ. ந. கந்தசாமி, ஈழத்து எழுத்தாளர் (பி. 1924)

**சிறப்பு நாள்**

- காதலர் தினம்

### காதலர் தினம்




புனித வேலன்டைன்நாள் அல்லது பொதுவாக வேலன்டைன் நாள். உலகம் முழுவதிலுமுள்ள மிக நெருங்கிப் பழகும் மக்கள் பலராலும் பெப்ரவரி 14 அன்று கொண்டாடப்படும் ஒரு கொண்டாட்ட நாளாகும்.

இந்நாளில் காதலர்கள் தங்கள் காதலை தெரிவித்துக் கொள்வது மரபாக இருக்கிறது. வாழ்த்து அட்டைகள், இனிப்புகள், மலர்கள் ஆகியவற்றை இந்நாளில் காதலர்கள் பரிமாறிக்கொள்கிறார்கள். வேலன்டைன் என்ற பெயருடைய இரு கிறித்துவத் தியாகிகளின் பெயர்களை அடுத்து இந்நாள் வேலன்டைன் நாள் என்றும் காதலர்களே பெரும்பாலும் இந்நாளைக் கொண்டாடுவதால் காதலர் நாள் என்றும் காதலர் தினம் என்றும் அழைக்கப்படுகிறது.

காதலர்கள் தவிர பலரும் தங்கள் அன்பை தெரிவித்துக்கொள்ளும் நாளாகவும் இது இருப்பதால் அன்பர்கள் நாள் என்றும் அழைக்கப்படுகிறது.

தோற்றத்தில் இது மேற்கத்திய உலகக் கொண்டாட்டமாக இருந்தாலும், அண்மைக் காலங்களில் உலகெங்கும் இந்நாளை கொண்டாடும் போக்கு இளைஞர்களிடையே கூடி வருகிறது.

"வாலண்டைன்கள்" வடிவத்தில் காதல் குறிப்புகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளுவதோடும் இந்த நாள் நெருக்கமாக சம்பந்தப்பட்டிருந்தது. இதய வடிவலான உருவம், புறாக்கள் மற்றும் சிறகுகளுள்ள தேவதையின் உருவம் ஆகியவை நவீன காலத்திய காதலர் தின குறியீடுகளில் அடங்கும்.

# அதிபர் தரம் 3 போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின

2015 ஆம் ஆண்டு நடந்த அதிபர் தரம் மூன்றுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இதில் வடமாகாணத்தைச் சேர்ந்த 420 பேர் தகைமை பெற்றுள்ளனர். அவர்களின் பெயர் விபரம் வருமாறு.

PIRATHEEPAN, S-KOTTI YAKADU, THONDAMANARU-773363986V, JEYATHEVAN, T-426/1, KILNAR COLLEGE LANE, JAFFNA-760250945V, VASANTHARUBAN, K.-SIRU PIDDY NORTH, NEERVELY-781032778V, THAVANADARAJAH, S. POINTPEDRO ROAD, IRUPALAI JUNCTION, KOPAY SOUTH, KOPAY-760840971V, THEVAKUMAR, S.-ANNAI ILLAM, PULOLY SOUTH, PULOLY-741400685V, SUJINTHAN, S- C/O. R. MATHIYAPARANAM, NEERVELY NORTH, NEERVELY -832723495V, SRISKANTHARAJAH, S.-1/3, CONVENT ROAD, JAFFNA-682481480V, VISUVANATHAN, P.-WORD 6, VELANAI WEST, VELANAI-756532642V, SAYANTHAN, K.- 376/15, IRUPALAI ROAD, KONDAVIL EAST, KONDAVIL- 752431078V, JEYANTHAN, F.R.J-JINVILLA, SILLALAI, PANDATHARIPU-725690800V, THUSYANTHAN, K.-NEAR THE GOVERNMENT HOSPITAL, PUTHUR EAST, PUTHUR-801322646V, NAVARAJAH, P.W.-5/10, PRESS LANE, JAFFNA- 660020853V, MANISEKARAN, S.-181/10, MURUGAMOORTHY, KOVIL LANE, NAVALY EAST,MANIPAY- 808113953V, GANNATHASAN, K.- PANNAKAM SOUTH, SULIPURAM-732042482V, PRATHEEBAN, T.-19, ASEERVATHAPPAR LANE, NALLUR, JAFFNA-780464100V, THAVANAYAGAM, S.-OLD POLICE STATION VIEW, OLD ROAD, ANAICODDAI-720551250V, MAHINTHAN, S.-48/3, MALARMAHAL ROAD, ARIYALAI, JAFFNA-733300400V, SWINAS, D.X.-7, 1ST CROSS STREET, THIRUNAGAR,JAFFNA-792484271V, NETHAJI, S.-154/32, ATHIZUDI ROAD, KANTHARMADAM,JAFFNA-760813540V, SIVASOTHY, T-27, SIVAKURANATHAR ROAD, NEERAVIADY,JAFFNA-660012591V, VAKEESAN, N.-136, COLOMBOTHURAI ROAD, JAFFNA-751441860V, KUMANAN, K.-15A, THIRUVALLU VARSALAI, KANTHARMADAM, JAFFNA- 701310446V, GOWRIHASAN, K.-34, KANA KARADNAM ROAD, ARIYALAI, JAFFNA-750804730V, SUGANTHY, A. -SUNKIANVEETHI, NAVALI SOUTH, MANIPAY-727122460V, SATHIYANANDAN, K.-MARUTHADY SOUTH, CHAVAKACHCHERI-702771781V, KRISHNAPILLAI, J.-SCHOOL ROAD, THONDAMANARU- 736982455V, VANITHA, A.- VARAKI AMMAN KOVILADY, UPAKANTHAR ROAD, KERNIADY, KOKUVIL WEST,KOKUVIL- 695840071V, ANANTHAKRISHNAN, K.-KIRAMPATHTHANAI, KARANAVAI EAST, KARAVEDDY-761770527V, BALENDRAN, L.T.-SUTHUMALAI NORTH, MANIPAY-717670833V, SACHCHITHANANTHAM, E.- WARD 1, DELFT-710010420V, KAPILAN, M.-GOWRYVASAM, URELU WEST, CHUNNAKAM- 782162187V, NANTHAKUMARAN, R.-URELU WEST,CHUNNAKAM-812863118V, KULATHEEPAN, T.-THOPPUKKADU, KARAINAGAR, JAFFNA- 792333052V SRISKANTHARAJAH, K.-ARASADY LANE, SUTHUMALAI EAST,MANIPAY-761701991V, SIVAPATHAM, L- 699/1, K.K.S. ROAD,JAFFNA- 766472745V, RATHEESKUMAR, S.-NEERVELY NORTH, NEERVELY.- 782140540V, THAVASEELAN, K.-SIVAN ROAD, URUMPIRAI EAST, URUMPIRAI,JAFFNA-743393805V, SENTHAN, A.-MUTHAGAM, CHULIPURAM EAST, CHULIPURAM- 771203434V, PARTHEEPAN, P.-THUNNALAI NORTH, KARAVEDDY-752703523V, UTHAYASEELAN, K.-ILAKADY, ALVAY EAST, ALVAY-763420973V, SRITHARAN, M.-ARASAKESARIPILLAYAR KOVILADI, NEERVELY CENTER, NEERVELY- 753560491V, BASKARAN, P.- SAVATKADU, ANAIKKODDAI- 812522230V, MAHINTHAN, K.-VAKAYADY CENTER, MADDUVIL SOUTH, CHAVAKACHCHERI- 792612865V, SIVAGNANAM, V.-958/9, K.K.S.ROAD, JAFFNA- 763652610V, THARANEETHARAN, M.-ANNA FACTORY, INUVIL SOUTH,INUVIL- 753080112V, KARUNANANTHAN, S.-PUPATHY, ALVAY NORTH WEST, ALVAY- 762882108V, KALAIVANI, A-THIRUVARUL, ARASADY, CHANKANAI-737592081V, VASIHARRAN, R.-OLD POST OFFICE LANE, CHANKANAI EAST- 711733329V, RAVEEHARAN, U.- 32, PERINPANATHAN ROAD, CHUNDIKULY, JAFFNA- 725792590V, KALAIKUMAR, K.- 99, CHAMPION LANE, KOKUVIL EAST,KOKUVIL-702290201V, JEYARAJ, N.-OSKA LANE, URUMPIRAI SOUTH, URUMPIRAI- 782033573V, UMACHANDERAN, S.-C.C.T.M.S. LANE, KOKUVIL WEST, KOKUVIL- 752401764V, THAYALAN, Y.-70, THIRUMAKAL LANE, ARIYALAI, JAFFNA- 800713277V, REEGAN, T.H.- 49, MAVUNKARMAL ROAD, JAFFNA- 803274118V, NITHIYANANTHAN, K.-NIKE SAVASA, PLAY GROUND ROAD, KOPAY SOUTH, KOPAY- 712010991V, NITHANJALI, SR. M.-J/VEMPADY LADIE'S HIGH SCHOOL, 1ST CROSS ROAD, JAFFNA- 666910125V, MAYURAN, N.- THULASI ILLAM, THALAYADI LANE,THIRUNELVELY- 782992090V, SIVARUBAN, V- 20/1, 1ST CROSS STREET, COLOMBOTHURY, JAFFNA- 818462956V, MAHATHEVAN, T.-V.H. LANE, IRUPALAI,KOPAY- 797892319V, SHUTHARSON, P.N.-69B, CLOCK TOWER ROAD, JAFFNA-762761114V, SUTHARSHINI, J.N.- 8, VIPULANANTHAR ROAD, COLOMPUTHURAI, JAFFNA- 807142917V, KAJENTHIRAN, A.-NEERVELY NORTH, NEERVELY, JAFFNA- 843030637V, RUGUNAN, K.-POINT PEDRO ROAD, NELLIADY, KARAVEDDY- 792410162V, MUHUNTHAN, M.- FRONT OF D.S. OFFICE, SANDILIPAY-740812220V, SUTHARSAN, R. -IMAYANAN NORTH, UDUPPIDDY- 760962732V, POOBALASINGHAM, S.-KANTHAMURUGESANAR ROAD, UPYAKATHIRKAMMAM, PULOLY SOUTH, PULOLY- 760500542V, LINGANATHAS, S.- RATHY MAHAL, ALVAY.-780072482V, PAKEERATHAN, A.- NIRUVATHAMBAI, OORIKKADU, UDUPPIDDY NORTH- 691470555V, VATHSALAN, A. -NARATHTHANAI NORTH, KAYTS-801913482V, RASAPALAN, V.-RASABALAN ILLAM, THAVADY SOUTH, KOKUVIL- 745913792V ,MOHANADAS, R.S.R.-THIRUVARUL, NAVALY SOUTH, MANIPAY- 707602368V, BASKARAKURUKKAL, P.- 70, BROWN ROAD,JAFFNA- 716890902V, SHANMUGANANTHAM, T.- KURUMPAN VALAVU, EARLALAI WEST, EARLALAI-728032529V, JASOTHARAN, S. UDAYAR ROAD, KOKUVIL EAST, JAFFNA, THARMINI, A.-338, POINTPEDRO ROAD, SARALAI NORTH,CHAVAKACHCHERI-747942692V, VIJEND RAN, V.-VELLURVAI, ALVAI EAST, ALVAI- 782370707V, BALACHANDRAMOORTHY, A.-VELI KAMTHOTTAM, THUNNALAI EAST, KARAVEDDY-711103708V, THUSSANKAR, V.-THUSH MAHAL, KARAVEDDY SOUTH, KARAVEDDY- 792534155V, SANTHIRARAJAH, N.-482, NAVALAR ROAD,JAFFNA-681972277V, PUSHPAKARAN, S.D.-SILLALAI EAST, PANDATHARIPU- 812092049V, RAMESH, T- PILLAYAR KOVILADY, NAVALY SOUTH, MANIPAI-681051007V, PARANEETHARAN, S.VINAGAHAR VEETHY, NALLUR NORTH,JAFFNA- 772202776V, RAJEEVAN, A.- KULAPPIDDY ROAD, UYARAPULAM, ANAIKKODDAI- 752352038V, THILAGATHEEPAN, S.-JEEVAVASA, K.K.S. ROAD, MALLAKAM- 781243353V, THANASHANKAR, U.-16/2, SEENIAR LANE, VANNAR PANNAI,JAFFNA-832822345V, RAMANASUTHAN, V.-ARASADY, THONDAMANARU- 712774355V, ROHAN, L.I.- PANNAI ROAD, KARAMPON EAST, KAYTS-701931467V, MUGUNTHAN, S.-PATHAMENI, ATCHUVELY, JAFFNA- 802562888V, THANGARAJAH, S- VIPULANANTHAR ROAD, MATHAHAL, JAFFNA-807755145V, NADESWARAN, K.-SIVAN KOVILADY,CHAVAKACHCHERI-780810823V, PUSHPARANGAN, S-30, MARKET EAST LANE, MANIPAY- 783174359V, SUJATHEEP, S-ALAVODAI ROAD, INUVIL WEST, INUVIL-830220569V, THARMATHURAI, J- 88, 300 HOUSE SCHEME, NAVATKULY, KAITHADY-803504741V, THURESHRAM, R.- LADCHUMY BAVANAM, NEELANKULATHAL, KARANAVAY CENTER, KARAVEDDY-795843051V, PIRAKALATHAN, V-ARALY CENTER, VADDUKODDY-781392928V, BAALACHANDRAN, S.-KUMARAKODDAM, ARASADY LANE, PULOLY EAST,POINT PEDRO-700190676V, UMAHARAN, B-KURUKKAL DIVISION, KARANAVAI EAST, KARAVEDDY-781021083V, PAVANANTHAN, A- SEEMA LANE, THUNNALAI WEST, KARAVEDDY.-760912263V,ABARAJITHAN, T.-ALLARAI ROAD, MEESALAI EAST, MEESALAI-722280105V, MATHIPALAN, S.-KOOLAVADY WEST, ANAICODDAI-711420533V, SIVANANTHARAJAH, N.- 50, SUTHUMALAI SOUTH, MANIPAY,JAFFNA- 781892726V, KAMALATHASAN, P.- 37/11, 1ST LANE, BROWN ROAD, JAFFNA-752612420V, JAMES MAYSHAN, A.-1/6, WATER TANK, 1ST CROSS LANE, GURUNARAGE,JAFFNA-742052044V, JEEVANANTHAN, T.-PADDINA SALAI ROAD, MANIPAY, JAFFNA- 812402579V, MAHINTHAN, K.-VAKIADY, MADDUVIL SOUTH, CHAVAKACHCHERI- 808241684V,VIJENDRAN, L.-VARAKIAMMAN KOVILADY, KOKUVIL WEST, JAFFNA- 820914210V, KALIYUGAN, K.-70, HOSPITAL ROAD, KODDADY, JAFFNA-760551775V, MOHANA, R.-SOOLANAI, CHUNNAKAM, JAFFNA- 837785251V, JEYANANTHAN, S.-ARALY ROAD, CHANKANAI,JAFFNA-771011632V, KARUNAGARAN, K.- 138/2, CANARA LANE, UKKULANKULAM, VAVUNIYA-760663514V, SATHEESWARAN, S.-AKKADATHAR LANE, ATCHUVELY-782110853V, SUTHESKARAN, D.- MEESALAI WEST, MEESALAI-716290670V, GNANARAJAH, K.-PULAM ROAD, KAITHADY WEST, KAITHADY-772411324V, MUHUNTHARAJH, K-EASWARA VASA, MAHATHMA ROAD, NELLIADY, KARAVEDDY-773283923V, SRIKANTHARASA, K.- ARIVALAYAM, IMAYANAN,UDUPIDDY- 773334340V, SRIMURALI, T.-DR. E.M.V. NAGANATHAN ROAD, KONDAVIL EAST, JAFFNA- 721641244V, SENTHURAN, B- PILLAYAR KOVIL ROAD, EARLALI NORTH, EARLALAI-781222658V, VANAJAH, G.-ARASADY LANE, THIRUNELVELY EAST, JAFFNA- 795372067V, THULASITHASAN, S.-MEESALAI EAST,MEESALAI-780320885V, SIVARANJAN, P.-206/2, BROWN ROAD, JAFFNA- 810970189V, KRISHNATHAS, T. -UTHAYASOORIAN ROAD, UDUVIL EAST,CHUNNAKAM- 750570704V, SERARUBAN, S-OLD ROAD, KOPAY SOUTH,KOPAY- 750363598V, MATHURANTHAKAN, K.- PIRAMANAODAI, KOPAY NORTH, KOPAY,JAFFNA- 740392638V, RAGUTHEEPAN, M-LATHA BEAUTY PARLAR, MAIN ROAD, POINT PEDRO- 833130668V, RUBATHAN, M-169/B, AMPALAVANAR ROAD, UDUVIL, CHUNNAKAM- 781641960V, SRIVATHANY, S-CHURCH LANE, SANDILIPAY- 736471957V, PIREMAN, M.S.- KURINCHI, KARLI KOVILADY, STATION ROAD, KONDAVIL SOUTH, KONDAVIL-723203333V, SANJEEVAN, A.- RAMMIYAM, SIVAKAMY AMMAN KOVILADY, INUVIL EAST, INUVIL, JAFFNA-803223491V, VIMALESWARAN, M-9/7, ANNASATHTHIRA LANE, KANTHARMADAM, JAFFNA- 760064050V, THAYASEELAN, V.- NEERVELY SOUTH, NEERVELY.-790042476V, JASANTHAN, Y.-138, THIRUMAGAL ROAD, ARIYALAI, JAFFNA- 790272250V, MANOHARAN, S-146/14, ARASADY ROAD, KANTHARMADAM, JAFFNA- 762792079V, LINGARAJ, A-560, KASTHURIYAR ROAD, JAFFNA-733423471V, VINASITHTHAMBY, K.- G.P.S. ROAD, KALVIYANKADU, JAFFNA-656641169V, KAMALAVENTHAN, S- 427/3, TEMPLE ROAD, NALLUR, JAFFNA- 843162142V, SIVANAVALAN, S- MEESALAI ROAD, KACHCHAI NORTH, KODIKAMAM- 713200514V,

(தொடரும்)

# வலம்புரி செய்தியை அடுத்து கிணறு அமைக்கும் பணி ஆரம்பம்



(வற்றாப்பளை)

வலம்புரிசெய்தியைஅடுத்து கிணறு அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட முள்ளியவளை மத்தி கிராம அலுவலர் பிரிவில் புதிதாக காணிகள் வழங்கப்பட்டு யு.என்.ஹபிராட் நிறுவனத்தினால் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்ட சுமார் 30 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் கிணறுகள் இன்றி பெரும் அல்லற்படுவதாக வலம்புரி செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டது.

'வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டபோதும் குடிநீர் கிணறு இன்றி மக்கள் அவதி' எனும் தலைப்பில் கடந்த மாதம் 23 ஆம் திகதி செய்தி பிரசுரிக்கப்பட்டது.

இதனைக் கவனத்தில் கொண்ட யாழ்ப்பாணத்திலுள்ள ரிஸ்கி தொண்டுநாதர் சுவாமிகள் மனிதநேயம்எனும்அமைப்பினர் அக்கிராமத்தின் மத்திய பகுதியில் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு பொதுக் கிணறு ஒன்றை அமைத்து கொடுக்க முன்வந்துள்ளனர்.

இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்படுகின்றது. (2-310)




## வட்டக்கச்சி சந்தியில் பேருந்து விபத்து

(திருமுறிகண்டி)

கிளிநொச்சி அறிவியல் நகரில் இயங்கி வரும் வானவில் ஆடைத் தொழிற்சாலையின் ஊழியர்களை ஏற்றி வந்த பேருந்து வட்டக்கச்சி சந்திக்கு அண்மையில் விபத்துக்குள்ளானது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் நடைபெற்றது.

பனை மரங்களை ஏற்றிக் கொண்டு முன்னால் சென்ற லான்மாஸ்டரில் இருந்து பனை மரக்குற்றிகள் சரிந்து விழுந்தமையினால்குறித்த பேருந்து விபத்துக்குள்ளானது.

இதன்போது பேருந்தில் பயணித்த ஊழியர்கள் சிலருக்கு சிறு காயம் ஏற்பட்டதுடன் பேருந்தின் முன் பகுதியும் சேதம் அடைந்தது. (2-31)

# பாதுகாப்பான புகையிரதக் கடவையை அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை



(திருமுறிகண்டி)

கிளிநொச்சி பொன்னகர் பகுதியில் அமைந்துள்ள கிளி/சிவபாத கலையக அ.த.க. பாடசாலைக்குச் செல்லும் பிரதான வீதிக்கு அண்மையில் காணப்படும் புகையிரத கடவைக்கு பாதுகாப்பான புகையிரதக் கடவை அமைக்கப் படாமையால் பாதுகாப்பற்ற புகையிரத கடவையால் பயணிப்போர் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் உயிராபத்தை ஏற்படுத்தும் நிலையும் காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறித்த கடவையால் தினமும் பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள், பொது மக்கள், நோயாளர்கள், விவசாயிகள் எனப் பல தரப்பினர் பயணித்து வருகின்றனர்.

எனவே உயிராபத்தை ஏற்படுத்தும் நிலையிலுள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைக்கு பாதுகாப்பான புகையிரதக் கடவையை அமைத்து தரவேண்டுமென அப் பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

புகையிரதக் கடவைகளுக்கு பாதுகாப்பான புகையிரதக் கடவை அமைத்துத் தரவேண்டும் எனக்கோரி அண்மையில் கிளிநொச்சி புகையிரத நிலையத் திற்கு முன்பாக பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2-31)

# மாணவர்களுக்கான சதுரங்கப்போட்டிகள் கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் தடவையாக

இலங்கைப் பாடசாலைகள் சதுரங்கச் சங்கத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான தனியாள் சதுரங்கப் போட்டிகளின் மாவட்ட மட்டப்போட்டிகள் முதல் முறையாக கிளிநொச்சியில் நடைபெறவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டச் சதுரங்கச் சங்கத்தின் வேண்டுகோளுக்கமைய கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தின் ஒழுங்குபடுத்தலில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 20, 21ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இப்போட்டிகள் 7 வயதின் கீழ், 9 வயதின் கீழ், 11 வயதின் கீழ், 13 வயதின் கீழ், 15 வயதின் கீழ், 17 வயதின்கீழ், 20 வயதின் கீழ்என்ற வயதுப்பிரிவுகளில்ஆண், பெண் பிரிவுகளாக நடைபெறவுள்ளன. வயதுகள் 2016.01.01இல் உள்ளவாறாக கணிப்பிடப்படும். 20 வயதுப் பிரிவினருக்கு மாவட்டமட்டத்தில்போட்டிகள நடைபெறாது. நேரடியாக தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு பற்ற முடியும்.

15, 17 வயதுப் பிரிவுகளில முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களும். குறித்த பிரிவுகளில் போட்டிகளில் பங்கு பற்றும் 6 மாணவர்களுக்கு ஒருவர் வீதமும் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்ற முடியும்.

7, 9, 11, 13 வயதுப்பிரிவுகளில் குறிப்பிட்ட புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்கள் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்ற முடியும் இவ்விபரங்கள் போட்டி முடிவில் அறிவிக்கப்படும்.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் இலங்கைப் பாடசாலைகள் சதுரங்கச் சங்கத்தில் அங்கத்துவம் பெறுவதுடன் , பங்குபற்றும் மாணவர்களது பெயர், விபரம் அடங்கிய விண்ணப்பங்களை பொறுப்பாசிரியர் எதிர்வரும் 19ஆம் திகதி கரைச்சிக் கோட்டக் கல்வி அலுவலகத்தில் உரிய கட்டணங்களைச் செலுத்தி நேரடியாகசமர்ப்பித்தல்வேண்டும் வருகை தரும் போது குறித்த மாணவர்களது வயதினை உறுதிப்படுத்துவதற்காக அவர்களது பிறப்புச் சான்றிதழ்களையும் கொண்டு வருதல் வேண்டும் என கிளிநொச்சி மாவட்டச் சதுரங்கச் சங்கத் தலைவர் தி.சிவரூபன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பப்படிவங்கள் உரிய பாடசாலைகளுக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் , இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 077 699 1078 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-277)

# பரீட்சை அனுமதி அட்டைகள் மாணவர்களுக்கு உரிய காலப்பகுதியில் வழங்கப்பட வேண்டும்

**வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் அறிவுறுத்து**

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வியமைச்சின் கீழுள்ள 1ஏபி, 1சி, (தேசிய பாடசாலை உட்பட) அனைத்துப் பாடசாலைகளிலும் நடப்பாண்டில் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக பாடசாலை அதிபர்களுக்கு வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் குறிப்பிடுகையில்,

நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள அனைத்து மாணவர்களுக்கும் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் உரிமையுண்டு.

எனவே அனைத்து மாணவர்களும் விண்ணப்பிக்க அனுமதி வழங்க வேண்டும்.

அனுமதிஅட்டைகள்கிடைக்கப் பெற்றதும் அவை உரிய காலப்பகுதியினுள் மாணவர்களுக்குவழங்கப்படவேண்டும்.

எக் காரணம் கொண்டும் எந்தவொரு மாணவருக்கும் அனுமதிஅட்டை வழங்குவதை நிறுத்தி வைப்பது அல்லது தாமதப்படுத்துவது தவிர்க்கப்படவேண்டுமென அவர் அறிவித்துள்ளார். (2-15)

# பழைய முறிகண்டி கிராமத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு



முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச சபைக்குட்பட்ட பழைய முறிகண்டி கிராமத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம் பெறுவதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆறு வருடங்களாக மணல் அகழ்வு நடைபெற்று வந்ததாகவும் அதனை முல்லைத்தீவு அரசாங்க அதிபர், அதிகாரிகள் ஆகியோருக்கு தெரியப்படுத்தி சிலகாலம் குறைவடைந்திருந்த நிலையில் மீண்டும் மண்அகழ்வு நடைபெறுவதாக கிராம மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இச் சட்டவிரோத மண் அகழ்வால் சூழல் பாதிப்புகளை எதிர்நோக்குவதாகவும் இது சம்பந்தமாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-31)

# பதவி நிலை வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(மல்லாவி)

கிளிநொச்சிமாவட்டதேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் மாவட்ட காரியாலயத்தில் இலத்திரனியல் போதனாசிரியர், தன்னியக்க வாகனத்திருத்துநர் போதனாசிரியர், பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகிய பதவிநிலை வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட நைற்றா முகாமையாளர் ஏ.பி. அல்பிரட் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இலத்திரனியல் போதனாசிரியரின் தகைமையாக இலத்திரனியல் துறையில் NVQ - 04 சான்றிதழ் அத்துடன் துறை சார்ந்த ரீதியில் இரண்டு வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

தன்னியக்க வாகனத் திருத்துநர் போதனாசிரியரின் தகைமையாக தன்னியக்க வாகனத் திருத்துநர் துறையில் NVQ-04 சான்றிதழ் அத்துடன் துறைசார்ந்த ரீதியில் இரண்டு வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

பாதுகாப்பு உத்தியோகத்தரின் தகைமையாக க.பொ.த. சாதாரண தரம் அத்துடன் துறைசார்ந்த ரீதியில்ஒருவருட அனுபவம்இருத்தல்வேண்டும்.

பதவி வெற்றிடங்களுக்கான முடிவுத்திகதி எதிர்வரும் 17 ஆம்திகதி புதன்கிழமையாகும்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை,ஏ-9வீதி, ஆனந்தபுரம்,கிளிநொச்சி என அவர் அறிவித்துள்ளார். (2-15)

# க.பொ.த. உ/தரம்,சா/தரம்,தரம் ஐந்து பரீட்சைகளுக்கான திகதிகள் அறிவிப்பு

(மல்லாவி)

இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் நடப்பாண்டில் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப்பரீட்சை, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, பொது தகவல்தொழில்நுட்பப் பரீட்சை, க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை ஆகிய பரீட்சைகள் நடைபெற உத்தேசித்துள்ள காலப்பகுதிகளை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம். என்.ஜே. புஸ்பகுமார அறிவித்துள்ளார்.

இதற்கமைய க.பொ.த. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரச விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் நடைபெறும்.

செய்முறைப்பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை நடைபெறும்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

பொதுத் தகவல் தொழில்நுட்ப பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரச விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் நடைபெறும்.

செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 6 ஆம் திகதி வரை ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் நடை பெறவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார். (2-15)

# உழவு இயந்திர சாரதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

துணுக்காய்கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில் சிறுபோக நெற்செய்கையின் போது, உழவு இயந்திரத்தின்மூலம்உழவு வேலைகளில் ஈடுபடுவதற்கு உழவு இயந்திரத்தின் சாரதிகளுக்கான விண்ணப்பங்களை துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் சிவசுப்பிரமணியம் பிரபாகரன் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

துணுக்காய்கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள 15 உழவு இயந்திரங்களின் மூலம் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளின் வயல்களில் உழவு வேலைகளை மேற்கொள்வதற்கு15 சாரதிகளின் வெற்றிடங்களுக்குவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்கவிரும்புவோர் எதிர்வரும்29ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பாக பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ பெரும்பாக உத்தியோகத்தர், கமநலசேவை நிலையம், துணுக்காய் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அவர் அறிவித்துள்ளார். (2-15)



விசுவமடு வள்ளுவர்புரத்தில் அமைந்துள்ள ஜீவஜோதி முன்பள்ளியின் 2016 ஆம் ஆண்டிற்கான கால்கோள் விழா அண்மையில் நடைபெற்ற போது... (படம்:- விசுவமடு செய்தியாளர்)

காதல் என்பது ஊஞ்சலில் இருந்து ஆடுவது போலன்று. புயலுக்கு நடுவே படகைச் செலுத்துவது போன்றது - காண்டேகர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii.lk

# காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்

இன்று பெப்ரவரி 14 உலக காதலர் தினம். காதலர்களுக்கும் தினம் ஒதுக்கி அதைக் கொண்டாடும் அளவில் உலகம் அளப்பெரும் கருணை கொண்டது.

காதலர் தினத்தில் காதலர்கள் தத்தம் அன்பைப் வெளிப்படுத்தினால் அது போதுமா? என்ற கேள்வி எழுவதும் நியாயமானதே.

எதுவாயினும் பெப்ரவரி 14 உலக காதலர் தினம் அவ்வளவுதான் சர்வதேசம் வகித்து விட்டுள்ளது. நாம் அதைக் கொண்டாடுவோம் என்றளவில் எவரும் எதுவும் சொல்ல முடியாது.

தமிழில் காதல் என்பது மிகவும் உயர்வான சொல். அன்பு என்பதும் காதல் என்பதும் ஒரு பொருள் குறிப்பவை அல்ல.

அன்பு என்பது அனைவர் மீதும் செலுத்தப்பட வேண்டியது. காதல் என்பது இன்னும் ஒருபடி மேற்சென்று அன்பும் ஈர்ப்பும் கலந்தது.

ஆக, அன்பு+ஈர்ப்பு=காதல் என்று கூறிக் கொள்ளலாம். அன்பில் நம்மவர் மற்றவர் என்ற வகைமைப்படுத்தல்களுக்கு இடமில்லை. காதலில் என்னவர் என்ற உரிமைப்படுத்தலும் இருக்கவே செய்யும்.

காதல் என்பது கனிவானது. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்... என்று தேவாரத் திருமுறை பேசுகிறது.

இறைவன் மீது கொண்ட காதல் ஆன்மாவைக் கசிந்துருகச் செய்கிறது. ஆன்மா கசிந்துருகும் போது உள்ளம்-உடல்-உயிர் என்ற மூன்று நிலைகளும் மெய்ம்மறந்து தலைவன் தாள் தலைப்படுகிறது. இவை இறைவன் மீது கொண்ட காதல்.

எனினும் எம் சமகால உலகில் காதல் என்ற புனிதமான தமிழ்ச் சொல்லை நாம் அப்படியே பொருளுணர்ந்து உள்வாங்காமல், ஆங்கிலப் பதத்துக்கு மொழிபெயர்ப்புச் செய்து Love என்ற சொற்பதமாக்கி அதன் பொருளை உள்வாங்கிக் கொள்கிறோம்.

இத்தகையதொரு நிலையில் இன்று காதல் என்பது காதலன் - காதலி என்ற இருவரும் கொண்ட அன்பு என்பதாகப் பொருள்படுகிறது. இத்தகைய பொருள்படுதல்தான் விரும்பத்தகாத சம்பவங்களை ஏற்படுத்தி விடுகின்றன.

உண்மையில் காதல் என்பதன் உன்னதம் இல்வாழ்க்கையில் இருக்கக்கூடிய தலைவன் - தலைவி உறவைக் குறிப்பதாகும். இதனை ஒளவையார் காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம் என்றுரைத்தார்.

ஆக, காதல் என்பது கணவன் மனைவி மீதும் மனைவி கணவன் மீதும் காட்டுகின்ற அன்பும் ஈர்ப்பும் ஆகும். சிலவேளைகளில் இன்பமான இல்வாழ்வில் இணைவதற்கும் காதல் அவசியப்படுகிறது.

எனவே, காதல் என்பதில் தோல்விக்கு இடமில்லை - துன்பத்துக்கு இடமில்லை - கோபத்துக்கு இடமில்லை. ஆகையால் காதல் என்ற தமிழ்ச் சொல் மிகவும் உன்னதமானது. அதில் எவ்வித அப்பழுக்கும் இருப்பதில்லை. இந்தக் காதலுக்கு ஒரு நாளை ஒதுக்கி வகுப்பது அர்த்தமற்றது. எந்நாளும் குறைவில்லாக் காதலர்களே! இன்பமான வாழ்வை வாழ்கின்றனர்.

ஆக, காதல் என்பது அன்பு - ஈர்ப்பு என்பவற்றுடன் கருத்தொருமித்து வாழ்தலையும் குறித்து நிற்கிறது என்ற உண்மை உணரப்படவேண்டும்.

ஆதலால்தான் காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பமென்று நம்தமிழ் வகுத்துக்கொண்டது.

# மாணவர்கள் வாழ்க்கையில் எந்த நிலையை அடைந்தாலும் கற்பித்த ஆசிரியர்களை மறக்கக்கூடாது

## வடமாகாண போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

மாணவர்கள்எப்போதும்ஒழுக்கத்தோடு கூடிய கல்வியை பெற்றுக்கொள்ளவேண்டும். மாணவர்கள் வாழ்வில் எந்த நிலைக்கு உயர்ந்தாலும் கற்பித்த ஆசிரியர்களை மறந்துவிடக்கூடாது என வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளி/கிராஞ்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு கடந்த 11 ஆம் திகதி பி.ப 2.30 மணியளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன், சிறப்பு விருந்தினராக கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.தர்மரட்ணம், கௌரவ விருந்தினர்களாக அயற் பாடசாலையின் அதிபர்கள் ஆகியோரும் பாடசாலையின் பழைய மாணவர்கள், அபிவிருத்தி சங்கத்தினர், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் அமைச்சர் பா.டெனீஸ்வரன் தனது உரையில், மாணவர்கள் எப்போதும் ஒழுக்கத்தோடு கூடிய கல்வியை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவ் வாறு இல்லாத வெறும்கல்வி பயனற்றது.எனவே மாணவர்கள் வாழ்விலே எந்த நிலைக்கு உயர்ந்தாலும் கற்பித்த ஆசிரியர்களை மறந்து விடக்கூடாது. அவர்களது அர்ப்பணிப்பே ஒவ்வொரு மாணவனதும் வெற்றிக்கு வித்தாகின்றது. அத்தோடு கடந்த ஆண்டு அந்தப் பகுதியில் இடம்பெற்ற மக்கள் குறைகேள் நிகழ்வில் தாம் வாக்களித்துச் சென்றதை மறக்கவில்லை.

அதன்அடிப்படையில்இங்கு வருகின்ற பிரதான (பல்லவராயன்கட்டு சந்தியில் இருந்து நாச்சிக்குடா வேரவில் வரையான) வீதியை புனரமைத்து தருமாறு நீங்கள் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக கடந்த ஆண்டு 4 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் தற்போது வேரவில் வைத்தியசாலைப் பகுதியில் இருந்து வீதி புனரமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. அதேவேளை இந்த ஆண்டு நிதியில் 8 மில்லியன ரூபாய் நிதியை ஒதுக்கித் தருவதாகவும்அதனூடாக வீதியின் ஒரு பகுதியை தரமான முறையிலே புனரமைத்துக்கொள்ள முடியும்.

அத்தோடு இந்த பாடசாலையின் பௌதிக வளத் தேவைகளை ஓரளவு நிவர்த்தி செய்ய தனது நிதியில் (CBG) இருந்து ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கித்தருவதாகவும், அத்தோடு வருகின்ற மாதத்தில் இருந்து இங்கு போக்குவரத்து சேவைகள் ஒழுங்கான முறையில் புதிய நேர அட்டவணையின் அடிப்படையில் இடம்பெறும்.

எனவே ஆசிரியர்கள் மற்றும்கிராமத்து மக்களுக்கு போக்குவரத்தும் சிறப்பாக அமையும்என்று தெரிவித்தார். (2-281)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வட மாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

அந்த வகையில் 15.02.2016 திங்கள் யாழ் பிரதேசத்தில் செட்டி வீதியடி ஆகிய இடத்திலும் மன்னார் பிரதேசத்தில அரிப்பு, சவேரியார்குளம், CECB ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

# கிராம அபிவிருத்திச்சங்க நிர்வாக சபைத் தெரிவு

சாவகச்சேரி கெற்பேலி கிராம அபிவிருத்திச்சங்கத்தின பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் அண்மையில் இடம பெற்றது. இதில் புதிய நிர்வாக சபையின் தலைவராக இ.சிவபாலன், செயலாளராக செ.சிலம்பரசன், பொருளாளராக க.சத்தியகுமார், உப தலைவராக ச.சாந்தகுமார், உப செயலாளராக மா.கணேசமூர்த்தி, நிர்வாக சபை உறுப்பினர்களாக அ.விஜயதாஸ், வெ.அருள்வேந்தன், செ.ஆனந்த குமார், லோ.அஜந்தன், இ. தேவதாசன், கெ.குகதாஸ், வி.ஈஸ்வரலிங்கம், இ.நிசாந்தனுடன கணக்காளராக சி.செல்வநாதன் ஆகியோர் தெரிவாகியுள்ளனர். (செ-83)

# சோதனைகளைச் சாதனையாக்கி காட்ட இத்தவக்காலத்தை பயன்படுத்துவோம்

இன்று தவக்காலத்தின் முதல் ஞாயிறாகும். இயேசு சாத்தானால் சோதிக்கப்பட்டதையும் அவற்றை அவர் வென்ற நிகழ்வையும் பைபிள் எடுத்துக்காட்டுகின்றது. உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதரும் சந்திக்கும் ஓர் அனுபவம் 'சோதனை'. இயேசுவும் இதற்கு விதிவிலக்கல்ல. இயேசு மூன்று சோதனைகளை சந்தித்தார். பசியாய் இருந்த இயேசுவிடம் கல்லை அப்பமாய் மாற்றச் சொன்னது சாத்தான். இயேசுவிடம் இருந்த சக்தியைப் பயன்படுத்தி அவரது தேவையைப்

## பரமபிதா காட்டிய பாதை

பூர்த்தி செய்துகொள்ளத் தூண்டியது சாத்தான். நேரம் அறிந்து, தேவை உணர்ந்து வந்த ஒரு சோதனை. தேவைகள் அதிகமாகும் போதுதானே, அவற்றை எப்படியாகிலும் நிறைவேற்றும் சோதனைகளும் கூடவே வரும்.

சாத்தான் சோதனையை ஆரம்பித்த விதம் 'நீர் இறைமகன் என்றால், இந்தக் கல் அப்பமாகும்படி கட்டளையிடும்" இயேசுவிடம் இப்படி ஒரு சவாலை முன் வைக்கிறது சாத்தான். இறைமகன் என்பதை நிரூபிக்க புதுமைகள் நிகழ்த்த வேண்டும், அதுவும் தன்னுடைய சுயநலத் தேவையை நிறைவு செய்யும் வண்ணம் புதுமை செய்ய வேண்டும் என்கிறது இயேசு சாத்தானுக்குச் சொன்ன பதில். இயேசு தன் உடல் பசியை விட, ஆன்ம பசி தீர்க்கும் உணவைப்பற்றி பேசினார். 'மனிதர் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை" தன் சொந்த பசியைத் தீர்த்துக் கொள்ள மறுத்த இயேசு, பல்லாயிரம் பேரின் பசியைத் தீர்க்க தன் சக்தியைப் பயன்படுத்தினார் என்பது நமக்குத் தெரியும். நமக்கு இறைவன் கொடுத்துள்ள சக்திகள், திறமைகள் எதற்கு? சுய தேவைகளை நிறைவு செய்வதற்காகவா? இயேசுவிடம பாடம்கற்றுக்கொள்ளலாம்.

இயேசு சந்தித்த இரண்டாவது சோதனை சாத்தானை வணங்கினால் உலகமனைத்தையும் இயேசுவிடம் ஒப்படைக்க விரும்புவதாக சாத்தான் சொல்கிறது. சாத்தானிடம் சரணடைய வேண்டும். இயேசு அதை திட்டவட்டமாக மறுத்தார். சாத்தான் முன் சரணடைய மறுத்த இயேசு, சிலுவையில் தொங்கிய போது,'தந்தையே, உமது கைகளில் என் ஆன்மாவை ஒப்படைக்கிறேன்" என்று இறைவனிடம் சரணடைந்தார்.தவறான வழிகள், தவறான சக்திகளுடன் எத்தனை முறை சமரசம் செய்திருக்கிறோம்? எத்தனை முறை இவைகள் முன் சரணடைந்திருக்கிறோம்?

மூன்றாவது சோதனை? இறைமகன் உலகை வெல்வதற்கு, உலகை மீட்பதற்கு எந்தத் தொந்தரவும், துன்பமும் இல்லாத குறுக்கு வழியொன்றை சாத்தான் காட்டுகிறது. எருசலேம் தேவாலயத்தின் மேலிருந்து இயேசு குதிக்கவேண்டும். உடனே, வானங்கள் திறந்து, விண்ணவர் ஆயிரமாய் இறங்கிவந்து, இயேசுவின் பாதம் தரையைத் தொடாமல் அவரைத் தாங்கிய வண்ணம் தரைக்குக் கொண்டு வருவார்கள். போதும்; நீ அப்பாலே போ என்று இயேசு சாத்தானைக் கடினமாக விரட்டி அடிக்கிறார்.

சோதனை என்பது எல்லோருடைய வாழ்விலும் நடக்கின்ற ஒன்று. அதிலும் குறிப்பாக, நன்மை செய்ய வேண்டும்என்ற எண்ணத்தோடு, கடவுளின் இறையாட்சி இந்த மண்ணில் வர உழைக்கிற ஒவ்வொருவருடைய வாழ்விலும் சோதனைகள் நிச்சயமாக இருக்கும் என்பதை இந்த நிகழ்ச்சி நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. அத்தகைய சோதனையைக் கண்டு பயப்படாமல், துணிவோடு, இறைவனின் துணையை நாம் நாடினால் நம்மால் சோதனைகளை வெல்ல முடியும் என்பது இயேசு கற்றுத்தருகிற பாடம். இயேசு பலவீனமாக இருக்கிறார். உடலால், உள்ளத்தால் சோர்ந்து இருக்கிறார். ஆனாலும், அவர் தெளிவாக, துணிவோடு இருக்கிறார். ஒவ்வொரு முறையும் சாத்தான் அவரைச் சோதிக்கிறபொழுது, இறை வார்த்தையின் வழியாக இறைவனின் வல்லமை அவரிடமிருந்து வெளிப்படுகிறது. இறைவார்த்தையின் இறைப்பிரசன்னம் அவருக்கு உறுதுணையாக



இருந்து அவரை வழிநடத்துகிறது. இறுதியில் சோதனைகளை எதிர்த்து வெற்றிபெறுகிறாரர. இச்சோதனைகளை வெல்ல இயேசு கையாண்ட ஆயுதம் இறைவார்த்தை தான். மூன்று சோதனைகளிலும் அவர் பைபிளை மேற்கோள் காட்டினார். அந்த வார்த்தைகளைச் செயற்பாடாக்கினார். இவ்வாறு, இறைவன்மீது அவருக்குள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தினார். நாமும் நமது சோதனைகளை வெல்ல இந்த மூன்று உத்திகளையும் பயன்படுத்துவோம். இறைவார்த்தையைக் கொண்டும், இறைநம்பிக்கையைக் கொண்டும் நம் சோதனைகளை வெல்வோம். நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு வாழ்வை அணுகும்போது, நமக்கு ஏற்படுகின்ற தடைக்கற்கள் ஏராளம், ஏராளம்.அதைவிட நமக்கு வருகிற சவால்கள் நம்மை பாதாளத்திற்கு இழுத்துச்செல்லும் வலிமை படைத்தவை. ஆனால்,எவற்றிற்கும் அஞ்சாமல் துணிவோடு, இறைப்பிரசன்னத்தை நாடி அவற்றை எதிர்கொண்டால், நாம் வெற்றி பெறுவோம்.கிறிஸ்தவர்களாகிய நாம் இறை வார்த்தையின் ஒளியில் சோதனைகளை சாதனையாக்கி காட்ட இத்தவக்காலத்தை பயன்படுத்துவோம்.

ம.பிரான்சிஸ்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

# ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III- 2016
# சிறிகாமாட்சி 2ஆவது சுற்றுக்கு தகுதி

சிறிலங்கா கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு யாழ்.நகரில் இருந்து ஓர் அணியை தெரிவு செய்வதற்கான தகுதிகாண் போட்டிகளை முதல் சுற்றினை லீக் முறையிலும் மற்றைய சுற்றுகள் யாவும் விலகல் முறையிலும் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தி வருகின்றன.

அத்தொடரில் 2 ஆவது போட்டியில் சிறிகாமாட்சி அணி, நியூஸ்ரார் அணியை ஒரு இலக்கினால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு (PREQUARTER FINAL) தகுதி பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் அணி 50ஓவர்களில் 9இலக்குகளை இழந்து 272 ஓட்டங்களை பெற்றது. தீபன்-23, சிவசர்மன்-21,மோகனதீபன்-11, நிக்ஸன்-34, ரமணன்-44, நம்மி-21, மோகன்-68 ஓட்டங்களை பெற்றனர். சுதர்ஸன்-01,சனன்தன்-01, துவாரகன்-03,லிங்கநாதன்-03, கோகுலராஜ்-01 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிறிகாமாட்சி அணி 445 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 273 ஓட்டங்களை பெற்றனர். லிங்கநாதன்-21,மோகன்ராஜ்-53,அரவிந்தன்-49,கஜீபராஜ்-28, சனன்தன்-30, ஓட்டங்களை பெற்றனர். ரமணன்-02, தீபன்-02,நம்மி-01, சிவசர்மன்-02,பிரசாத்-01 இலக்கினை கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு சிறிகாமாட்சி அணி 8.73 புள்ளிகளையும் நியூஸ்ரார் அணி 3.62 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். (கு)








உடுவில் மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் அதிபர் ஷிராணி மில்ஞ் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினர் சனத் ஜெயசூரியா (இலங்கை முன்னாள் துடுப்பாட்ட வீரர்)அழைத்து வரப்படுவதையும் வெற்றி பெற்ற எலைசா அக்னியூ இல்லத்தின் தலைவி பிரதம விருந்தினரிடம் வெற்றிக்கிண்ணம் பெறுவதையும் படங்களில் காணலாம்.

## NSC கரப்பந்தாட்டம் இன்று ஆரம்பம்



2016 ஆம் ஆண்டு கொக்குவில் NSC கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் இன்று 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

மேற்படி கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகத்திடம் இருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

போட்டிகள் அனைத்தும் (OVER GAME) அடிப்படையானது. கரப்பந்தாட்ட போட்டிகள் அனைத்தும் பொற்பதி வீதியில் அமைந்துள்ள நேதாஜி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள்077 487 6653, 077 940 9125, 075 504 8289 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (கு)



உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வித்தியானந்தா கல்லூரி மாணவன் எஸ்.சுயாந்துக்கு தேசிய மட்டத்தில உயரம் பாய்தலில் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டமைக்காக 5 ஆயிரம் ரூபா பணத்தினை வடக்கு மாகாண பிரதிக் கல்விப்பணிப்பாளர் கே.சத்தியபாலனிடம் சங்கத்தலைவர் ப.தர்மகுமாரன் வழங்கிய போது...

## மென்பந்து சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது



இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் பிரமண்டமாக நடத்த இருக்கும் வடக்கு மாகாண ரீதியிலான 8 பந்துப்பரிமாற்றங்களை கொண்ட மென்பந்து போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் 077 828 8608, 077 054 8624 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

மேற்படி சுற்றுப்போட்டியின் அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டிகள் மின் ஒளியில் நடைபெறவுள்ளதுடன் வெற்றி பெறும் அணியினருக்கு வெற்றிக்கிண்ணம் மற்றும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (கு)

## பருத்தித்துறை காற்பந்தாட்ட லீக்கின் 19 வயதுப் பிரிவினருக்கான காற்பந்தாட்டம்
### சென். அன்ரனிஸ் சம்பியன்

பருத்தித்துறை காற்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்ட 19 வயதுப் பிரிவினருக்கான காற்பந்தாட்டத் தொடரில் சம்பியனாகியது மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம்.

வடமராட்சி கிழக்கு கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக்கழகமும் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும் பலப்பரீட்சை நடத்தின. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே முடிவடைந்தது.முதல் பாதி இரண்டாம் பாதியிலும் அதே நிலைமைதான். பந்துடன் இணைந்து நேரமும் உருண்டோட இறுதி வரை கோல் கணக்குகள் ஆரம்பிக்கப்படவில்லை.

சமநிலைத்தவிர்ப்பில் வெற்றியாளரைத் தீர்மானிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.சமநிலை தவிர்ப்பு உதையில் 4:3 என்ற கோல் கணக்கில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது. ஆட்ட நாயகனாக சென். அன்ரனிஸ் அணியின் நிருஜனும் சிறந்த கோல் காப்பாளராக சென். சேவியர் அணியின் ஜெராட்டும் தெரிவு செய்யப்பட்டனர்.

மூன்றாமிடத்தை உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம் தனதாக்கியது. (கு)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யும் வகையில் றோட்டரிக் கழகத்தினால் இரத்ததான முகாமும், விழிப்புணர்வு நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு இன்று காலை 8 மணி தொடக்கம் யாழ்.மத்திய பேருந்து நிலைய வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே ஆர்வமுள்ள குருதி கொடையாளர்கள் அனைவரும் வருகை தந்து குருதிக் கொடையளித்து குருதி தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்ய உதவுமாறு ஒழுங்கமைப்பாளர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (செ–12)

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக அனுசரணையில் வல்வெட்டித்துறை நோயாளர் நலன்புரிச் சங்கம் ஏற்பாட்டில் இரத்தான முகாம் ஒன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்நிகழ்வு இன்று காலை 9 மணி தொடக்கம் வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளதால் ஆர்வமுள்ள அனைத்து குருதிக்கொடையாளர்களையும் கலந்த கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (செ–12)

# காதலர் தினத்தை முன்னிட்டு காணொலிப் பாடல் வெளியீடு

## சமூக அக்கறைப் படைப்பாக எதிர்பார்ப்பு

(யாழ்ப்பாணம்)

காதலர் தினத்தை முன்னிட்டு யாழ். இந்துக் கல்லூரியில், இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு காணொலி பாடல் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு குறித்து, பாடல் வெளியீட்டுக் குழுவினால் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருப்பதாவது,

காதலர் தினத்தில் காதல் குறித்த பல்வேறு படைப்புக்கள் வெளிவருவதுண்டு.ஆனால் இது ஆண்,பெண் காதல் அல்ல. அதைத் தாண்டி, இன்றைய இளைஞர்கள் மீதான இளம் கலைஞர்களின் சமூகக்காதல்.

காதலர் தினம் என்பது வெறுமனே ஆண்களும் பெண்களும் காதலிப்பது மட்டுமல்ல. எங்களை, எங்கள் உடலை, எங்கள் குடும்பத்தை, நாம் சார்ந்த சமூகத்தைக் காதலிப்பதும் அதற்காக நாம் செய்யும் நல்ல விடயங்களும் காதல்தான்.அந்தக் காதலின் வெளிப்பாடுதான் இந்தப் படைப்பு.

இந்த, காணொலிப்பாடலுக்கு கேள்விக்குறியொன்றைத் தலைப்பாக வைத்திருக்கிறார்கள்.இந்தப் படைப்பினூடாக சமூகத்துக்கு ஒரு அழகான, அவசியமான செய்தி சொல்லப்பட்டிருக்கிறது "போதை அறிவை மட்டுமன்றி வாழ்க்கையையும் அழிக்கும்" என்கிற தொனிப்பொருளோடு, வாழ்கிறபோது நாம், நம்மைக் காதலித்தால் இந்த வாழ்க்கை அழகானது என்கின்ற அற்புதமான செய்தியை, இந்தக் காதலர் தினத்தில் சொல்கின்றனர்.

பொதுவாகவே இளம் தலைமுறையினரும் கலைஞர்களும் சமூகம் மீதான அக்கறை அற்றவர்களாகவும், குறுகிய வட்டத்துக்குள் சுயநலத்தோடு வாழ்பவர்களாகவும் விமர்சிக்கப்படுகின்ற இன்றைய சூழலில், இளைய தலைமுறையினரைச் சமூகப்பொறுப்பு மிக்கவர்களாக, சரியான வழியில் செல்லவைக்கலாம்.இளைஞர்களுக்கான விழிப்புணர்வாக, இளைஞர்களால் உருவாக்கப்பட்டு, எதிர்காலத் தலைவர்களைப் பிரசவிக்கின்ற கல்லூரியொன்றில் வெளியிடப்படுவதால் இந்தப்படைப்பு வித்தியாசமானது என ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளது. (செ-4)

கும் செயல் என அவர் கூறியிருந்தார்.

1815 ஆம் ஆண்டு உடன்படிக்கையை அவர் வாசித்துள்ளாரா? இல்லையா? என எனக்குத் தெரியாது. தம்மை போர் குற்றத்திற்காக மின்சாரக் கதிரையில் அமர்த்தப் போகின்றார்கள் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த முன்னர் கூறிவந்தார்.

அவரை மின்சாரக் கதிரையில் இருந்து நாமே காப்பாற்றினோம் என்பதை நான் மிகவும் தெளிவாகக் கூற வேண்டும். புதிய அரசாங்கம் காரணமாகவே இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்து என ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்தார்.(செ–12)

## மகிந்த அணி...

பட்டுள்ளனர்.

கொடகவெல, வரலாற்று சிறப்புமிக்க அம்மடுவை செல்ல கதிர்காமம் ஆலயத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ குணவர்தன உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதற்கு முன்னரும் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சீனிகம தேவாலயத்தில் தேங்காய் உடைத்து வழிபாட்டில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## இலங்கையில்...

வாதம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை நேற்று முன்தினம் அதன் செயலாளர் நாயகம் பான் கீ மூனால் வெளியிடப்பட்டது.

குறித்த அறிக்கையில் இலங்கை உள்ளிட்ட தெற்காசிய நாடுகளில் ஐ.எஸ் தீவிரவாதிகளின் ஆதரவுத் தளம் வேகமாக வியாபித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையில் கொலன்னாவ, கண்டி, கொழும்பு பிரதேசங்கள் ஐ.எஸ் தீவிரவாதிகளின் ஆதரவுத் தளமாக மாற்றம் பெற்றுவருவதாகவும் இது தொடர்பான அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது. (செ-12)

## சு.கட்சியிலிரு...

பொன்றை நடத்தி கட்சித் தலைமைக்கு சவால் விடுத்துள்ளனர்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் வலல்லாவிட பிரதேச சபை முன்னாள் தலைவர் உதேனி அதுகோரள, மகரகம நகர சபையின் முன்னாள் நகரபிதா காந்தி கொடிகார, பொரலஸ்கமுவ நகர சபையின் முன்னாள் தலைவர் அருண பிரியசாந்த, அத்தனகல்ல பிரதேச சபையின் முன்னாள் தலைவர் பிரியந்த புஷ்பகுமார, கம்பஹா பிரதேச சபையின முன்னாள் தலைவர் ரஞ்சித் குணவர்த்தன, மீரிகம பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சனத் நந்தசிரி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இவர்கள் தங்களுக்கு எதிரான கட்சியின் நடவடிக்கை குறித்து பகிரங்கமாக விமர்சித்ததுடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாத்த மகந்த ராஜபக்ஷவுக்கு சார்பாக செயறபடுவதன் காரணமாகவே தங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

அத்துடன் மைத்திரிபால சிறிசேன இரவோடிரவாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் இரகசிய உடன்பாட்டை மேற்கொண்டு கட்சியை அழிப்பதற்கு முனைந்ததாகவும் அவர்கள் விமர்சித்துள்ளனர்.

மேலும் தங்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை குறித்து விளக்கமளிக்குமாறு கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திசாநாயக்கவினால் அனுப்பப்பட்டிருந்த கடிதத்தையும் பகிரங்கமாக தீவைத்து எரித்துள்ளனர்.

அத்துடன் மகிந்தவின் நிலைப்பாடே தங்களின் நிலைப்பாடு என்று வலியுறுத்தியுள்ள இந்தக் குழுவினர், முடிந்தால் உடனடியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்திக்காட்டுமாறு அரசாங்கத்திற்கு சவால் விடுத்துள்ளனர். (செ-12)

## மன்னார் காட்...

கிராமத்திற்கு கொண்டு வரப்பட்ட கஞ்சாப் பொதிகள் சிலாபத்துறை காட்டுப் பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த போதே மீட்கப்பட்டுள்ளது.

கஞ்சா பொதிகளை மறைத்து வைத்திருந்தவர்கள் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை என மன்னார் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்த மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொண்டுள்ளதாகவும், எதிர்வரும் 15 ஆம் திகதி கஞ்சா பொதிகள் மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (செ-12)

## மகிந்தவின் புதி...

கட்சி ஒன்றை உருவாக்குவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டம் தொடர்பில் தனது கருத்தினை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி நிறைவேற்று குழு கூட்டத்தில் சமல் ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க மற்றும் தனது தந்தையான டீ.ஏ.ராஜபக்ஷ இணைந்து -ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை உருவாக்கியதாகவும் அதனை பிளவுபடுத்துவதற்கு தான் ஒரு போதும் இடமளிக்கப்போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை ஐக்கியப்படுத்துவதற்காக ஜனாதிபதிக்கு அவசியமான அனைத்து ஆதரவுகளையும் வழங்க தயார் எனவும், தனது குடும்பத்தின் அழுத்தங்களினால் நிராகரித்த மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் பதவியை ஏற்றுகொள்வதற்கும் தான் தயார் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கட்சியை மீண்டும் சீரமைக்க வேண்டும் எனவும் அனைத்து தொகுதி அமைப்பாளர்களையும் அழைத்து ஜனாதிபதி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதற்காக மேற்கொண்டுள்ள வேலைத்திட்டம் தொடர்பில் அறிவிக்க வேண்டும் என சமல் ராஜபக்ஷ நிறைவேற்று குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அமைப்பாளர்களிடம் காணப்படுகின்ற அறியாமை காரணமாக வேறு குழுக்கள் கட்சி உறுப்பினர்களை பிழையான வழியில் அனுப்பி வைப்பதற்கு வாய்ப்புகள் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நேற்று முன்தினம் ராஜபக்ஷவரகளின் புதிய கட்சி தலைமையகம் திறந்து வைக்கும் நிகழ்வினையும் சமல் ராஜபக்ஷ புறக்கணித்துள்ளனர்.

சமல் ராஜபக்ஷவின் மகனாக ஷசிந்திர ராஜபக்ஷவும் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

கடுமையான மகிந்த ஆதரவாளராக கடந்த காலங்களில் செயற்பட்ட காலி மாவட்ட உறுப்பினராக கீதா குமாரசிங்கவும் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளார். அதற்கமைய காலி மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் பதவியை ஏற்று கொள்வதற்கு அவரும் இணக்கம் வெளியிட்டுள்ளார். (செ-12)

## மின்சார கதிரை...

பொலநறுவை மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற அபிவிருத்தித் திட்டங்களின் ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

அங்கு ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கம் தொடர்பில் சிலர் பல்வேறு விமர்சனங்களை முன்வைக்கின்றனர். கடந்த வாரம் இலங்கைக்கு வந்திருந்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் என்னுடன் கலந்துரையாடியபோது, இதுவே உலகின் அழகான நாடு, இத்தகைய அழகான நாடுகள் சொற்ப எண்ணிக்கையிலேயே உள்ளன என்றும், உங்களது அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கை தொடர்பில் மகிழ்ச்சியடைகிறோம் என்றும் நாம் எவ்வித அழுத்தத்தையும் பிரயோகிக்கமாட்டோம் என்றும் கூறினார்.

அத்தோடு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கருத்திற்கும் ஜனாதிபதி இதன போது விளக்கமளித்தார்.

அண்மையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பத்திரிகைகளில் ஒரு அறிவித்தலை விடுத்திருந்தார். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரேரணைக்கு நாம் இணங்கியமை ஆங்கிலேயர் ஆட்சியில் 1815 ஆம் ஆண்டு ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையை விடவும் நாட்டைத் தாரை வார்க்

## போரினால் பாதி...

கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக போராடுவதே. வடக்கு மாகாண மக்கள் பல்வேறு பிரச்சினைகளை ஆட்சி மாற்றத்தின் பின்னரும் எதிர்நோக்கி வருகின்றனர்.

காணாமல் ஆக்கப்படடோர், இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள், அரசியல் கைதிகளது விடுதலை, காணி அபகரிப்பு என மக்களுடைய பிரச்சினைகள் நீண்டு கொண்டே செல்கின்றது. இதில் சில பிரச்சினைகள் தெற்கு மக்களுக்கும் உள்ளன. ஆகையால் தமது உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கும் பிரச்சினைகளை தீர்த்து கொள்வதற்கும் இரு மக்களும் இணைந்து போராட வேண்டும்.

வடக்கு மக்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொடுப்பதற்கு தெற்கு மக்களும், தெற்கு மக்களுக்கான உரிமைகளை பெற்று கொடுப்பதற்கு வடக்கு மக்களும் போராட தயாராக வேண்டும். இவ்வாறன ஒரு முறைமையில்தான் இரு மக்களிடையே உண்மையான புரிந்துணர்வு, நல்லிணக்கம் ஏற்பட வாய்ப்பு உண்டு.

தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டமையை மக்கள் விடுதலை முன்னணியினராகிய நாம் வரவேற்கும் அதேவேளை, தமிழ் மொழியில் மாத்திரம் தேசிய கீதம் பாடினால் தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்து விடும் என நினைப்பது தவறு. இதனை புதிய ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தென்பகுதி மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றார் அவர். (செ-4)

## பின்புறம் திரு...

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதிய அரசியல் அலுவலகம் நேற்று முன்தினம் பத்தரமுல்லையில் திறந்து வைக்கப்பட்டது.

இதற்கான சுபநேரத்தை அவரது ஆஸ்தான சோதிடர் சுமணதாச உள்ளிட்டோர் குறித்துக் கொடுத்திருந்தனர்.

எனினும் சோதிடர்கள் குறித்துக் கொடுத்த சுபநேரத்திற்கு உகந்த திசையானது அலுவலக நுழைவாயிலின் எதிர்த்திசையில் அமைந்திருந்தது.

இதன் காரணமாக மகிந்த ராஜபக்ஷ தனது அலுவலக நுழைவாயிலின் அருகில் வந்து எதிர்ப்புறமாக திரும்பி நின்று கொண்டு பின்புறமாக கைகளை நீட்டி நாடாவை வெட்டி அலுவலகத்தை திறந்து வைத்துள்ளார்.

சோதிட ரீதியான தோஷங்கள் காரணமாகவே தனது பதவி பறிபோனதாக இன்னும் நம்பிக் கொண்டிருக்கும் மகிந்த ராஜபக்ஷ, அதனை நிவர்த்தி செய்து பழைய அதிகார்த்தை எட்டிப்பிடித்துக் கொள்ளசோதிடத்தை நம்பி படும்பாடு காண்பவர்களுக்கு பெரும் சுவாரஸ்ய மூட்டுவதாகவே அமைந்துள்ளது. (செ-12)

## முல்லையில் நேற்...

வேண்டும் என்ற கருத்தையே பதிவு செய்திருந்தனர்.

இரண்டு நாட்கள் நடந்த அமர்வுகளிலும் 100க்கும் அதிகமானவர்கள் தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர். (செ-12-281)

## குவைத் சென்ற 104 பேர்...

இருக்கும் வேலைவாய்ப்பு பணியகத்துக்கு சொந்தமான வீட்டில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

விசா காலம் முடிந்து குவைத்தில் தங்கியிருந்தமை, வழங்குவதாக கூறப்பட்ட வேலை வழங்கப்படாமை உள்ளிட்ட பல்வேறு உடல் ரீதியான சித்திரவதைகள் உட்பட பல பிரச்சினைகளை இந்த இலங்கைத் தொழிலாளர்கள் எதிர்நோக்கியிருந்ததாகவும் பணியகம் குறிப்பிட்டுள்ளது. (செ-12)

## மைத்திரி...

ப்படுகிறது.

அதேவேளைநியூசிலாந்து பிரத மர் ஜோன் கீ எதிர்வரும் 23ஆம் திகதி இலங்கைக்குவிஜயம்செய்யவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ-12)


### அம்பிளிபயர்,ஸ்பீக்கர்ஸ் விற்பனைக்கு



சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஜப்பான் அமெரிக்கன் ( ஒறியினல் பையினியர், கென்வூட் ) ஸ்பீக்கர்ஸ் அம்பிளிபயர்கள் அத்துடன் வாகன பூபர்ஸ், DVD, TV என்பன எம்மிடம் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு: 0772374001 (3590)

ARISTO 238, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### pharmacist தேவை

யாழ்.நகருக்கு அண்மையில் இயங்கி கொண்டிருக்கும் பாமசி ஒன்றிற்கு pharmacist ஒருவர் தேவைப்படுகிறார். தகைமையுடையோர்பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

0771258025 (3592)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

### றோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல் றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

PAKED BY: ROYAL Industries

T.P : 0777277670 Colombo.13

அனைத்துப் பாா்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்

சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P 021 222 2567

- விளையாட்டுத் துறையில் வெற்றிபெறும் வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் வீறு கொண்டெழும் விசேட சக்தியை வழங்குவது **றோயல் குளுக்கோஸ்.**
- நோயுற்றவேளை சோர்வுற்று இருக்கும் உங்களுக்கு புத்துணர்வும் புதுத்தென்பும் தருவது **றோயல் குளுக்கோஸ்.**
- காலை முதல் மாலை வரை வேலை அதிகம் காரணமாக சோர் வுற்ற நிலை அடையும் போது புதிய உற்சாகம் பெற உங்கள் கையில் இருக்க வேண்டியது **றோயல் குளுக்கோஸ்.**
- மழலைகட்கும் மகப்பேற்றுத் தாய்மாருக்கும் விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கும் முதியோருக்கும் மூதாதையர் காலத்தில் இருந்து முன் நின்று உற்சாகம் தருவது **றோயல் குளுக்கோஸ்.**

உற்பத்தியாளர்: றோயல் இன்டஸ்றீஸ், வூல்வெண்டல்ஸ்றீற், கொழும்பு -13.

சந்தைப்படுத்துவோர் : சிவா நறுமணப் பூங்கா.

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-3688)

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு

வெற்றிடங்கள்

வீட்டுப் பணிப்பெண்கள், வீட்டு சாரதி, மேசன்பாஸ், A/C டெக்னிசியன், எலக்ரீசியன், சமையல்காரர்கள், லேபர்ஸ், ஹெல்பர், வைத்தியசாலை சுத்திகரிப்பு (பெண்கள்)

உங்கள் விருப்பத்துக்கு ஏற்ப தொழில்கள் எம்மிடம் கிடைக்கப்படும். (C-3692)

IKEA Travels & Tours Pvt Ltd (LLC 3097)

Contact : 021 222 42 20 / 077 81 81 892

62/34, Stanley Link Old Post Office Road, Jaffna.

www.ikeatourslk.com

### வீடு விற்பனைக்கு

யாழ்.பிரதான வீதியில் பாடசாலைகள், ஆலயங்கள் சந்தை வியாபார நிலையங்களுக்கு அண்மையில் 6 அறைகள், 2 விறாந்தைகள் இணைந்த குளியலறை கிணற்றுடன் மிகப்பெரிய விசாலமான வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-0771670448 (சி-3689)

### நடமாடும் மிருக வைத்திய சேவை

தாவடிக்கு அண்மையில் மிருக வைத்திய சேவைக்கு

தொடர்பு:-Dr.K கிருபாகரன்

0779738802 (3586)

நாவலர் வீதி, நல்லூர். 4-6 PM

### வாடகைக்கு

A9 வீதி, கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சியில் உணவகம் ஒன்று வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-0777899807 (சி-3685)

### FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH

FLC

### பிரெஞ்சு மொழி வகுப்பு

Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French·

FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1037 மாணவர்கள் French கற்றுள்ளனர்....

No. 40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 20.02.16 சனி 10 am.

பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 22.02.16 Mon@ 4pm.

Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre (சி-3682)

### CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062 (C-3684)

### மணிவிழா வாழ்த்து



“பொன்மனச் செம்மல்”
“மனிதநேய ஏகையாளன்”
“கல்விக் காருண்யன்”
எனும் கௌரவப் பட்டங்களைப் பெற்ற

உயர்திரு.
E.S.P. நாகரத்தினம்
அவர்களின்

மணிவிழாச் சிறக்கவும்
இன்னும் பல கௌரவப் பட்டங்களைப் பெறவும்
எமது வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்

வாழ்த்துவோர்:
ஸ்ரீமுருகன் தண்ணீர்ப் பந்தல்
179, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
0777291971 (3591)


## நாய்...

சுதந்திரதினத்தில் தன்னோ புதுன்கெ என்ற பாடலைப் பாடிய பாடகி பெண் நாயைப்போன்று சத்தமிட்டதாக செய்தியில் தெரிவிக்கப்பட்டது. இது தவறான விமர்சனமாகும் ஒரு பெண்ணை நாய் என தொலைக்காட்சியில் கூறமுடியாது. எனவே அரசாங்கத்தின் ஒளிபரப்பு அனுமதிப் பத்திரங்களைக்கொண்டு சில நாய்கள், நாய் வேலை செய்வதற்கு இடமளிக்கமாட்டேன் என பிரதமர் தெரிவித்தார். (செ-12)


### விரைவான வேலை மூலம் அதிக இலாபம் பெற்றிட !!

ஜூஸ் பக்கெட் மெசின்






வேலையாட்கள் தேவையில்லை

1 மணித்தியாலத்தில் 2000 பக்கட்டுகளை தயாரிக்கும் திறன்

ரூ.2/=
ரூ.5/=
ரூ.10/= SUPER

பக்கட்டுகளை தயாரிக்கலாம்

- 1 வருட உத்தரவாதம்
- இலவச செயல்முறைகளுடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்
- விற்பனைக்குப் பின் சேவையுண்டு
- இலவச விநியோகம்

தமிழில் தொடர்பு கொள்ள

077 391 8870

WINRICH INTERNATIONAL(PVT)LTD

No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitya,Colombo - 03

Eastman

max adz (C-3686)

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

LONDON METROPOLITAN COLLEGE

**IELTS**
Duration : 60 hours (Week, Weekends)
• Student Visa • Skill Migration

**IELTS**
LIFE SKILLS A1, B1
(Speaking & Listening)
Duration : 48 hours (Week, Weekends)
UKBA இன் புதிய நடைமுறைக்கேற்ப Settlement விசாக்களுக்கான IELTS A1 பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

**APPLIED SPOKEN ENGLISH** (with Grammar)
Duration: 48 hours (Week, Weekends)
ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்துக்கொள்ள விரும்புவோர்க்கான கற்கை நெறி

**DIPLOMA IN ENGLISH**
Duration: 60 hours (Week, Weekends)

**COMPUTER COURSES**
- Certificate in MS Office 2013
- Certificate in JAVA, VB, Net, C#
- Internet & Email
- Diploma in Computer Studies
- Diploma in Computer Programing



LONDON METROPOLITAN COLLEGE
LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road, parameswara junction, Jaffna. (சி-3683)

HOTLINE : 0774765990 I 021 753 8395


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2047 14.02.2016 தொலைபேசி : 021 222 3378

நாதம் 53



# நம்பிக்கையுடன் காத்திருப்போம்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. இறைவணக்கத்துடன் ஆரம்பமான ஆலடி மாநாட்டில் விபத்தில் பலியான பாலகன் சுவஸ்திகனுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

வாழவேண்டிய ஒரு பாலகனை அநியாயமாக நாம் பறிகொடுத்துவிட்டோம். இதுபோன்ற சம்பவங்கள் இனிமேல் நடக்காத வகையில் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும். இப்படிப் பண்டிதர் மாநாட்டில் அறிவித்தார்.

**வாத்தியார்:** சமூகப்பொறுப்பு என்பது மிகவும் முக்கியமானது. எனினும் எங்கட தமிழ்ச்சமூகத்தில சமூகப் பொறுப்பு என்பது மிகவும் குறைந்து போகின்றது.

**விதானையார்:** வாத்தியார் ஐயா கடந்த 9 ஆம் திகதி நடந்த வடக்கு மாகாண சபைக் கூட்டத்தைப் பார்த்தனீங்கள் தானே! ஆளுங்கட்சியே தங்களுக்குள் அடிபட்டுக்கொண்டவியள்.

கடிதம் எழுதுகிறது, கையெழுத்து வைக்கிறது, கள்ளக்கையெழுத்தும் போடுறது. எப்படி நிலைமை என்றதை ஒருக்கா யோசித்துப் பாருங்களன்.

**மூப்பர்:** அதுமட்டுமே வடக்கு மாகாண சபையில ஆருக்கு எதிராகக் கடிதம் எழுதுறதாக இருந்தாலென்ன? கையெழுத்துப் போடுறதா இருந்தால் என்ன? எல்லாம் ஹோட்டலில விருந்து கொடுத்துத்தானே நடக்குது.

**கங்காணி:** அது சரி மூப்பர் ஹோட்டலில சாப்பிடறதுக்கு ஆரு காசு கொடுக்கினம்.

**மூப்பர்:** இப்பதானே காசு கொடுக்கிறதுக்கு எத்தனையோ பேர் இருக்கினம். வடக்கு மாகாண சபையைக் குழப்புறதுக்கு முதலமைச்சருக்கு எதிராக செயற்படுவதற்குக் காசு கொடுக்கிறதில சிலர் முண்டியடிப்பதாகக் கேள்வி.

**பண்டிதர்:** என்ன இருந்தாலும் தமிழ்மக்களின்ர வாக்குகளைப் பெற்று பதவிக்கு வந்தவியள் ஹோட்டலில சாப்பிட்டுச் சாப்பிட்டு கடிதம் எழுதுறது அவ்வளவு நல்லதல்ல.

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா! அதுகள் இளம் பிள்ளையள். கொழும்பில இருந்து அழுத்திற றிமோட்டில இயங்குதுகள். பாவங்கள் எங்கட தமிழ்மக்கள் பற்றி அவர்களுக்குத் தெரியாது போல. உரிய நேரத்தில் எங்கட சனங்கள் தக்கபாடம் புகட்டுவினம்.

**கங்காணி:** வாத்தியார் நீங்கள் என்ன சொன்னாலும் இந்தக் கருத்தில எனக்கு உடன்பாடில்லை. எங்கட சனங்கள் அரசியலைத் தெளிவாக அறிந்து கொள்ளாமல் செயற்பவடுவதால தான் எங்களுக்கு இந்தக்கதி. எங்கட மக்கள் அந்தந்த நேரத்தில தக்க பாடம் புகட்டுவினமாக இருந்தால் எங்கட வடக்கு மாகாண சபை அந்த மாதிரி நடக்கும்.

**விதானையார்:** கங்காணியார் சொல்லுறதை நானும் ஆமோதிக்கிறன். எங்கட சனங்களை அரசியல்வாதிகள் நல்லா ஏமாற்றப் பழகி விட்டினம். இல்லையெண்டால் அடுத்த தேர்தலில எப்படியாவதும் வெல்ல வேண்டும் எண்ட பயத்தில வடக்குமாகாண சபையில இருக்கிற உறுப்பினர்கள் சிலர் தங்களை அடக்கி



கொள்ளுவினமல்லோ.

**மூப்பர்:** இதை ஏன் சொல்லுறியள். விக்னேஸ்வரன் ஐயாவுக்கு விழுந்த வாக்கில பதவி பெற்றவியள் இப்ப எப்படி நடந்து கொள்ளுகினம் பார்த்தியளோ நாசமாப்போன விகிதாசாரப் பிரதிநிதித்துவம் வீட்டில கேட்ட எல்லாரையும் வெல்ல வைக்குது. தொகுதி ரீதியான தேர்தல் எண்டால் சனங்கள் தங்களுக்கு விருப்பமான- தங்களுக்குச் சேவையாற்றக்கூடியவரைத் தேர்ந்தெடுப்பினம். அவரும் மக்களை நினைத்துப் பக்குவமாக நடப்பார்.

இது என்னடா என்றால் அவருக்கு விழுந்த புள்ளடியில எனக்குமென்றால் தேர்தலில வென்ற ஆருதான் மக்களை நினைக்கப்போகினம்.

**பண்டிதர்:** எல்லாம் இருக்கட்டும்: எங்கட வடக்கு மாகாண சபையில நடக்கிற கூத்துக்கள் எங்கட சம்பந்தர் ஐயாவுக்குத் தெரியாதோ.

**வாத்தியார்:** சம்பந்தர் ஐயா பாவம். அவர் 2016 ஆம் ஆண்டில இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட வேண்டும் என்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார். அதால இஞ்ச நடக்கிறது எதுவும் அவருக்குத் தெரியாது.

**மூப்பர்:** ஏன் கூட இருக்கிறவியள் சொல்லலாம்தானே!

**வாத்தியார்:** கூட இருக்கிறவர்தான் குழப்பத்திற்குக் காரணம் எண்டால் அவர் என்னத்தைச் சொல்லுவார். தனக்குச் சார்பானதை- தனக்குச் சாதகமானதைத் தானே சொல்லுவார்.

**விதானையார்:** எல்லாம் எங்கட தலைவிதி.

**மூப்பர்:** விதானையார் அப்படிச் சொல்லாதீங்கோ. தலைவிதி எண்டால் அதை மாற்ற வேணும். நாங்கள் போரில எவ்வளவை இழந்திட்டம். பொருள் பண்டத்தை இழந்தாலும் பரவாயில்லை. எங்கட உறவுகளை இழந்திட்டம். நடந்த போராட்டத்தில என்ர இரண்டு ஆம்பிளப் பிள்ளையள் மாவீரராய்ப் போனாங்கள். இந்தத் தியாகங்களுக்கெல்லாம் ஒரு முடிவு தேவையில்லையோ. எத்தனையோ சனங்கள் தங்கட உறவுகளை இழந்து போட்டுக் கண்ணீரும் கம்பலையுமாகத் திரிய எங்கட வாக்குகளில வென்ற உவையள் ஹோட்டலில சாப்பிட்டுக்கொண்டு எங்கட சனங்களுக்குத் துரோகம் இழைக்கினம். இவையள ஒருபோதும் நாங்கள் மன்னிக்கக் கூடாது.

(மூப்பர் ஆவேசமாகப் பேசியபோது மாநாட்டில் நிசப்தம் நிலவிற்று. கலங்கிய தன் விழிகளை தோளில் கிடந்த துவாய்த் துண்டால் மூப்பர் ஒற்றிக்கொண்டார்)

மூப்பரின் ஆவேசம் நியாயமானதுதான். மலைபோல இரண்டு ஆண்பிள்ளைகளை மாவீரராகக் கொடுத்த மூப்பருக்குத் தாளாத வேதனை. இருந்தும் என்ன செய்வது வடக்கு மாகாண சபையில் இருக்கிற சிலரால் தமிழர் அரசு படுதோல்வி கண்டு விட்டது.

வடக்கு மாகாண சபையில் ஒரு நல்ல முதலமைச்சர் இருக்கின்றபோதிலும் அவருக்குத் தீராத தொல்லை கொடுத்து அவரை இங்கிருந்து வெளியேற்றவேணும் என்ற செயன்முறையை சிலர் விடாப்பிடியா கச் செய்து கொண்டிருக்கும் போது யார் என்ன செய்ய முடியும்.

புள்ளடி போட்ட கைகளுக்கு இன்னொரு சந்தர்ப்பம் கிடைக்கும் வரை மௌனமாக இருப்பதைத் தவிர வேறு வழியேதுமில்லை என்பதுதான் தமிழ் மக்களின் நிலைமை என்பதை கூறுவது போல மாநாட்டின் நிசப்தம் அர்த்தப்படுத்திக் கொண்டது.

மாநாட்டில் நிலவிய நிசப்பதத்தை முடிவுக்குக் கொண்டு வர மாநாட்டின் தலைவர் பண்டிதர் பரமலிங்கம் முயற்சித்தார்)

**பண்டிதர்:** மூப்பர் சொல்லுறதில நிறைய உண்மை இருக்குது. மூப்பரைப்போல எத்தனையோ பெற்றோர்கள் தங்கட பிள்ளையளைப் பறிகொடுத்துவிட்டு வாழும் காலம் வரை கண்ணீர் விடுவதே தங்கள் விதி என்றிருப்பதை நாங்கள் எவரும் மறந்துவிடலாகாது. ஆகையால ஆலடி மாநாட்டில ஒரு முக்கியமான- விசேடமான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவம்.

**வித்தானையார்:** பண்டிதர் ஐயா என்ன தீர்மானம்?

**பண்டிதர்:** தமிழ்மக்களின்ர இழப்புகள், துன்பங்கள் இவற்றைக் கருத்திற் கொண்டு வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் பொறுப்போட நடந்து தமிழ்மக்களுக்கு மாகாண அரசால் செய்யக்கூடிய உச்சபட்சப் பணிகளைச் செய்வதற்குத் திடசங்கற்பம் பூண வேண்டும். பதவி ஆசையை விட்டு மக்கள் நம்பி அளித்த வாக்குகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். ஹோட்டல்களில கூடிச்சாப்பிட்டு சதித்திட்டம் தீட்டுவதைக் கைவிட்டு தியாகம் நிறைந்த அரசியல்வாதியாக, மக்களின் மனங்களை வென்று அவர்களால் போற்றப்படக்கூடிய அரசியல்வாதிகளாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தை இந்த நேரத்தில எடுத்துக்கொள்வம்.

(பண்டிதர் இப்படிக்கூறியதும் மாநாட்டில் இருந்த அனைவரும் தீர்மானத்தை ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். இதையடுத்து ஆலடி மாநாட்டுத் தீர்மானத்தின் படி வடக்கு மாகாண சபை உறுப்பினர்களைச் செயற்படுமாறு வினயமாக வேண்டுகோள் விடுக்கப்பட்டது)

**பண்டிதர்:** தொடர்ந்து மாநாட்டு செயலாளர் வாத்தியார் வைத்திலிங்கம் மாநாட்டிற்கு வந்த முறைப் பாட்டை வாசிப்பார்.

**வாத்தியார்:** பாடசாலையில நடந்த விளையாட்டுப்போட்டியில வடமராட்சியைச் சேர்ந்த மாணவன் ஒருவன் நாடியில காயப்பட்டு மந்திகை வைத்தியசாலைக்குப் போனவராம். இரத்தம் பாய்ந்து கொண்டிருந்தபோதிலும் மூன்று மணித்தியாலமாக அந்த மாணவனுக்கு எந்தச் சிகிச்சையும் அளிக்கப்படவில்லை.

இது பற்றி மாணவனின் தந்தை குறித்த விடுதிக்கு பொறுப்பா இருந்தவரைக் கேட்டபோது அவர் சீறிப் பாய்ந்து வேறு எங்க எண்டாலும் கொண்டு போய் ரீட்மெண்ட் செய் என்று சொல்ல, எதுவும் செய்யமுடியாத தந்தை உட னடியாகத் தனது மகனைக் கூட்டிக்கொண்டு போய் தனியார் வைத்தியசாலையில காட்டி நாடிக்காயத்திற்கு நாலு தையல் போட்டவராம்.

இதுதொடர்பில மந்திகை வைத்தியசாலை நிர்வாகம் விசாரணை நடத்த வேணும் என்பது அந்தத் தந்தையின் கோரிக்கை.

இதுபற்றி மந்திகை வைத்தியசாலையில விசாரணை செய்து அதுபற்றி தகவல்கள் வெளிவந்தால் நாங்களும் அதை மாநாட்டில தெரியப்படுத்தலாம்.

இப்படி வாத்தியார் சொல்ல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்



# 2016 இல் சம்பந்தரின் நம்பிக்கை

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தரின் உடல் நிலை தளர்ந்து வருகிறது என்பதை ஓரளவுக்கு ஊகிக்க முடிகிறது.

அண்மையில் ஸ்கொட்லாண்டுக்கு சென்றிருந்த சம்பந்தர் எந்த இடத்திற்குச் சென்றும் கூட்டங்களில் பங்கேற்க முடியாத அளவில் அவரின் உடல் நிலை பாதிப்படைந்திருந்தது.

இதனால் அவர் தங்கியிருந்த வீட்டிற்கு கட்சி ஆதரவாளர்கள் சென்று சந்தித்ததாகவே தகவல். இதுதவிர,

இலங்கையின் 68 ஆவது சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்ட சம்பந்தர் கதிரையில் இருந்து எழும்ப முயற்சித்தும் முடியாமல் போக, அவருக்கு அருகில் நின்ற முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிறேமதாசவின் மணைவி ஹேமா பிறேமதாச கரம் கொடுத்து சம்பந்தர் எழுந்து நிற்பதற்கு உதவி செய்தார்.

சிலவேளைகளில் சிங்களவர்கள் கைகொடுக்காமல் தமிழர்கள் எழுந்து நிற்க முடியாது என்ற தத்துவ உபதேசம் சுதந்திர தின நிகழ்வில் உணர்த்தப்பட்டதோ என்று கூட எண்ணத் தோன்றும்.

எதுவாயினும் சம்பந்தரின் உடல் நிலையில் பாதிப்பு தமிழ்மக்களுக்கு அவ்வளவு நல்லதல்ல. சம்பந்தர் உடல் ஆரோக்கியத்து டன் வாழவேண்டும் என்பதுதான் தமிழ் மக்களின் பிரார்த்தனை.

இருந்தும் சம்பந்தரோடு கூட இருக்கின்ற ஒரு சிலர் அப்பன் சாவது எப்போ? அமாவாசை பிடிப்பது எப்போ? என்ற நினைப்பில் இருப் பதும் தெரிகிறது.

இன்றைய சூழ்நிலையில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் ஆரோக்கியத்துடன் இருப்பது கட்டாயமானது. தமிழ்மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் மிக ஆழமான புலமை யும் அனுபவமும் கொண்ட சம்பந்தரின் உடல் நலம் பாதிக்கப்படுமாயின் அதனால் தமிழ்த் தலைமைக்குக் கடும் போட்டி ஏற்படும் என்பது சர்வ நிச்சயம்.

சம்பந்தருக்குப் பின் அடுத்த தலைவர் யார் என்ற கேள்வி தமிழ்மக்களிடம் இன்னும் எழவில்லை. அதற்கான தேவை இருப்பதாகவும் தமிழ்மக்கள் உணரவில்லை. சம்பந்தர் ஐயா பார்த்துக்கொள்வார் என்ற நினைப்பு தமிழ்மக்களிடம் இருக்கின்ற போதிலும் சம்பந்தருக்கு அருகில் இருப்பவர்களின் நினைவெல்லாம் வேறு.

ஆக, தமிழ் அரசியலில் இருக்கக்கூடிய சின்னத்தனங்களை நினைக்கும்போது உலக தத்துவத்தை உணராத பிறவிகளா நாம் என்று எண்ணத் தோன்றும்.

எதுவாயினும் சம்பந்தர் ஐயாவின் உடல் ஆரோக்கியம் அதிரடியாகக் குறைந்து போவதற்குள் அரசியல் எதிர்பார்ப்புக்களின் தோல்விகளும் எங்கள் மக்களுக்கு எதனையும் பெற்றுக்கொடுக்க முடியவில்லையே என்ற ஏக்கமும் காரணமாகலாம்.

என்ன செய்வது தமிழர் என்பதால் மன உளைச்சல்களும் எங்களின் ஆயுளுக்குச் சவாலாக இருக்கின்றது என்பது மட்டும் உண்மை.

இவை ஒருபுறம் இருக்க 2016 ஆம் ஆண்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்பதில் அதீத நம்பிக்கை கொண்டிருந்த சம்பந்தரின் தற்போதைய நிலை என்ன? என்பது தெரியவில்லை. இருந்தும் 2016 ஆம் ஆண்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுவிடும் என்பதில் சம்பந்தர் உறுதியாக இருக்கிறார் என்றே கூறவேண்டும்.

பொலிஸ், காணி அதிகாரம் என்பவற்றை எடுத்துக் கொண்டு வடக்கு கிழக்கு இணைவு என்பதைக் கைவிட்டு ஒற்றையாட்சிக்குள் தீர்வு காண்பதுதான் ஒரேவழி என்ற நினைவு சம்பந்தரிடம் இருந்தது என்பதும் உண்மை.

எனினும் கடந்த 21 ஆம் திகதி கிளிநொச்சியில் நடந்த தமிழரசுக் கட்சி மாநாட்டில் வடக்கு, கிழக்கு இணைந்த சமஷ்டி கட்டாயம் தேவை என சம்பந்தர் உரக்கக்கூறியமை தமிழ் மக்களிடம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டது.

சடுதியாக சம்பந்தர் இப்படிக் கூறியது ஏன்? என்ற வாதப்பிரதிவாதங்கள் எழுகின்ற போது இது வழமையான ஒன்றுதான். தமிழர்பகுதியில் கதைப்பதும் தென்பகுதியில் கூறுவதும் வேறுவிதமானவை. அதாவது தமிழ் ஊடகங்களுக்கு ஒரு மாதிரியாக, ஆங்கில-சிங்கள ஊடகங்களுக்கு வேறு விதமாகக் கருத்துரைக்கின்ற கலாசாரம் சம்பந்தரிடமும் அவர் சார்ந்த முக்கிய தரப்பினர்களிடமும் இருப்பது வழக்கமே என்று உரைப்போர் ஒரு புறம்.

தமிழ்மக்கள் பேரவை இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தைத் தயாரிப்பதால் அந்தத் தீர்வுத் திட்டம் எவ்வாறாக அமையும் என்பதை ஊகித்துக் கொண்ட சம்பந்தர் அதற்கு இசைவாகக்கூறுகிறார் என்பது இன்னொரு புறம்.

இந்த இரண்டிற்கும் மாறாக பொலிஸ், காணி அதிகாரங்களுடன் கூடிய ஒற்றை ஆட்சியை ஏற்றுக் கொள்வதென சம்பந்தர் அரசுக்கு உத்தரவாதம் கொடுத்து விட்டார். இனப் பிரச்சினைத் தீர்வு என்ற ஒன்றை இலங்கை அரசு முன்வைப்பதாக இருந்தால் அது ஒற்றையாட்சி என்ற எல்லைக்குள்தான் நடந்தேறும்.

எனவே அப்படியானதொரு தீர்வு வருகின்ற போது சம்பந்தர் சமஷ்டி கேட்கத் தவறிவிட்டார் என்ற குற்றச்சாட்டும் கூடவே எழும்.

இந்தக் குற்றச்சாட்டில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டிதான் எங்களுக்குத் தேவை எனக் கூறுவது எல்லாக் குற்றச்சாட்டுக்களுக்கும் தோச நிவாரணமாக அமையும் எனக் கருதிய சம்பந்தர் கிளிநொச்சியில் அவ்வாறு கூறினாரே தவிர, மற்றும்படி எது நடக்கப்போகிறது என்பது அவருக்கு நன்கு தெரியும் என்று கூறுவோர் மறுபுறம்.




எது எப்படியாயினும் 2016 ஆம் ஆண்டிற்குள் அரசியல் தீர்வு என்ற சம்பந்தரின் ஒரேயொரு தேர்தல் பிரசாரம் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வெற்றியைக் கொடுத்தது.

2015 ஆம் ஆண்டில் நடக்கும் பொதுத்தேர்தலின் போது 2016 ஆம் ஆண்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பதை நம்பாமல் எப்படி விடுவது. ஆக, ஒரே ஒரு வருடம் மட்டுமே. ஒரு வருடத்தைப் பொறுத்திருந்து பார்ப்பதில் அதிக சிரமம் இருக்க முடியாது. ஆகையால் கூட்டமைப்பிற்கு இன்னொரு சந்தர்ப்பம் கொடுக்கலாம் என்பது தமிழ் மக்களின் முடிவு.

எனவே 2016 இல் அரசியல் தீர்வு என்பது சாத்தியப்படாமல் போனால் அடுத்த தேர்தல் என்ற தேவை சம்பந்தருக்கு இல்லாமல் இருந்தாலும் கூட்டமைப்பிற்குப் பெரும் சவாலாகவே இருக்கும்.

ஏனெனில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பதற்கு ஈடாக காணாமல் போனவர்களுக்கு நடந்தது என்ன? தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்ற விடயங்களும் முன்னிற் கின்றன. இவற்றுக்கு உரிய பரிகாரம் காணப் படாவிட்டால் எல்லாம் கடினமே.

விதுரன்











# மட்டக்களப்பில் பேரவைக்கூட்டம் திரண்டெழுந்தனர் மக்கள் கூட்டம்



தமிழ் மக்கள் பேரவையின் நிபுணர் குழு தயாரித்த தீர்வுத்திட்ட முன்வரைபை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லும் பணியில் பேரவை முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த 31.01.2016 அன்று தீர்வுத்திட்ட வரைபை வெளியிட்டு வைக்கும் சம்பிரதாய நிகழ்வு நடை பெற்றபோது ஆயிரக்கணக் கான மக்கள் வீரசிங்கம் மண்டபத்தில் குழுமியிருந்த நிகழ்வு ஒரு பெரும் வரலாறாகிக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பில் கடந்த 07.02.2016அன்று தீர்வுத்திட்ட முன்வரைபு வெளியிட்டு வைக்கப்பட்டபோது ஆயிரக்கணக்கான மக்கள் அங்குகூடியிருந்தமை பேரவைக்கான பேராதரவை வெளிப்படுத்தி நின்றது.

எவரும் எதிர்பாராத வகையில் மட்டக்களப்பில் மக்கள் ஒன்றுகூடியதன் மூலம் வடக்கும் கிழக்கும் என்றும் இணைந்தே இருக்கும் என்பதை உறுதிப்படுத்துவதாக இருந்தது.

தமிழ்மக்கள் பேரவையின் இணைத்தலைவர் த.வசந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் இந்து, கத்தோலிக்க மதத்தலைவர் கள் கலந்து கொண்டனர். குறிப்பாக மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு யோசப் பொன்னையா அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு பேரவையை ஆதரித்து ஆற்றிய உரை வித்தியாசமானது மட்டுமன்றி மிகவும் பெறுமதியானதாகவும் இருந்தது.

அவர் ஆற்றிய உரையில் தமிழ்மக்களுக்கு பலமான ஒரு அரசியல் தலைமை தேவை. இருக்கின்ற அரசியல் தலைமை சரியாகச் செயற்படவில்லை. எனவே அவர்களை சரியான பாதையில் வழிப்படுத்துவதற்கு தமிழ்மக்கள் பேரவை என்ற மக்கள் அமைப்புத் தேவையானது.

இதேவேளை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஒரு நேர்மையான தலைவர், தமிழ்மக்கள் மீது உண்மையான விசுவாசம் கொண்டவர்.

அவர் பேரவையின் தலைவராக இருப்பது வரவேற்கப் படவேண்டும். மக்கள் அனைவரும் தமிழ் மக்கள் பேரவையை ஆதரிக்கவேண்டும் என மட்டக்களப்பு- அம்பாறை மறைமாவட்ட ஆயர் மேதகு யோசப் பொன்னையா கூறியபோது பேரவைக்கூட்டத்தில் பலத்த கரகோசம் ஒலித்தது.

தொடர்ந்து தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்கும் நிபுணர் குழுவில் இடம்பெற்றிருந்த சட்டத்தரணி எஸ். விஜயகுமார் தீர்வுத்திட்ட வரைபு தொடர்பில் பொது மக்களுக்கு விளக்கமளித்தார்.

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட முன்வரைபு மக்கள் மத்தியில் வெளியிடும் நிகழ்வு மட்டக்களப்பில் நடைபெற்றபோது அங்கு கூடியிருந்த மக்களின் எண்ணிக்கை வடக்கு கிழக்கு இணைந்த சமஷ் டிக்கு கிழக்கு மாகாண மக்கள் கொண்டுள்ள ஆதரவை காட்டுவதாக இருப்பது இங்கு கவனிக்கத் தக்கது.

கடந்த 07.02.2016 அன்று நடந்த இந்நிகழ்வில் பேரவையின் இணைத் தலைவர் த. வசந்தராஜா உரையாற்றுகையில்,

வடக்கும் கிழக்கும் இணைந்த சமஷ்டியே தமிழ் மக்களுக்குத் தீர்வாக அமைய முடியும் எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் வாழ்த்துச் செய்தி பேரவை உறுப்பினர் சோமசுந்தரத்தால் வாசிக்கப்பட்டது.













## வியாசர் பதில்கள்

**அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்**

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



**தெறி டீசர் மாபெரும் வெற்றி அதனால் படமும் பெற்றிபெறும் என்கிறார்களே?**

**செவ்வாய் கிரகத்தில் மனிதர் வாழலாமா?**

**மகாகவி பாரதியார் பற்றி?**

சி.டெனிஷன் — வளலாய்

**கள்ளச் சாமியார்கள் பற்றி?**

கடவுள் தண்டனை தரமாட்டார் என்பதை நூறு வீதம் நம்புபவர்கள்.

மியா — யாழ்ப்பாணம்

**சுயமாக மனக்கட்டுப்பாட்டுடன் இருப்பது எப்படி?**

குருவும் சீடனும் ஆற்றைக்கடக்க செல்கிறார்கள். அங்கே ஒரு இளம் பெண் தன்னை அக்கரை சேர்க்க கேட்கிறாள். பிரம்மச்சாரியான குரு மறுக்கிறார். சீடன் அப் பெண்ணை தூக்கிக் கொண்டு அக்கரை சேர்க்கிறான். சீடன் செய்த விடயத்தை குரு அன்று முழுவதும் கூறிக் கொண்டே இருந்தார். அதற்கு சீடன் சொன்னான் **குருவே நான் அந்தப் பெண்ணை ஆற்றங்கரையில் விட்டு விட்டு வந்துவிட்டேன். ஆனால் நீங்கள் இன்னும் அப் பெண்ணை உங்கள் மனதில் இருந்து இறக்கவில்லை** என.

கௌசிதாஸ் — குப்பிளான்

**மகாகவி பாரதியார் பற்றி?**

உலக அத்தியாயத்தின் உச்சி. உலகத் தமிழன் உயிர் மூச்சு.

மைத்திரி — மல்லாவி

**அண்ணன் தங்கச்சி உறவு பற்றி?**

காற்று, மழை, வெயில், குளிர், பனியில் கஷ்டப்பட்டு வேலை செய்யும் ஒவ்வொரு ஆணையும் கேட்டுப்பாருங்கள் அந்த கஷ்டத்தின் பின் **தங்கை** என்கின்றவளின் அழகான வாழ்க்கை இருக்கும். அவளின் வாழ்விற்காக தன்னை தியாகம் செய்துகொண்டிருப்பான் அந்த தியாகி.

தனு — அல்வாய்

**ஒரு சில பெண்களின் நடவடிக்கையால் ஒட்டு மொத்த பெண்களையும் தவறாக நினைக்கலாமா?**

தன் காதலி தன்னை ஏமாற்றி விட்டாள் ச்சி... இந்த பெண்களின் குணமே இப்படித்தான். அவளின் வாழ்வை சீரழித்து அவளை நிம்மதியாக வாழ விடமாட்டேன் இது என் தாய் மீது சத்தியம் என்கிறான் காதலியால் ஏமாற்றப்பட்ட காதலன். தன் தாயும் ஒரு பெண் என்பதை புரிந்திடாமல்.

கோபி — மந்திகை

**அங்கிள் நீங்க எந்த ஹீரோ மாதிரி இருப்பீங்கள்?**

அறுபதில் எம்.ஜி.ஆர்., எண்பதில் ரஜனி, தொண்ணூறில் பிரசாந், இரண்டாயிரத்தில் மாதவன், இப்போது சிவகார்த்திகேயன்.

கோபிதன் — அல்வாய்

**வயது வித்தியாசம் பார்க்காத திருமணங்கள் பற்றி?**

என்று வெளிநாடு என்பது எம் வாழ்வில் புகுந்ததோ அன்றைக்கே வயது வித்தியாசம் பார்க்காமல் திருமணத்திற்காக பெண்களை அனுப்பும் கலாசாரம் ஆரம்பமாகிவிட்டது. வெளிநாடு என்றவுடன் பெற்றோர்களும் பெண்ணின் மனதைப் பார்க்காமல் அனுப்புகிறார்கள். அவர்களும் விருப்பு வெறுப்பை கடந்து ஜடமாக கிடக்கிறார்கள் நான்கு சுவருக்குள்.

ஜனு — கோண்டாவில்

**அன்பை ஆயுதமாக்கி அடிமைப்படுத்த நினைப்பவர்களைப்பற்றி?**

அன்புக்கினியவர்களே அதற்கு பெயர் அன்பு இல்லை என்பதை முதலில் புரிந்து கொள்ளுங்கள். அன்பு ஓர் ஆயுதம்தான். அதை மற்றவர் மனதை சாகடிக்கும்படி செய்திடாதீர்கள் பிளீஸ்.

சுஜி — விசுவமடு

**ஆண்களை ஏமாற்றும் பெண்களைப் பற்றி?**

எரிந்த வீட்டில் பிடுங்கியது மிச்சம் என்று விட்டு விட வேண்டியது தான்.




அரன் — மந்துவில்

**தத்துவம் சொல்லுங்க பிளீஸ் வியாசர்?**

அப்பளத்தை உடைச்சுத்தான் பொரிக்கிறோம். ஆனா உடைஞ்ச அப்பளத்தை கடைக்காரன் தந்தா வேண்ட மறுக்கிறோம்.

வே.அகிலேஸ்வரன் — மருதங்கேணி

**பெண்ணழகு எதிலுண்டு?**

அது பார்ப்பவர் கண்களைப் பொறுத்தது.

கிருஷா — வரணி

**தன்வினை தன்னைச் சுடும் என்பதன் அர்த்தம் என்ன?**

வன்னியில் கொத்துக் கொத்தாய் சிறுவர்கள் செல்பட்டு சிதறிப் போனார்கள். தாய் உயிரிழந்துக்கிடக்க குழந்தை தாய் மார்பில் பால் குடித்துக் கொண்டிருந்தது. இவ்வாறு மனதால் சிந்திக்க முடியாத கொடுமைகளுக்கு பதில் **பயங்கரவாதத்திற்கு எதிரான போர்** என்று கர்ச்சித்தவர் இன்று தன்மகனை சிறை புகுத்தி விட்டார்கள் என கண்ணீர் விட்டு அழுகிறார். **எங்களுக்கு வந்தா தக்காளிச் சட்னி உங்களுக்கு வந்தா இரத்தமா?** இது வடிவேலுவின் நகைச்சுவை ஒன்று.

நித்திலன் — யாழ்ப்பாணம்

**தெறி டீசர் மாபெரும் வெற்றி. அதனால் படமும் பெற்றிபெறும் என்கிறார்களே?**

அண்டப் புலி, ஆகாசப் புலி, ஆளவந்த புலி, ஆளப் போகும் புலி இப்படியெல்லாம் புலிக்கு புறமோசன் செய்தது நினைவிருக்கிறதா? இரண்டு மணித்தியாலத்திற்கும் 20 செக்கன்களுக்கும் வித்தியாசம் இருக்கிறதல்லவா?

சமீதரன் — நயினாதீவு

**செவ்வாய் கிரகத்தில் மனிதர் வாழலாமா?**

அதற்கான ஆய்வுகள் தீவிரமாக நடந்து கொண்டிருக்கிறது. இந்த ஆய்வை உலக நாடுகள் போட்டி போட்டு வருகிறது. முதல் செவ்வாயில் கால் வைப்பவன்தான் செவ்வாயின் வல்லரசு.

சயன் — யாழ்ப்பாணம்

**மாகாண சபையில் அடிபிடியாமே?**

முதலமைச்சரை வீட்டுக்கனுப்ப ஒரு குழு முயற்சிப்பது தெளிவாகத் தெரிகிறது. அன்புச் சகோதரர்களே! நீங்கள் நினைப்பது கனவிலும் நடக்காது.
நீங்கள் எங்கள் முதலமைச்சர். நீங்கள் எங்களுக்கு வேண்டும் என்றீர்கள். அதற்கிடையில் .... ம்... அடுத்த தேர்தலுக்கு வருவீர்கள் தானே அப்போது உங்களைப் பார்த்துக் கொள்கின்றோம். இது தமிழ் மக்களின் குரல்.

சூரியகாந்தி — யாழ்ப்பாணம்

**தற்கொலைகள் ஏற்பட பிரதான காரணம் என்ன?**

என் பாட்டி எனக்கு நிறைய கதைகள் கொல்லியிருக்கிறாள். அவள் ஒருமுறை கூட அந்தக் காலத்தில் தற்கொலை நடந்ததாகக் கூறியதே இல்லை. அறிவியல் என்று வளர்ந்ததோ அன்றே ஆரம்பமானது இந்தத் தற்கொலைகள்.

## திருநங்கையின் கண்ணீர்

இறைவா...!
எத்தனை கவிதைகள்
எழுதிவிட்டாய் நீ
இருப்பினும் ஏனோ
என்னை மட்டும்
பொருத்தமில்லா தாளில்
புனைந்து விட்டாயே
உன் வஞ்சனையால்
இன்று இந்த
கவிதையின் பெயர் "திருநங்கை"
என்னை நான்
பெண்ணாய் உணர்ந்து
விட்டேன் எனக்குள்ளும்
புதைந்துகிடக்கின்றன
பெண்மையின்
மென்மைகள்
இருப்பினும் ஏனோ
மற்றப் பெண்கள் போலில்லாமல்
விசித்திரக் கண்களால்
அவதானிக்கப்படுகிறேன் நான்
பூரானைச் சுமக்கும் தேங்காயின்
சிரட்டையைப் போல
என் பெண்மையை
சுமந்து நிற்கிறது
இந்த ஆண்மையின் உடல்
மலரவும் முடியாமல்
உதிரவும் முடியாமல்
மொட்டாய் கருகிக் கொண்டிருக்கும்
மல்லிகை நான்
மனதில் பெண்மை தந்த- உனக்கு
உடலில் மென்மை தர
தெரியவில்லையே
இறைவா...!
கெஞ்சிக்கேட்கிறேன்
இப்படி ஒரு கொடுமை
இனிவேண்டாம்

நிலவன்



## முதுமைத்தாயின் வலி

உன்னோடு தினம் வாழும்
வரம் ஒன்று கேட்டேன்- அவள்
கைதொட்டதால் என்னைக்
கைவிட்டாய் நீ
உன்னால்
உறக்கம் மறந்த
பொழுதுகள் ஏராளம்
உலகை மறந்த
தருணங்கள் தாராளம்
உணவை விடுத்த
பொழுதுகளிலெல்லாம்
நீ உண்ண
மகிழ்ந்திருந்தேன் நான்
சில நேரங்களில் நீ
ஓய்வாக இருந்தால்
சிந்தித்துப்பார்
நீர் சிந்தும் கண்கள்
நீ சிந்தும் இரத்தம்
எவையேனும்
உன்னுடையதா என்று
கடனைக் கொடுத்து
கேட்க மறுப்பது நான்
கடனைப் பெற்றுத்
தரமறுப்பது நீ
காத்திருக்கிறேன்
உனக்காகக்
கடைசியிலேனும் கைதடிக்கு வா
எனக்குக் கொள்ளியிட
நீ மட்டும்தானே?

இ.நவதர்சினி
வயாவிளான்

அண்டம் உடைந்து விழ
ஆகார்சம் பிளந்துடைய
கடல் வற்றிப்போய்
காற்றில்லாது போக
மனிதன் மாண்டுபோக
மரங்களெல்லாம் கருகியுதிர
அண்டத்தை ஊடறுத்து
கண்டம் கடந்து
புதிய கிரகமதில்
வித்திட்டு விருட்சமாகும்
அதுதான் காதல்

மாவை. நா.கஜேந்திரன்

## தலைவன்

தலைவன் வகுத்த பாதை
தடம்புரண்டு போக
துடுப்பு இழந்த படகாய்
துடிக்கும் எங்கள் உள்ளம்
துணிந்து நடந்த பெண்கள்
துயரம் கொள்வதாலே
துணை இழந்தபோதும்
துவளவில்லை நாங்கள்
உமை இழந்தாலே
உறங்கவில்லை கண்கள்
உலகம் ஒன்று சேர்ந்து
ஓரம் கட்டியதாலே
பெண்கள் நிலை பேரவலம்

இளவரசன்
ஓட்டுசுட்டான்

## மரண அறிவித்தல்

பத்திரிகையின் பக்கங்கள்
நிரப்பப்படுகின்றன...
பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் என
பக்கம் பக்கமாய்...
உயிரோடு இருக்கையில்
நலம் விசாரிக்க...
உடனிருந்து தனிமை போக்க
கைத்தாங்கலாய் அழைத்துச் செல்ல...
கதைபேசி மகிழ...
இப்படி சின்ன சின்ன
தேவைகள் தீர்க்க
யாருமில்லாமல் போய்விடுகிறார்கள்

ஜெ.சிந்து
வேலணை



## மனிதம்

வறுமைத் தீ பற்றியது
மழலை வயிற்றை
சகோதர பாசம் நிமிர்ந்தது
மழலையை அணைக்க உயர்ந்தன
சில்லறைகளுடன்
உதவிக்கரங்கள்
பதிவு செய்தன
மனிதம் இன்னும்
கல்லறைக்குள்
முடங்கவில்லையென்று

அராலியூர்
சோ.சிவகுமாரன்

## கிடைத்திடுமா?

ஏந்தும் சிறு கரங்கள்
பசி ஏக்கத்தின் நேரங்கள்
ஆதரவற்ற கோலங்கள்- அவர்கள்
வாழ்க்கையே சோகங்கள்
கிடைத்திடுமா? பணம் கையில்
எனும் சிறு பிஞ்சுகளின் ஏக்கங்கள்

ஞா.கட்டைக்கவிதன்
நெடுந்தீவு

## ஏது இனிமை

மனிதர் கொடுமையுடன்
வறுமையும் ஒன்று சேர்ந்தால்
இளமையிலும்
ஏது இங்கு இனிமை

வாணியழகன்
முரசுமோட்டை

# மௌனத்தின் தேடல்- 288

## கொடுமை

கண்களைப் பனிக்க
வைக்குமிக் கொடுமை
கண்டும் காணாதது போல்
அப்பால் செல்பவன்
நிச்சயமாக கண்களுக்குப் பதில்
இரண்டு புண்களை
உடையவனே
மீதிப்பேர் உங்களைக்
காக்கும் கடவுள்களே

எம்.என்.ஆரணி
அரியாலை

## வேண்டும் நம்பிக்கை

எதிரியின் பிள்ளைகளுக்குக்கூட
இந்நிலை வேண்டாமே
மனிதம் இருக்கும் வரை இப்புவியில்
இந்நிலை மாற்றப்படும் நிச்சயம்
கவலை வேண்டாம்
வேண்டும் நம்பிக்கை மட்டுமே

கே.சரணா
சித்தங்கேணி

## மாறுமா?

அநாதைகள்
ஆகாரத்திற்காய்
கையேந்தி
இடுக்கண் களைய
இடுப்பில் பையேந்தி
காலம் செய்த கோலம்
கண்ணீராய் நயனங்கள்

தான்தோன்றி
பண்டத்தரிப்பு

## தரணியில் தலைநிமிர்ந்து வாழ்வோம் யாம்

தாயுமில்லை தந்தையுமில்லை
தலையிலோ எண்ணெயுமில்லை
தரணியிலே கையேந்தப்
புறப்பட வைத்த தாயகமே
தயைகூர்ந்து பெரியோர்கள்
ஆதரவும் எமக்குண்டு
தலைநிமிர்ந்து வாழ்வோம் யாம்
என்றோவோர் நாள் உண்மை

கெருடயம்பதி
சு.தமிழ்மாறன்

## தயவுடன்

ஏதுமற்ற வேளையிலும்
இளையவரை இதில் சேர்த்திடாதீர்
கற்றுக்கொடுக்கும் வித்தைகளை
கற்றிடுவர் பாலகர்கள்
களவுதனைக் காட்டிவிட்டால்
கனத்த தொழிலாக்கிடுவர்
மீன்பிடிக்கக் கற்றுத்தந்தால்
மிகையாக வாழ்ந்திடுவர்
கைநீட்டி காசு வாங்க
கதைகள்கூறி பிச்சை கேட்பர்
நல்லவை கற்றிட்டால்
நற்பிரஜையாகிடுவர்

அணிஞ்சில், புவபாலன்

## கரம் கொடுப்போம் வாரீர்

சிறுவர் உரிமை கட்டாயக் கல்வி
ஆயிரம் சட்டங்கள்
ஐ.நா. இட்டாலும்
இந்நிலை மாற ஏது முயற்சி
கண் திறப்பீர் மக்களே!
ஏழைப் பாலகர் இந்நிலை மாறி
ஏற்றமுறச் செய்திடுவீர்
கரம் கொடுப்போம் கல்விக்காய்!
வளமளிப்போம் வாழ்வுக்காய்

திருமதி.தி.நவநீதகாந்தன்
வண்ணார்பண்ணை

## தலைவன்

நாட்டின் நாளைய தலைவர்கள் இன்று
பரிதவிக்கும் ஏழைகளாக
எங்கள் முன்னில்

ஜெ.தர்சிந்தன், தரம் -09

# மௌனத்தின் தேடல் -289



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 17.02.2016ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -




# சத்தியமே வெல்லும்

அக்பருடைய சபையில் இருந்தவர்கள் அனைவரிலும், பீரபால் மட்டுமே அக்பரின் பிரியத்திற்குப் பாத்திரமானவராக இருந்தார். இதனால் பீரபால் மீது சபையில் பலர் பொறாமை கொண்டிருந்தனர்.

ஒருநாள், பீரபால்மீது பொறாமை கொண்டவர்கள் ஒன்று கூடி அவருக்கு எதிராக சதி ஆலோசனை செய்தனர். அவருக்கு எப்படியாவது கெட்ட பெயரை உண்டாக்கிவிட வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். ஒவ்வொருவரும் ஒரு யோசனை கூற, தாவூத் என்பவர் பீரபாலை அவமானப்படுத்த தன்னிடம் ஓர் அருமையான திட்டம் இருப்பதாகக் கூறினார்.

"பீரபாலைப்பற்றி தவறாக எது சொன்னாலும் சக்கரவர்த்தி நம்பமாட்டாரே!" என்று மற்றவர்கள் சந்தேகம் எழுப்ப, "சொல்கிற விதத்தில் சொன்னால், சக்கரவர்த்தி கட்டாயம் நம்புவார்" என்று தாவூத் அடித்துக் கூறினார். உடனே மற்றவர்கள் தாவூதை உற்சாகப்படுத்தினர்.

"என் திட்டம் வெற்றி பெற வேண்டுமானால், நீங்கள் எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டும்!" என்று தாவூத் கூற, "அது என்ன?" என்று மற்றவர்கள் கேட்டனர்.

"நாளைக்கு நீங்கள் அனைவரும் வழக்கப்படி குறித்த நேரத்தில் தர்பார் வந்து சேருங்கள்.

நான் மட்டும் தாமதமாக வருவேன். நான் ஏன் வரவில்லை என்று சக்கரவர்த்தி உங்களைக் கேட்பார். உடனே நீங்கள், "தாவூத் ஒரு பயங்கரமான குற்றத்தைத் தன் கண்களால் பார்த்து விட்டார். அது அவருடைய மனத்தை மிகவும் பாதித்துவிட்டது. அதனால் அவர் தாமதமாக வருவார்" என்று சொல்லிவிடுங்கள். பிறகு நான் வந்து அது என்ன என்று அவரிடம் விளக்கிக் கூறுவேன்" என்று கூறினார் தாவூத்.

அனைவரும் அதற்கு சம்மதித்தப்பின் வீடு திரும்பினர். மறுநாள், தர்பார் கூடியது. பீரபல் உட்பட அனைவரும் குறித்த நேரத்தில் தர்பாருக்கு வந்து விட்டனர். தாவூத் மட்டும் வரவில்லை. அக்பர் தர்பாரில் நுழைந்ததும் அனைவரும் எழுந்து சலாம் செய்தனர். அக்பரும் புன்னகைத்தபடி தன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு அனைவர் மீதும், தன் பார்வையை செலுத்தினர்.

அதற்குள் ஒருவன் எழுந்து, "பிரபு! தாவூத இன்று தாமதமாக வருவதற்குத் தங்களிடம் அனுமதி கோரியுள்ளார்!" என்றார்.

"தாமதமாக வர என்ன காரணம்?" என்று அக்பர் கேட்டார். "ஒரு பயங்கரமான குற்றத்தை தன் கண் முன்னே நடக்கக் கண்டார். இதனால் அவருடைய உடல்சோர்ந்துவிட்டது. ஆகையால் சிறிது தாமதமாக வருவதாகக் கூறியுள்ளார்!" என்றார் அவர்.

சற்றுநேரத்தில் தாவூதே வந்து சேர்ந்து விட்டார். உடனே அக்பர் அவரைப் பார்த்து, "ஒரு பயங்கரமான குற்றம் நிகழ்வதை நீ பார்த்தாயாமே!" என்று கேட்டார்.

"ஆம் பிரபு!" என்றார் தாவூத். "அது என்ன குற்றம்? உடனே சொல்! யார் அந்தக் குற்ற வாளி?" என்று அக்பர் சீறினார்.



"அதை எப்படி என் வாயால் சொல்வேன் பிரபு? உங்களுடைய மிகுந்த நம்பிக்கைக்கும், அபிமானத்திற்கும் பாத்திரமான அவரைப் பற்றி என் வாயினால் எப்படிச் சொல்வேன் பிரபு? அதைக் கேட்டால், உங்கள் மனம் மிகவும் புண்படுமே!" என்று தாவூத் நாடக மாடினார்.

"சட்டத்தின் முன் அனைவரும் சமம்! அவன் யாராயிருந்தாலும் சரிதான்! அவன் யாரென்று உடனே சொல்!" என்று அக்பர் உறுமினார்.

"வேறு யாருமில்லை பிரபு! உங்களுடைய பீரபல்தான் அது!" என்றதும் அக்பர் அதிர்ச்சியுற்றார். பீரபலும் அதிர்ச்சியுற்றார். ஆனால் பீரபல் உடனே விஷயத்தைப் புரிந்து கொண்டார். தன் மீது வீண் பழி சுமத்த தாவூத் திட்டமிட்டுள்ளார் என்று தெரிந்துவிட்டது.

"என்ன பீரபலா?" என்று மிகுந்த வியப்புடன் அக்பர் கேட்டார்.

"ஆம், பிரபு! நான் என் கண்களினால் கண்டதைச் சொல்கிறேன்! நேற்று மாலை நான் வீடு திரும்பிக்கொண்டிருக்கையில், எனக்கு சற்றுத் தொலைவில் பீரபல் வந்து கொண்டு இருந்தார். திடீரென அவர் குனிந்து தரையில் கிடந்த ஒரு தங்க மாலையைப் எடுத்தார். பிறகு தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று சுற்று முற்றும் பார்த்தபின், மாலையைத் தன் பையில் போட்டுக் கொண்டு சென்று விட்டார். சிறிது நேரங்கழித்து அங்கு மிகுந்த பதற்றத்துடன் வந்த ஓர் இளைஞன் "என் தங்க மாலை வழியில் இங்கே எங்கோ விழுந்து விட்டது. அதைப்பார்த்தீர்களா?" என்று எல்லாரையும் கேட்டுக் கொண்டிருந்தான். அவனிடம் உண்மையைச் சொல்ல நினைத்தேன். அதற்குள் அவன் அங்கிருந்து சென்று விட்டான்" என்று தாவூத் அழகாகத் தான் கற்பனை செய்து வந்த கதையைக் கூறினார்.

அக்பர் கோபமாக, "பீரபல், இவர் உன்னைப் பற்றிக் கூறுவது உண்மையா?" என்று கத்தினார். "இல்லை பிரபு! நான் மாலை நேரத்தில் அங்கு வந்தது உண்மை! ஆனால் இவர் குறிப்பிட்டது போன்ற சம்பவம் எதுவும் அப்போது நிகழவில்லை" என்றார் பீரபல்.

"பிரபு! பின் நான் என்ன பொய்யா சொல்கிறேன்? பீரபல் மறைக்கிறார். நான் சொல்வது சத்தியம்!" என்றார் தாவூத்.

"பீரபல் எடுத்ததை நிரூபிக்க வேறு சாட்சிகள் இல்லாதபோது, நீ கூறுவதை நான் எப்படி நம்ப முடியும்?" என்று அக்பர் தாவூதை கேட்டான்.

"அதற்கு ஒரு சோதனை செய்து பார்க்கலாம். பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியை நான் எடுத்து வருகிறேன்.

அதை தன் கையில் பீரபல் பிடித்துக் கொள்ளட்டும். அவர் சத்தியவான் என்பது உண்மையானால், அந்தக் கம்பி அவரைச் சுடாது!" என்றார் தாவூத்.

அதைக் கேட்ட பிறகு பீரபலின் பக்கம் திரும்பிய அக்பர், "பீரபல், நீ இந்த சத்திய சோதனைக்கு உட்பட்டேயாக வேண்டும்! நீ ஒரு நிரபராதி என்பதை நிரூபித்துக் காட்டு! நீ சொல்வது சத்தியம்என்பதை அப்போதுதான் எல்லாரும் நம்புவார்கள்" என்றார்.

பீரபலின் மூளை வெகு விரைவாக வேலை செய்தது. உடனே அவர், "பிரபு! அந்த சத்திய சோதனைக்கு நான் தயார்! ஆனால் என் மீது குற்றம் சாட்டும் தாவூத் அவர்களும் தான் சொல்வது சத்தியம் என்பதை நிரூபிக்க வேண்டும்" என்றார்.

"அது எப்படி? அவர் என்ன செய்ய வேண்டும்?" என்று அக்பர் கேட்டார். "பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியை தாவூத் முதலில் தன் கைகளில் பிடித்துக்கொள்ள வேண்டும். பிறகு என்னிடம் தர வேண்டும்!" என்றார் பீரபல்.

அதுகேட்டு, அடிபட்ட நாயைப் போல் தாவூத் வீல் என்று கத்தினார்.

"ஐயோ! அது என்னால் முடியாது!" என்று அலறினார்.

"ஏன் முடியாது? நீ சொல்வதை நிரூபிக்க நீயும் அந்த சோதனைக்கு ஆளாக வேண்டும்" என்றார் பீரபல்.

உடனே தாவூத் அக்பரை நோக்கி, "பிரபு! என்னை மன்னித்து விடுங்கள்! சங்கிலியை எடுத்தது பீரபல் இல்லை. நான் தவறாகச் சொல்லிவிட்டேன்" என்று கூறி அவர் கால்களில் விழுந்து புலம்பினார்.

"பீரபல் மீது பொய்க்குற்றம் சாட்டிய இந்த அயோக்கியன் தாவூதை சிறையில் அடையுங்கள்" என்று காவலர்களுக்கு உத்தரவிட்ட அக்பர், பிறகு பீரபல் பக்கம் திரும்பி, "என்னை மன்னித்து விடு பீரபல்! நான் கூட உன்னை ஒருக்கணம் சந்தேகப்பட்டுவிட்டேன்" என்றார்.

# மின்சாரத்தை உற்பத்தி செய்யும் பக்டீரியா

நவீன யுகத்தில் புதுப்பிக்கப்பட்ட சக்திப் பயன்பாடு– மனிதக் கழிவுகழிலிருந்து சக்தியைப் புதுப்பித்தல் செயல்முறை ஒரு பொன்னான சக்தி வளமாக மிளிருகிறது.

மனிதனின் திரவக்கழிவான சிறுநீர், மறறும் திண்மக்கழிவு(மலம்) ஆகியவற்றிலிருந்து சக்தியை மீளவும் புதுப்பித்து பயன்படுத்தும் முறையானது, மனிதனின் சக்தித் தேவையின் ஒரு பகுதியை பூர்த்தி செய்கின்ற ஒரு சிறந்த வழியாகக் காணப்படுகிறது. அத்தோடு பூமியிலிருந்து கழிவுகளை அப்புறப்படுத்தி, சுற்றாடலை தூய்மையாக வைத்திருக்கவும் இது வழிவகை செய்கிறது.




நேரடியாக மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஜியோ பக்டீரியாக்கள்






வெளிநாடுகள் சிலவற்றில் இதன் பயன்பாடுகள் ஆச்சரியமளிப்பனவாக உள்ளன. உதாரணமாக ப்றிஸ்ரோல், லண்டன் ஆகிய நகராங்களில் வீடுகளிலிருந்து கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு என்று ஒரு *பயோ பஸ்* சேவையாற்றுகிறது.

இந்த பஸ், இயங்குவதற்கான சக்தியை *எரிபொருள் கலம்* வழுங்குகிறது. இந்த வாகனத்தின் பின்பகுதி இதற்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

ஐக்கிய அமெரிக்காவின் சில விமான நிறுவனங்கள், இயற்கை உரங்களை சூழலுக்கு சினேகமான ஜெற் எரிபொருளாக பயன்படுத்தத் தொடங்கிவிட்டன.

தென்கொரியாவில் நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு சக்தி வழங்கும் அமைப்பாக இந்த எரிபொருள் கலம் பயன்படுகிறது.

**எரிபொருட்லம்:** இந்தக் கலங்களுக்கு எரிபொருளாக, உயிர்வாயு என்று கூறப்படும் மெதேன் வாயு $(ch_4)$ பயன்படுகிறது. இந்த மெதேன் வாயுவானது, மனிதக் கழிவுளின் மீதான பக்டீரிய தாக்கத்தின் விளைபொருளாகும்.

இந்த பக்டீரியாக்கள் காற்றின்றிய சூழலில் வாழும் தகமையுடையவை. அதாவது காற்றின்றிய சுவாசத்தின் மூலம் தமக்குத் தேவையான சக்தியைப் பெறுகின்றன. எனவே காற்றுப்புகா வண்ணம் மூடப்பட்ட சமித்தல் தொகுதியினுள் வைக்கப்பட்ட திண்மக்கழிவுகளைத் தாக்கி, மெதேன் வாயுவை வெளிவிடுகின்றன. இந்த வாயு பச்சைவீட்டு வாயு என்பதை மாணவர்கள் அறிவர். இவ்வாயு பூமியிலிருந்து கதிர்வீச்சு மூலம் தப்பிச்செல்லும் வெப்பக்கதிர்களை தடுத்து பூமிக்கு அண்மையில் வைத்திருப்பதால், வளிமண்டலம் வெப்பமடைந்து புவி வெப்பமாதலுக்கு காரணமாகிறது. மேலும் இந்த வாயு எளிதில் தீப்பற்றக்கூடியதுமாகும். அத்தகைய வாயுவை விஞ்ஞானிகள், வளி மண்டலத்துக்குத் தப்பிச் செல்லவிடாமல், மூடிய குழாய்கள் வழியாகச் செலுத்தி சக்தியை மீளப் பெறும் ஒரு கலமாக வடிவமைத்துப் பயன்படுத்தும் அமைப்பை உருவாக்கினார்கள். அதுவே *எரி பொருட் கலம்* என்று அழைக்கப்படுகிறது. இந்த வாயு எரிக்கப்படும் பொழுது, கசோலின் வாயுவை விடவும், முழுமையான தகனத்துக்குள்ளாவதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி எரிபொருட் கலத்தினுள் நடைபெறுகின்ற செயற்பாடானது, இரசாயன சக்தியை மின்சக்தியாக மாற்றும் பொறிமுறையாகும். குழாய் வழியாக கலத்தினுள் செலுத்தப்படும் மெதேன் வாயு, கலத்தினுள் புகுந்ததும் அது, சூடாக்கப்பட்டு ஒட்சிசனுடன் தாக்கம் புரிந்து (எரிந்து) மின்சக்தியை உற்பத்தி செய்வதுடன், காபனீரொட்சைட்டையும் நீரையும் பக்கவிளைவாக தருகிறது.

**உயிர்த்திரை:** வெதவெதப்பான சூடு காற்றின்றிய பக்டீரியாக்களின் தொழிற்பாட்டை வேகமாக்குகிறது. பக்டீரியாக்களை வளர்ப்பதற்கு காபன் நாரினால் ஆன மேஷ் பயன்படுத்தப்படுகிறது. உயிரிகளைக் கொண்ட இந்த காபன் மேஷ் *உயிர்த்திரை* என்று கூறப்படுகிறது. இந்த உயிர்த்திரை மீது கழிவு நீரைச் செலுத்தி அதிலுள்ள பக்டீரியா உயிரிகளை சமிக்கவேண்டிய திண்மக் கழிவுகளுக்குள் கொண்டுவரப்படுகிறது. இவை அந்தக் கழிவுகளை உண்டதும் மெதேன் வாயுவை வெளிவிடுகின்றன.

**சிறுநீரிலிருந்து மின்சாரம்:** சிறுநீரைப் பயன்படுத்தி ஆக்கப்பட்ட இந்த மின்கல அடுக்கு, கைத்தொலைபேசிகளைச் சார்ஜ் செய்வதற்கும் அறைகளுக்கு ஒளியூட்டுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. இதற்கு 50மில்லிலீட்டர் சிறுநீர் போதுமானது. பெரிய அளவின் மின்னைப் பெறவேண்டும் எனின் 40 லீட்டர் அளவில் தேவைப்படும். குறைந்த அளவான மின் பாவனை போதுமென்ற மகக்ள், இந்த வகை நுண்ணுயிர் மின்கலத்தைப் பயன்படுத்த முடியும்.

**நுண்ணுயிர் மின்கலம்:** சில பக்டீரியாக்கள் (ஜியோ பக்ரர்) நேரடியாக மின்னை உற்பத்திசெய்யக்கூடியவை. இவை தமது அனுசேபத் தொழிற்பாட்டின்போது இலத்திரன்களை வெளியேற்றுகின்றன. அந்த இலத்திரன்களை நனோ வயர்களைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்வதன்மூலம், கதோட் முடிவிடத்தையும் மற்றும் அனோட்டையும் உருவாக்குவதன் மூலம் மின்னைப் பெறும் உத்தியை - அதாவது, இலத்திரன் ஓட்டத் திசைக்கு எதிர்த்திசையில்தான், மின்னோட்டம் நடைபெறுகிறது என நாம் அறிவோமல்லவா! அந்தவகையில் இந்த ஜியோ பக்டீரியாவிலிருந்து நேரடியாகப் பெறப்படும் மின்சாரம்தான் நுண்ணுயிர் மின்சாரம் என்று கூறப்படுகிறது.

கடலுக்கடலுக்கடியில் இத்தகைய நுண்ணுயிர்கள் அதிகம் காணப்படுவதால் கடலுக்கடியிலிருந்து சக்தியைப் பெறுவதில் இவை பயன்படுத்தப்படலாம்.

கழிவுகளை வெறுக்கும் மனித உலகம் இனி இந்த சக்திவழத்தையும் சுரண்டுவதற்குத் தயாராகிவிடும் என்பதில் பிழையேதும் இருக்காது.

பாமா

# பிரித்தானிய தமிழர் பேரவை அறிக்கை, த.தே.கூட்டமைப்பை எச்சரிக்கிறதா...?






பிரித்தானியத் தமிழர் பேரவை, இலங்கையின் 68வது சுதந்திர நாளை முன்னிட்டு ஊடக அறிக்கை யொன்றை கடந்த 04.02.2016 அன்று விடுத்திருந்தது. இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பல விடயங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமைக்கு இடித்துரைக்கப்பட்ட விடயங்கள் போலவே தோன்றின. இது பிரித்தானியத் தமிழர் பேரவை குறித்த பலரது அண்மைக் கால எதிர்பார்ப்புக்கு மாறாக அமைந்த அறிக்கையாகவும் இருந்தது.

கடந்த செப்டம்பர் மாதம் ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களால் நடாத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் பிரித்தானியத் தமிழர் பேரவை பங்குபற்றிய பின்னர், இவர்களும் உலகத் தமிழர் பேரவையினைப் போல, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைமை இலங்கை அரசு தொடர்பாக எடுக்கும் அணுகுமுறையினைப் பின்பற்றப் போகிறார்கள் என்ற கணிப்பு பலருக்கும் இருந்தது. முரண்பாடுகள் காரணமாக உலகத் தமிழர் பேரவையில் இருந்து விலகியிருந்த பிரித்தானியத் தமிழர் பேரவை மீண்டும் உலகத் தமிழர் பேரவையில் இணையப்போகிறது என்ற தகவலும் புலம்பெயர் தேசிய அரசியற் செயற்பாட்டாளர்கள் மத்தியில் பேசப்பட்டது.

ஆனால், பிரித்தானியத் தமிழர் பேரவையின் அறிக்கை ஆட்சிமாற்றத்தின் பின்னரும் தமிழ் மக்களின் அவல நிலையைச் சுட்டிக்காட்டுவதாக அமைந்திருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன், கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோர் சிறிலங்காவின் 68வது சுதந்திர தினத்தில் பங்குபற்றியிருந்தவொரு சூழலில் இது தமிழ் மக்களுக்கான சுதந்திரதினம் அல்ல என பிரித்தானியத் தமிழர் பேரவை பிரகடனம் செய்கிறது: இலங்கைத் தீவின் தென்பகுதிக்கு சுதந்திரம்!- வட கிழக்கு வாழ் மக்களுக்கு தொடரும் அவலம்!- என்ற தலைப்பில் அமைந்திருந்த அறிக்கையின் சொற்தேர்வுகளும் கவனத்துக்குரியதாக இருந்தது. இவ் அறிக்கை தொடர்பாக சில குறிப்புகளைப் பதிவு செய்வதற்கு உதவியாக இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை முதலில் குறித்துக் கொள்வோம்.

1. தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை.

2. கைது செய்து காணாமல் போனோர் பற்றிய பூரண விபரங்களை வெளியிடவில்லை.

3. கணக்கில் வராத 146,679 பேரைப் பற்றிய விபரங்களுக்கு பொறுப்புக் கூறவில்லை.

4. தமிழ் மக்களின் வாழ்நிலங்கள் மற்றும் வளங்கள் அவர்களிடமே கையளிக்கப்பட வேண்டும்.

5. தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆளும் நிலை என்று வருகின்றதோ அன்றுதான் தமிழ் மக்களின் பாதுகாப்பு, சுபீட்சம், சுதந்திரம் உறுதிப்படுத்தப்படும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை என்பது விட்டுக் கொடுப்புக்கு இடமில்லாதது என்பதே தமிழ் மக்களின் நிலைப்பாடு.

6. 68 வருடமாக தமிழ் மக்களை திட்டமிட்ட இன அழிப்பு நிகழ்ச்சி நிரலில் தொடர்ச்சியாக வைத்திருக்கும் இலங்கையளயின் எந்த அரசாங்கமும் சிங்கள மக்கள் மத்தியில் இனப்பிரச்சினை பற்றிய நேர்மையான கலந்துரையாடலை நடத்தி தீர்வு கொண்டு வர முடியாத நிலைமைதான் இன்று வரை உள்ள யதார்த்தம்.

7. உலகை உலுக்கிய 1956, 1958, 1977, 1983 இனவழிப்பு உட்பட தமிழீழப் பிரதேசமெங்கும் கட்டவிழ்த்து விட்ட சிறிய பெரிய இனப் படுகொலைகள், விரட்டியடிப்பு, பாலியல் வன்முறை போன்ற குற்றங்கள் எதிர்காலத்தில் நடக்கவே முடியாது என்று உறுதிப்படுத்தக் கூடிய கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் எதனையும் சிறிலங்கா தேசம் முன்னெடுக்கத் தயாராகவில்லை.

8. 2009 முள்ளிவாய்க்கால் உச்சம் பெற்ற நிலையில் தமிழினப் படுகொலை செய்தவர்கள் சுதந்திரமாக உலா வருகின்றார்கள்.

9. இது தமிழ் மக்களுக்கான சுதந்திர தினமாக அமையவில்லை.

10. சர்வதேச நாடுகளின் அழுத்தம் காரணமாக இடம்பெறும் அரசியலமைப்பு மாற்றம் போன்ற முன்னெடுப்புக்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தியாக்க வேண்டும். இப்போதுள்ள அரசு ஜனநாயக விழுமியங்களை மதிப்பதை உறுதிப்படுத்த வேண்டுமாயின் வட கிழக்கு மற்றும் புலம்பெயர் வாழ் தமிழ் ம்க்கள் மத்தியில் எந்த அச்சுறுத்தலுமின்றிய சூழ்நிலையில் ஒரு சுதந்திரமான சர்வசன வாக்கெடுப்பினை அனுமதிக்க வேண்டும்.

11. அவ்வாறான சூழ்நிலையில் தான் இரு தேசங்களும் நட்புடன் சமாதான சக வாழ்வில் ஈடுபட முடியும். இதுவே நிரந்தரத் தீர்வாக அமைய முடியும்.

பிரித்தானியத் தமிழர் பேரவை இவ் அறிக்கையில் ஈழத் தமிழ் மக்களின் அடிப்படையான பிரச்சினைகள் பலவற்றைச் சுட்டிக்காட்டியிருக்கிறது. இவ் விடயங்கள் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், அனைத்துலக மக்கள் அவை போன்ற அமைப்புக்களால் சுட்டிக்காட்டுப்பட்டு வருபவை. இவ் அறிக்கையின் ஊடாகப் பிரித்தானியத் தமிழர் பேரவை தனது நிலைப்பாட்டை உலகத் தமிழர் பேரவைக்கு நெருக்கமானதாக அல்லாது, நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் மற்றும் மக்கள் அவையின் நிலைப்பாட்டுக்கு நெருக்கமானதாக வெளிப்படுத்தியிருக்கிறது. தாயகத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையின் நிலைப் பாட்டுகளும் அணுகுமுறைக்கும் மாறானதாகவும் பிரித்தானியத் தமிழர் பேரவை த்ன்னை வெளிப்படுத்தியிருக்கிறது.

இவ் அறிக்கையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் வலியுறுத்தப்பட்ட அல்லது சுட்டிக்காட்டப்பட்ட அரசியல் நிலைப்பாடுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. இலங்கைத் தீவில் தமிழீழ தேசம் சிறிலங்கா தேசம் என்ற இரு தேசங்கள் உள்ளன.

2. தமிழீழ தேசத்தவர்க்கு தமது அரசியற் தலைவிதியினை தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் நடாத்தப்படும் மக்கள் வாக்கெடுப்பின் ஊடாக தீர்மானிக்கும் உரித்து வழங்கப்பட வேண்டும்.

3. தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு தமிழீழத் தனியரசு உருவாகுவதுதான் தீர்வாக அமைய முடியும் என்பதனை பிரித்தானியத் தமிழர் பேரவை வெளிப்படையாகப் பேசவில்லை. இருப்பினும் சுயநிர்ணய உரிமை தொடர்பாக அறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருப்பதுவும் உள்ளக சுயநிர்ணயம் குறித்துப் பேசப்படாதமையும் அரசியற் தீர்வுக்கான தெரிவுகளில் தமிழீழம் என்ற தனிநாட்டையும் உள்ளடக்கும் உள்ளக்கிடக்கையையும் அறிக்கை வெளிப்படுத்துகிறது.

4. தமிழ் மக்கள் சிறிலங்கா அரசால் இனஅழிப்புக்கு உள்ளாக் கப்படுகிறார்கள்.

5. சிறிலங்கா அரசு எந்தவிதமான மறுசீரமைப்புக்கும் தயாராக இல்லை.

6. தமிழ் மக்களுக்கு சிறிலங்கா அரசிடம் இருந்து நீதி கிடைக்கும் என்று நம்புவதற்கு அடிப்படைகள் ஏதும் இல்லை.

பிரித்தானியத் தமிழர பேரவை வெளிப்படுத் தியிருக்கும் இவ் விடயங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையின் கவனத்துக் குரியவையாக உள்ளன. கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக ஆட்சி மாற்றத்தின் பங்காளியாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறிலங்காவின் ஆட்சியாளர்களின் ஊடாகச் செய்யத் தவறிய விடயங்களை பிரித்தானியத் தமிழர் பேரவை சுட்டிக்காட்டியிருக்கிறது. தன்னை எவ்வகையிலும் மறுசீரமைத்துக் கொள்ளத் தயாராக இல்லாத சிறிலங்கா அரசால் தமிழர்களின் தேசியப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியுமா என்ற கேள்வியையும் பிரித்தானியத் தமிழர் பேரவை இவ் அறிக்கையின் ஊடாக மறைமுகமாக எழுப்புகிறது.



இலங்கைத்தீவின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான ஆண்டு எனக் கூறப்படும் 2016 ஆம் ஆண்டில் பிரித்தானியத் தமிழர் பேரவை முன்வைத்திருக்கும் இக் கருத்துக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு முன்னெச்சரிக்கையாக அமைய வேண்டும் என்ற எண்ணத்துடன் முன்வைக் கப்பட்டிருக்கிறதா என்ற கேள்வியும் இத் தருணத்தில் எழுகிறது.

**கலாநிதி சர்வேந்திரா**

# சீதன வாழ்வு!



சிறுகதை

கடிதத்தை வாசித்து நிமிர்ந்த நான் அவசர அவசரமாக கவருக்குள் முடங்கிக் கிடக்கும் போட்டோவை ஆவலோடு எடுத்துப் பார்க்கிறேன். அவள், சுமாரான அழகிதான். ஆனால், அவளுடைய நவநாகரிக உடுப்பு, முக ஒப்பனை, முடியலங்காரம் என்பன எனக்கு வெறுப்பை ஏற்படுத்த, கடிதத்தையும் போட்டோவையும் மேசைக்கு வீசுகிறேன். மனதில் பயமும் வெறுப்பும் கௌவிக் கொள்ள நினைவுகள், அவை பின்னோக்கிப் பாய்கின்றன...

சாந்தன் எனது உயிர்த் தோழன் என்னைவிட ஒரு வயது மூத்தவன். இயற்கை எழில் நிறைந்த, வேம்போடுகேணி, பளை என்னும் கிராமத்தில் பிறந்தவன், சிறுவயதிலேயே தாயை இழந்து தந்தை, அக்காவின் அரவணைப்பிலும் வழிகாட்டலிலும் வாழ்ந்து வந்தவன். ஆண்மகனுக்கு ஏற்ப உயரமும் மாநிறமும் நாணற் புல் உடல்வாகும், குனிந்த நடையும் மென்மையான வார்த்தைகள் பேசும் இயல்புடையவன். வீண் வம்புகளுக்குப் போகாது, தான் தன் குடும்பம் படிப்பு என்ற உன்னத இலட்சியத்துடன் அக்காவின் செல்லப் பிள்ளையாக வாழ்ந்தான். எந்தக் கஷ்ட துன்பம் வந்தாலும் யாருக்கும் சொல்லாது வளைந்து நெழிந்து வாழப்பழகிக் கொண்டவன்.

நானும் சாந்தனும் பளை மத்திய மகாவிததியாலயத்தில் கல்வி கற்றோம். சாந்தன் படிப்பு, விளையாட்டு, விவாதம், மேடைப் பேச்சுகளில் முதன்மை பெற்று விளங்கினான். தனது திறமையினால் அனைவரையும் தன்பக்கம் கவர்ந்தான். அதற்கு மேலாக பாடசாலை விடுமுறைகளில் தந்தையுடன் கூலிவேலைக்கு செல்லு தல், சமூகப்பணி, ஆலயப்பணி களில் ஈடுபடுவதால் சமூகத்தில் தனிப்பட்ட மரியாதை இருந்தது உண்மையே. இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத என் அம்மா, சில நேரம் காளியாக மாறி வீடு இரண்டு பட "அந்த தாயைத் தின்னி பிள்ளை அரைவயிறு, கால்வயிறு சாப்பிட்டு உழைத்து படிக்கிறான். நீ என்னடா வென்றால் மாடுமாதிரி மூக்குமுட்ட தின்றிட்டு மேசையில படிப்பு, படிப்பு என்று இருந்தது தான் மிச்சம் உனக்கு எதுக்கு படிப்பு" என்று திட்டுக்களும் குட்டுக்களும் வாங்கி அழுத நாட்களும் உண்டு.

நாட்களுக்குத் தான் எத்தனை அவசரம். நாட்காட்டியின் ஒவ்வொரு இலக்கத்தையும் மிக வேகமாக சம்ஹாரம் செய்துகொண்டிருந்தன. எமது கா.பொ.த.சாதாரணதர பரீட்சை முடிவுகளும் வெளியாகின.

கடந்த பத்து ஆண்டுகளுக்குப் பின்பு, எமது பாடசாலையில் சிறந்த பெறுபேறு பெற்று பல்கலைக் கழகத்திற்கு சாந்தன் மட்டுமே தெரிவா னான். பாடசாலைச்சமூகம், சந்தோஷத்தில் மூழ்கியது. பெரிய விழாவே ஏற்பாடாகி அவனின் குடும்பத்தினர், அதிபர், கற்பித்த ஆசிரியர்கள் முகங்களில் புன்னகை தவழ்ந்தது. ஆனால், சாந்தனின் முகத்தில் மட்டும் கவலை மூடியிருந்தது. அவனை உற்றுப் பார்த்தேன் கண்கள் கலங்கியிருந்தன...

பல கௌரவங்களையும் அவனுக்கு அளித்த அந்த விழாவில், அவனின் குடும்ப நிலையறிந்த அதிபர், தன் உரையில் பாடசாலைக்கு பெருமை சேர்த்துத் தந்த மாணவனின் பல்கலைக்கழக கல்வியை தொடருவதற்கு பாடசாலை சமூகம் ஒத்துழைப்பு வழங்க தயாராக உள்ளதாக, விழாவின் இறுதியில் கூறி முடித்தார்.

அன்றைய மாலைப்பொழுதில் நானும் வேறு சில நண்பர்களும் நானுமாக சாந்தனின் வீட்டுக்குச் சென்றிருந்தோம். சாந்தன் அவனின் அப்பா, அக்கா மூவரும் கதைத்துக் கொண்டிருந்தார்கள். நாமும் அவர்களுடன் கலந்து கொண்டோம். சாந்தனின் அப்பா, "தம்பி நீ படிக்கிறனெண்டு ஆசைப்படுகிறாய்.... நான் என்னசெய்யிறது. உன்ரை ஆசைக்கு குறுக்கே நிற்க எனக்கு விருப்பமில்லையடா..மூத்தமாமா, தான் படிப்பு செலவு விடுவதாக நேற்று சொன்னவர். நீ ஒருக்கால் அங்க போய் வா.." மௌனமாக இருந்த சாந்தனின் அக்கா எரிமலையானாள். "யார் மாமா எப்ப வந்த மாமா? அம்மாவின் செத்தவீட்டுக்கே வராதவர், எங்களை உறவு என்று சொல்ல வெட்கப்பட்டவர், இப்ப தம்பி கம்பஸுக்கு போறான் என்டதும் உறவு சொல்லி உரிமை கொண்டாட வாறாரோ? என்ரை தம்பி அவிட்டை கையேந்தவோ இது ஒருநாளும் நடக்காது" என்று அழுத்தமாக்க கூறினாள்.

"தம்பி, தான் பட்டதாரியாக வேண்டுமென்ற வெறியிலதான் படிச்சவன். என்ரை நகை, காணி இதுகளை வித்து அவன்ரை படிப்பை பாருங்கோ அப்பா, எனக்கு இப்ப சீதனம் அவசரமில்லை. அவன் முதல்ல படிக்கட்டும்" இப்படி அவள் கூறினாள். இறுதியில் அப்பாவும் அதற்குச் சம்மதித்தார். சாந்தனும் அக்காவும் முகம் மலர்ந்தனர். நாங்களும் தேநீர்க் கோப்பையைக் காலி செய்துவிட்டு சாந்தனுடன் கை குலுக்கி படிப்புத் தொடர, வாழ்த்துக்கள் சொல்லி அத்தோடை கம்பஸுக்குப் போனதும் எங்களை மறந்து விடாதை என்றும் கூறி நகர்ந்து செல்கிறோம்.

என் தாயாரின் நச்சரிப்புத் தாங்க முடியாமல் சோடாக் கொம்பனியொன்றில் வேலைக்குச் சேர்ந்தேன். லீவில் வீட்டுக்குவரும் போதெல்லாம் சாந்தன் வீட்டுக்குப் போய் நலம் விசாரித்து, என்னால் முடிந்த உதவியை என்தாய்க்குத் தெரியாமல் செய்வேன்.

நாங்கள் இருவரும் சந்திக்கின்ற பொழுது, அவன் கம்பஸிலும் நான் அலுவலகத்திலும் நடைக்கின்ற பகிடிகளைச் சொல்லிச் சிரிப்போம். எமது நட்பு முன்பிலும் இறுக்கமாகியது. தமக்கையாருக்கு திருமணம் செய்து வைப்பதற்கு- தனது இந்தப் படிப்பு எப்ப முடிவது? தனக்கு வேலை எப்ப கிடைப்பது? என்று கவலைப்படுவான்.

காலதேவன் சாந்தனுக்கு சாதகமாக மிகவேகமாக சுழன்று செல்ல அவனின் படிப்பும் நிறைவு பெற்று அவன், ஆசிரியராக பதவி ஏற்று இரண்டு மாதங்கள்கூட ஆகியிருக்காது. மார்கழிமாதம் கொட்டும் மழையில் நனைந்தபடி சாந்தன் எனது வீட்டிற்கு வந்தான்.

"அக்காவிற்கு நல்ல மாப்பிள்ளை வந்திருக்கு ஆனால், சீதனம் இரண்டு இலட்சம் கேட்கிறார்கள்.. சீதனத்திற்கு என்ன செய்யிறது? என்றுதான் மண்டையைக் குழப்பக் கொண்டிருக்கிறன்... " என்று ஏக்கத்துடன் தெரிவித்தான்.

"டேய்! ஏன் இப்ப நீ வீணாய்க் கவலைப்படுறாய்? உனக்கொரு கல்யாணம் நடந்தால் அதில சீதனத்தை வாங்கி, நீ அக்காவுக்குக் குடுக்கலாம்தானேயடா" என்றேன். "அக்காவுக்கு முதல்ல, நான் செய்ய முடியாது தானேயடா" என்றான். "பொறு அப்பாவும் நானும் மாப்பிள்ளை வீட்டுக்காரருடன் கதைக்கிறம்" என்று நான் வீறாப்புடன் சொல்லி அனுப்பினேன். ஆனால், மாப்பிள்ளை வீட்டார் அதற்குச் சம்மதிக்கவில்லை. அவர்கள் கை மேலே சீதனம் கேட்டார்கள்.

மறுநாளே சாந்தனுக்கு பெண் பார்க்கும் படலம் ஆரம்பமானது. எண்ணி சரியாக பத்தாவது நாளே தென்மராட்சியைச் சேர்ந்த பணக்காரப்பெண்ணான அமலாவை சாந்தனுக்கு துணைவியாக தேர்ந்தெடுத்தார்கள். அமலாவின் தந்தை சாந்தனின் அக்காவின் திருமணத்திற்கு வேண்டிய நகை, சீதனம் எல்லாவற்றையும் தான் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். இரு சகோதரர்களதும் திருமணம் ஒரே மணவறையில் நடாத்த நிச்சயிக்கப்பட்டு முகூர்த்த நாளும் வந்தது.

சிவசக்தி திருமணமண்டபம் சாந்தனின் உறவினர், நண்பர்களால் நிரம்பி வழிந்தது. மணவறைக்கு மணமகள் வந்தபோது, பலரும் அதிர்ச்சியடைந்தனர். சாந்தனின் பல்கலை நண்பர்கள், பெண்ணைப்பார்த்து "ஏன்டா இந்தக் கரிப் பூசனியை செய்ய ஒப்புக் கொண்டாய்?" என்று கேலியும் வருத்தமும் ஒருசேர விமர்சித்தனர். ஆனால், சாந்தனின் முகத்திலோ என்றுமே காணாத முகமலர்ச்சி.

நான்காம் சடங்கு முடிந்து மனைவி வீட்டிற்கு போனவன்தான், பின்பு தனது வீட்டிற்கு மாதம் ஒருதடவைதான் வந்தான். அதுவும் தனியாகவே வந்தான். நான் "ஏனடா மனுசியைக் கூட்டிக் கொண்டு வரேல்லையா? குடும்ப வாழ்க்கை எப்படியடா போகுது?" என்று கேட்டால் நான் சொல்வதை விட நீ கலியாணத்தைச் செய்துபார் புரியும்". என்று வெட்டிப்பேச்சு மூலம் கதையை முறிக்க– அவனது தொலைபேசியும் சிணுங்க, அவன் அவசரமாக, தான் கொண்டுவந்த பார்சலை மேசைமீது வைத்துவிட்டு "போட்டு வாறன்" என்று போய்விடுவான்.

சாந்தனின் அப்பா, தான் பிள்ளைகளைக் கரைசேர்த்துவிட்டன். இனி என்ன நடந்தாலும் கவலையில்லை என்று சுதந்திர மனிதனாகத் திரிந்தார். அவரின் இந்த நினைப்பு காலனின் காதில் வழுந்ததோ என்னவோ மாரடைப்பால் தீடீரென இறந்து போனார். மரணச் செய்தி கேட்டு சாந்தன் மட்டுமே வந்தான். அவனின் மனைவியோ, அவனின் உறவினர்களோ யாரும் வரவில்லை. சனங்கள் விடுப்புப் பிடுங்கி பல விதமாகக் கதைத்துக்கொண்டார்கள்.

சாந்தனும் சகோதரியும் கதறினார்கள், சவக்கிரியைகள் முடித்து, சுடலையிலும் தன்கடமைகள் முடித்து வந்த சாந்தன், தனியாக ஒரு மரத்திற்குக் கீழாக இருந்து ஒப்பாரி வைத்து அழுதுகொண்டிருந்தான். என்னால், அவன் வாய்விட்டு அழுவதைத் தாங்க முடியவில்லை. அவனது பக்கமாகச் சென்று அவனை ஆதரவாக அணைத்து, "ஏன்டா இப்படி மனமுடைந்து அழுகிறாய்? நாங்கள் எல்லாம் இல்லையா..?" என்று எனது அழுகையை அடக்கிக் கொண்டு கேட்டேன். அவன் "என்னை மனிச்சிடா, நான் ஒரு பாவியடா.. எனக்கு மனைவியாக அமைந்தவள்... ஒரு பொம்பிளையே இல்லையடா! இரக்கமற்ற இராட்சசியடா..!

எங்கடை வீட்டுக்கு வாவெண்டு கேட்டால் வரமாட்டாள்டா... சம்பளமெல்லாத்தையும் பிடுங்கியெடுத்திடுவாள்டா... வீட்டுக்கு ஒரு சல்லிக் காசு குடுக்க விடமாட்டாள்டா... என்ரை செலவுக்கே நான் படும்பாடு எனக்குத்தாண்டா தெரியும்.

எப்ப பாத்தாலும் டிவியும் ரெலிபோனுமாகத்தாண்டா இருப்பாள்... என்னை ஒரு துளியும் மதிக்க மாட்டாள்டா...என்று என்மடியில் விழுந்து சிறுபிள்ளையைப்போல தேம்பித்தேம்பி அழுதான்.

அப்பாவுக்கு என்ரை நிலை தெரியக்கூடாதென்டுதான்டா நான் உனக்கே சொல்லேல்லை. அப்பா நிம்மதியாப் போயிட்டார்.. இனி எனக்கு ஆர்டா சொல்லு.. என்று கேவிக்கேவி அழுதான். நீ என்டாலும் சீதனம் வாங்கியோ... பணக்காரப்பெண்ணையோ செய்யாதையடா... ஏழைப்பெண்ணாய்... நல்ல குணம் நடை உள்ள பெண்ணாய்ப் பார்த்து திருமணம் செய்... கூழைக் கஞ்சியைக் குடித்தாலும் நிம்மதியாய் இருக்கலாம்" என்றான்.

"ஒத்துவராட்டில் விவாகரத்து எடுக்கவேண்டியது தானேயடா?" என்றேன். சட்டம் சும்மா விட்டுவிடுமாடா.. நான் வாங்கியதை யெல்லாம் திருப்பிக்குடுக் குவேண்டியல்லாவா வரும்" "அதெல்லாம் சாத்தியப்படாதுடா... என்ரை கதியோ... விதியோ இனி இதுதாண்டா.." என்று முடித்தான்.

ஆனால், அவனே தனது கதைக்கு முடிவுரை எழுதுவான் என்று நான் நினைக்கவில்லை...

ஆம்... அவன் நாலுமுழக் கயிற்றின் மூலம் தன் கதைக்கு முடிவுரை எழுதிவிட்டான்...

என் அருமையான நண்பனை இந்தப் பணம் கொன்று விட்டது... இதை வாழ்வின் எந்தக் கட்டத்திலும் நான் மறப்பேனா...?

என் நண்பனை யாராலும் எனக்குத் திருப்பித் தரவும் முடியுமா...?

அவனை நினைக்கையில் என் கண்கள் பனிக்கின்றன.

அவன் கூறிவையை நான் மறக்க முடியாது...அவை எனக்கு ஒரு படிப்பினை..,பாடம்!

மனம் தெளிவு பெற அம்மாவுக்கு கடிதம் எழுதுகிறேன்.

அன்புள்ள அம்மா!

......................... என்னை மன்னித்துவிடுங்கள். பணக்காரப் பெண் வேண்டாம். எம்போன்று ஏழைப் பெண்ணாகப் பாருங்கள். நான் அவளைத் திருமணம் செய்கிறேன்................................

இப்படிக்கு உங்கள் மகன்.

மனப்பாரம் குறைய நித்திரைக்குச் செல்கிறான்.

ஆ.இந்திரா (கவி)



# இணையப்பாவனையும் இளம் சமுதாயமும்

*யாதும் ஊரே யாவரும் கேளிர்* என்றான் கவிஞன் கனியன் பூங்குன்றனார். அவன்ஒலித்த இந்தக் குரல் இன்று நனவாகிவிட்டது. நவீன தொழில்நுட்ப சாதனங்களது துரித வருகையானது, நனவாக்கியிருக்கிறது என்றால், மிகையாகாது. தகவல் தொழில் நுட்பத்தின் விருத்தியால் உண்டான உலகமயமாதல் இன்று உலகை ஒரு குவலையக் கிராமமாக்கிவிட்டது. கடந்த காலத்துடன் கைகோர்த்துள்ள தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தின் மூலமாக ஒவ்வொருவருடைய செயற்பாடுகளும் இயந்திரமயமாக்கப்பட்டுள்ளதுடன், இலகுவானதாகவும், வினைத்திறன் மிக்கதொன்றாகவும் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது என்று கூறினாலும், அதன் எதிர்விளைவுகள், தற்கால உலகில் விஞ்சிநிற்கின்றமை கவலையளிக்கின்றது. முன்னர், விருத்திபெற்ற நாடுகளில் மாத்திரம் செல்வாக்குச் செலுத்திய நவீன தொழில் நுட்பங்களின் பயன்பாடானது வெகு விரைவில் வளர்முக நாடுகளிலும் பரவிவிட்டது. பெரும்பாலான வளர்முக நாடுகளில் சமூக பொருளாதார முன்னேற்றங்களில் ICT பயன்பாட்டினால் ஏற்படும் உத்தமநன்மைகள் குறைவாக காணப்படுகின்ற போதும், விருத்திபெற்ற நாடுகளின் நவீன ஆராய்ச்சிகள் கண்டுபிடிப்புகள் என்பவற்றின் விளைவாக உத்வேகம் பெற்றுநகர்ச்சியுறுவதை காணலாம்.

**தொழில்நுட்பப் புரட்சியும் இணையத்தின் வருகையும்**

21 ஆம் நூற்றாண்டை மட்டுமன்றி, இனிவரும்போகும் நூற்றாண்டுகளையும்தன் ஆட்சிப்பரப்பினுள் அடக்கி ஆண்டுகொண்டிருக்கும் அசாயசூரனாக இணையம் விளங்குகிறது. பண்டைக்காலத்திலே காடுகளிலும், கற்குகைகளிலும் நாடோடி வாழ்க்கை முறைகளிலும் தன்னை மாய்த்துக்கொண்ட மனிதன், படிப்படியாக குடியிருப்புகளை நிறுவி தன் வாழ்க்கையை ஸ்திரப்படுத்திக்கொள்ளத் தொடங்கினான். தொடர்ச்சியான விஞ்ஞானத்தின் எழுச்சியும், இயந்திர சாதனங்களின்புரட்சியும் ஒருங்கேஇணைந்து இலை, குழை ஆடைகளுடன் நாடோடியாய் அலைந்த மனிதநாகரீகத்தை மாற்றி விஞ்ஞான மாயைக்குள் திணித்துக்கொண்டது.

*பாடுபடுபவர்க்கே இந்த பாரிடம் சொந்தமையா!* எனப் பாடிய கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை அவர்களது பாடுபொருள் மாறி, தொழில் நுட்பம் அறிந்தவர்க்கு அகிலமே சொந்தமாய் கொண்டாடவல்ல ஒரு காலம் துளிர்க்கலானது. இன்று உலகையே புரட்டிப்போடும் ஜாம்பவானாய் மிளிரும் இணையத்தளத்தினுடைய பயன்பாடு பல்கிப் பெருகிவிட்டது. இணையம் என்ற ஒரு பொதுச் சொல்லால் ஏகப்பட்ட வலையமைப்புகள் வகைக்குறிக்கப்படுகின்றன என்பது, அறியவேண்டியதொன்று. மனிதனது நாளாந்த செயற்பாடுகளில் அதிகளவான நேரம் இணையத்தோடு செலவாகுவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இணையத்தை அடிப்படையாகக் கொண்டுஇயங்குகின்றசமூகவலைத்தளங்களின் பயன்பாட்டிற்கு தற்கால மனிதன் பழக்கப்பட்டுவிட்டான் எனக்கூறுவதை விட, அடிமைப்பட்டுவிட்டான் என்று கூறுவது சாலச் சிறப்பு. பேஸ்புக், ஸ்கைப், வைபர், வாட்சப், டுவிட்டர் என ஏகப்பட்ட தளங்களுக் குள் கால்பதித்துவிட்ட மனிதன் வலை யில் அகப்பட்ட மானின் நிலையாய் ஆகிவிட்டமை வருத்தமளிக்கிறது.

**எல்லைகடந்த வலைமேய்ச்சல்**

இணையத்தினுடைய கையாளுகைக்கு எந்தவி வயதெல்லைகளும் வரையறுக்கப்படவில்லை. பால்குடிப் பிள்ளை முதல் பல்லுப்போன பாட்டி வரை இணையத்தை இயக்க வல்லவர்களாகவும் இணையத்தின் உத்தியோகபூர்வ பயனாளர்களாகவும் (users) விளங்குகின்றமையானது, இன்று புதுமையல்ல. வலை மேய்ச்சலில் வயது, பால், இனம், மதம், மொழி என்ற எந்த வேறுபாடுகளுமின்றி யாவரும் ஈடுபட்டுவருவதை அவதானிக்கலாம். தகவல் பரிமாற்றத்துக் காகவும், பொழுதுபோக்குக்காகவும் தேவைகளுக்கெனவும் இணையத்தளத்தை நாடும் இன்றைய இளஞ்சமுதாயம், திசைதிருப்பப்பட்டு தவறான பாதைக்கு நகர்த்தப்படுதலின் விளைவு, இணையம் தொடர்பான சமூபார்வையில் எதிர்க்கருத்துகளைத் தோற்றுவிக்கக் காரணமாகிவிட்டது. அத்தியாவசிய தேவைகள் சிலவற்றை நிறைவேற்றவென இணையத்தை நாடும் பலர், அதற்கு அடிமைப்பட்டு தம்மையே இழந்துவிடுகின்றனர். தேவைக்கு அதிகமாக இணையத்தை பயன்படுத்துவதனாலும் அதற்காக அதிக நேரத்தை செலவிடும்போதும், எம்மை அறியாமலே உள்ளத்தில் அசாதாரண நிலையொன்று உருவாகி மனிதர்கள் அடிமைப் பட்டுவிடுகிறார்கள் என அமெரிக்கா வின் பிரபல மருத்துவரான *அய்வன் கோல்ட்பர்க்* என்பவர் 1995 ஆம் ஆண்டில் மேற்படி கருத்தை முன்வைத் திருந்தார்.

இணையத்திற்கு அடிமையான ஒருவரது சுபாவம், குணவியல்புகள் என்பன, ஏனையோரிடமிருந்து பிரித்தறிய ஏதுவாகிவிடுகின்றது. நேரம் போவது தெரியாமலும், உரிய நேரத்துற்கு உணவு உட்கொள்ளாமலும், அத்தியாவசிய தேவைகளக்கூட காலம் தாழ்த்தி மேற்கொள்வதும், இணைய இணைப்பைவிட்டு வெளியேறுமாறு பணிக்கையில் அதீத கோபம் ஏற்படக் கூடிய தன்மையும், அதிகளவில் உணர்ச்சிவசப்பட்டுசெயற்படும் குணாசமும் நிறைந்த ஒருவராக இணைய அடிமை விளங்குவார் என, அமெரிக்காவின் ஒரிகோன் பல்கலைக் கழகத்தின் விஷேட உளவியற் பேராசிரியரான *ஜெரால்ட் ப்ஃலோக்* என்பவர், குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி அறிஞர் கூற்றை அடிப்படையாக வைத்து நோக்குகையில், இணையத்துடன் நாம் ஒவ்வொருவரும் எந்தளவிற்கு பின்னிப் பிணைந்திருக்கிறோம் என்பது தெளிவாகும்.

**இணையத்தின் ஆதிக்கம்**

3 பில்லியன் 300 மில்லியன் 300ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் இன்று இணையத்தைப் பாவிக்கிறார்கள். உலகிலேயேஇணைய வேகவீதத்தில்(20%) தென்கொரியா முதலிடம்வகிப்பதாகபுள்ளிவிபரங்கள் சுட்டுகின்றன. இணையப் பாவனையாளர் வீதத்தில் ஜெர்மனி, டென்மார்க், நோர்வே, ஐஸ்லாந்து ஆகியவை முன்னணியில் இருக்கின்றன. பாவனையாளர் வீதத்தில் தென்கொரியா இவற்றுக்குப் பின்னால் இருந்தாலும், அந்நாட்டுஅரசின்அறிக்கைப்படி, இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான சிறார்கள், இணையப் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவலும் தெளிவாவதை காணலாம். இணை யத்திற்கு அடிமையான ஒருவரது மூளையின் செயற்றிறனும், மது போதைக்கு அடிமையான ஒருவரது மூளையின் செயற்றிறனும் சமவலு வானது என, சீனர்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் நிமித்தம் *ஹவோல்* மற்றும் அவரது குழுவினர் தெரிவித்துள்ளனர்.

**நம் நாட்டில் இணையம்**

உக நாடுகளுடன் ஒப்பிடுகையில் வளர்முக நாடான நமது நாட்டின் இணையப்பாவனையின் அளவு தாழ் நிலையில் இருந்தாலும், தற்காலத்தில் இந்தியா, இலங்கை நாடுகள் உட்பட பல நாடுகள் பாவனையாளர் வீதத்தில் துரித அதிகரிப்பு(14% வருடாந்த அதிகரிப்பு) கண்டு வருகின்ற மையானது, எதிர்காலம் பற்றிய பயத்தைத் தோற்ற விக்கத் தான் செய்கிறது.

இலங்கையைப் பொறுத்தளவில் மொத்த சனத்தொகையில் 8-9% ஆனோர் அடிக்கடி இணையத்துள் பிரவேசிப்பவர்களாக இருப்பதாக புள்ளி விபர அறிக்கைகள் தெரிவிக்கின்றன. கூகிள் எனும் தேடுபொறியின் அறிக்கைப்படி இலங்கையிலிருந்து 13-15% வரையானோர் நாளாந்தம் இணையத்துள் சஞ்சரிப்பதாக அறியக்கிடைக்கின்றது. அண்மைக் காலமாக இலங்கையில் ஏற்பட்டுள்ள, சமூகச்சீரழிவுகள் பலவற்றிற்கும் இணை யப்பாவனையும் காரணமாவதனை கண்ணூடே காண இயல்கிறது.



குறிப்பாக முகநூல் பயன்பாடானது சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரையும் கவர்ந்திழுத்து வைத்துள்ளது. முகநூல் மூலமாக முகமறியாநட்புக்களைஏற்படுத்தியும், காதல் மோகம்கொண்டும், அதன்பின்கொலைகளும் பாலியல்வல்லுறவுகளும்என நீளும் சமூகச்சீர்கேடுகள் பலவற்றுக்கும் முகநூல் காரணமாவதை ஆதாரபூர்வமாக எடுத்துரைக்கவியலும்.

**மனம் நாடும் முகநூல்**

முகநூல் சமூகவலைத்தளமானது, ஏறத்தாழ 1550 மில்லியனுக்கும் அதிகமான பயனாளர்களை கொண்டிருப்பதை புள்ளிவிபரத் திரட்டுகளினூடே அறிய முடிகிறது. வர்த்தக நிறுவனங்களின் விளம்பரங்களையும், ஒரே எண்ணம்- விருப்பம் கொண்டவர்களை ஒன்றிணைக்கும் தளமாகவும், பிரிந்துபோனவர்களை மீளச் சேர்க்கும் தளமாகவும், நண்பர் மற்றும் உறவினருடன் தொடர்பை ஏற்படுத்தும்தளமாகவும்விளங்குகின்ற போதும், இதனால், ஏற்படவல்ல எதிர்விளைவுகள் மேலோங்கியே உள்ளது.

**சிந்தித்து செயலாற்றுவோம்**

இணையமானது சமுத்திரத்தினளவு தகவல்களை தன்னகத்தே கொண்டுள்ளது. எமக்குத் தகவல்களைத் தருவதற்கும், இன்னொருவருடனோ அல்லது குழுவினருடனோ எம்மைத்தொடர்பு படுத்துவதற்கும் பலநூறு வழிகளை ஏற்படுத்தியுள்ளது. இது பில்லியன் கணக்கான மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அறிவியல் வளர்சிக்கும் வித்திட்டுள்ள அதேவேளைதீயநோக்கத்துடனான பாவனையால் பலரது அழிவுக்கும் காரணமாகியுள்ளது என்பதும் உண்மைதான். எதையும் அள வோடு தேவைக்கு மட்டும் பயன் படுத்துகின்றபொழுது, பல நன்மைகளை நாம் பெற முடியும். அதுவே அளவுக்குமிஞ்சும் பொழுது விஷமாகி விடுகிறது. அது எம்மைக்அடிமை யாக்கிவிடுகிறது.

நோய்வாய்ப்பட்டவருக்கு மருத்துவர் தரும் மருந்துக் குழிகைகள், ஔடதங்களையும் கூட அளவுப் பிரமாண அடிப்படையில் தான் எமக்குத் தரப்படுகிறது. ஏனெனில் அதன் அளவுசற்று அதிகமானாலும் அதுவே, அருந்தியவருக்கு மரணத்தைத் தந்துவிடும். வைத்தியர் சிறைக்குட் செல்லவேண்டிவரும்.

மேற்சொன்னபடி இன்று இணையத்தளத்திற்கு மட்டுமல்ல, தொலைக்காட்சி, சினிமா, போன்ற ஊடகங்களுக்கும் நாம் அடிமையாகிவிட்டோம்.

இந்த அடிமைத்தனம் உணவுப் பழக்கவழக்கங்களிலும் எம்மை ஆட்கொண்டுள்ளது.

சிந்தப்பதற்கு நேரம் இருந்தால் தானே நாம் எங்கே செல்கிறோம் என்ன செய்கிறோம் என்பது புரியும்? தயவுசெய்துசிந்திப்பதற்காக நேரத்தை ஒதுக்குங்கள். பிறகு எதைச்செய்வது? எதைச் செய்யவேண்டாம் எனத் தீர்மானியுங்கள்.







**மல்லாவிக்கஜன்**

# சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து விடை பெற்றார் மக்கலம்



முதல் பந்தை சிக்ஸருக்கு விரட்டும் மிக அரிதான வீரர்களில் ஒருவர். 360 டிகிரி கோணத்தில் பந்து களை துவம்சம் செய்பவர். இவரது பட்டில் பட்ட பந்துகள் புல்லட் ரயில்களின் வேகத்துக்கு நிகரானவை என வர்ணிக்கப்படுபவர் மக்கலம். அவரை இனி மேல் ஒருநாள் போட்டிகளில் பார்க்க முடியாது. அதிரடியாக கிரிக்கெட் ஆடுபவர்களை காட்டுத்தனமாக கிரிக்கெட் ஆடுகிறார்கள் என்று கூறுவோம். உண்மையிலேயே காட்டுத்தனமாக கிரிக்கெட் ஆடக்கூடியவர்தான் இந்த மக்கலம். லகான் படத்தில் ஒருவர் மட்டையை நெட்டுக்குத்தாகப் பிடித்து வித்தியாசமான முறையில் கிரிக்கெட் ஆடுவது போன்ற காட்சி இடம் பிடித்திருக்கும். இதனை பார்த்த பலர் படத்தில் தான் இப்படியெல்லாம் கிரிக்கெட் ஆடுவார்கள் என்றா ர்கள். அதை போல், நிஜத்திலும் கிரிக்கெட் ஆட முடியும் என அனா யாச சிக்சர்களை பறக்கவிட்டு காட்டியவர் மக்கலம். அவரை இனி மேல் கிரிக்கெட் உலகம் கட்டாயம் மிஸ் செய்யும்.

கடந்த 2008-ம் ஆண்டு ஐ.பி. எல் போட்டிகள் இந்தியாவில் தொடங்கப்பட்டது. முதன்முதலாக அயல்நாட்டுவீரர்களும், இந்திய வீரர்களும் இணைந்து இந்தியாவில் ஐ.பி.எல் தொடரில் பங்கேற்கிறார்கள். நட்சத்திரப் பட்டாளங்கள் குவிந்த இந்த தொடர், உலகக் கோப்பை போட்டியை காட்டிலும் களை கட்டியது. ஐ.பிஎல் தொடரின் முதல் போட்டி என்பதால் பெங்களூர், சின்னசாமி ஸ்டேடியத்தில் நடக்க ரசிகர்கள் கூட்டம் அலை மோதியது.

கொல்கத்தா அணியும் - பெங்களூர் அணியும் மோதியது. பெங்களூர் கப்டன் டிராவிட் நாணயச் சுழற்சியில் வென்றார். பீல்டிங் செய்வதாய் அறிவித்தார். கொல்கத்தா அணியின் கப்டன் கங்குலியுடன், பிரண்டன் மக்கலம் களமிறங்கினார். முதல் ஓவரை பிரவீன்குமார் வீச, ஐந்து பந்துகளை சந்தித்த மக்கலம் ஒரு ரன் கூட எடுக்கவில்லை. முதல் ஓவரில் ஒரு ரன் மட்டும் விட்டுக் கொடுத்து, டிராவிட்டின் முடிவு சரியானதே என ரசிகர்களுக்கு சொன்னார் பிரவீன்குமார். அடுத்த ஓவர், ஜகீர்கான் பந்துவீச வந்தார், ஓவரின் முதல் பந்தில் ரன் இல்லை, அடுத்த நான்கு பந்துகளும் பவுண்டரி, சிக்சர் என நொறுக்கி தள்ளினார் மக்கலம். ஐ.பி.எல் போட்டியில் முதல் ரன், முதல் பவுண்டரி, முதல் சிக்சர் மூன்றையும் அடித்தவர் மக்கலம் தான். இரண் டாவது ஓவரோடு மக்கலம் நின்று விடவில்லை. மெல்ல மெல்ல விஸ்வரூபம் எடுத்தார். மறுமுனையில் கங்குலி, ரிக்கி பொண்டிங், ஹஸ்சி, ஹபீஸ் சொற்ப ரன்களில் அவுட் ஆகிக் கொண்டிருக்க, தனி ஆளாக நின்று 73 பந்து க்களை சந்தித்து 10 பவுண் டரிகளையும், 13 சிக்சர்களையும் விளாசி தள்ளி 158 ரன்களை குவித்தார். 20 ஓவரில் கொல்கத்தாவின் ஓட்ட எண்ணிக்கை 222 ஆகும். மக்கலத்தின் மரண விளாசலை கண்டு அத்தனை பே ரு ம் ஆடித்தான் போயினர். மக்கலத்தின் ருத்ர தாண்டவம் அந்த போட்டியில் இருந்துதான் தொடங்கியது. ஒரு நாள் போட்டி யில் 150 ரன்கள் எடுப்பதே சாதனை என்ற காலகட்டத்தில் அநாயசமாக 20 ஓவரில் 158 ரன்களை குவித்திருந் தார் மக்கலம். அந்த வகையில் கிறிஸ் கெயில், டிவில்லியர்ஸ்க்கு எல்லாம் முன்னோடி இந்த மக்கலம். சேஸிங்கில் களமிறங்கிய பெங்களூருக்கு அதிக ரன்கள் எப்படி வந்தது தெரியுமா? எக்ஸ்ட்ராஸ் மூல மாகத் தான் 19 ரன்கள் வந்தது. பிரவீன் குமாரை தவிர வேறு யாரும் இரட்டைப் படை எண்ணிக்கையில் ரன்கள் குவிக்கவி ல்லை. பரிதாபமாக 82 ரன்களில் பெங்களூரு அணியின் இன்னிங்க்ஸ் முடிவுக்கு வர, 140 ரன்கள் வித்தியாசத்தில் மெகா வெற்றி பெற்றது கொல்கத்தா.

பிரண்டன் மக்கலம் 2002 ஆம் ஆண்டே நியூ சிலாந்து அணிக்காக விளையாட ஆரம்பித்து விட்டார். மிகச்சிறந்த விக்கெட் கீப்பராக இருந்த மக்கலம், சிறந்த பட்ஸ்மேனாக மாறியது ஐ.பி.எல்-க்கு பின்னர் தான். இருபது-20 மட்டுமல்ல டெஸ்ட் போட்டிகளிலும் மெக்கலம் சிறந்த வீரர் தான். இந்திய மண்ணில், வலுவான சுழற்பந்து வீச்சுக்கு எதிராக இரட்டைச் சதமடித்தார் மக்கலம் கடந்த ஆண்டு இந்திய அணி, நியூசிலாந்துக்கு எதிராக சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தது. முதல் டெஸ்ட் போட்டியில் ஆக்லாந்து மைதானத்தில் இரட்டை சதம் அடித்தார். அத்துடன் மக்கலம் அடங்கவில்லை. அடுத்த டெஸ்ட் போட்டியிலேயே இரண்டாவது இன்னிங்க் ஸில், 13 மணி நேரம் களத்தில் நின்று 559 பந்துகளை (93 ஓவர் கள்) சந்தித்து 32 பவுண்டரிகள், நான்கு சிக் சர் விளாசி முச்சதம் எடுத்து முத்தாய்ப்பு பதித்தார். இந்தியாவு க்கு ஷேவாக் போல நியூசிலாந்துக்கு மக்கலம். முச்சதம் எடு த்த ஒரே நியூசிலாந்து வீரர் அவர்தான். நான்கு முறை டெஸ்ட் போட் டிகளில் இரட்டை சதம் அடித்திருக்கிறார்.

நியூசிலாந்து அணி, எப்போதுமே பீல்டிங், பவுலிங், பட்டிங் என மூன்றிலும் கலக்கக் கூடிய அணி தான். எனினும், முக்கிய போட்டிகளில் தென்னாப்பிரி க்காவை போல எப்போதுமே தோற்றுவிடும். ஒரு கட்டத்தில் தரவரி சையில் ஏழாம் நிலை க்கும் கீழே கிடந்த நியூசிலாந்து அணிக்கு தெம்பூட்டியது மக்கலம் தான். அவர் கப்டனாகப் பொறுப்பேற்ற பிறகு, தென்னாபிரிக்க அணியுடன் நடந்த டெஸ்ட் தொடரில் மோசமாக தோற்றாலும், அதன் பின்னர் வீறு கொண்டு எழுந்து தொடர்ந்து டெஸ்ட் போட்டிகளை வென்று வருகிறது. நியூசி லாந்து அணி சொந்த மண்ணில் அசை க்க முடியாத அணியாக மாறியிருக்கிறது.

இன்னொரு விடயம்... இந்த ஆண்டு நடந்த ஒரு நாள் போட்டிக ளில் சிறப்பாக செயற்பட்ட கப்டன் யார் தெரியுமா? பிரண்டன் மக்கலம் தான். உலகக் கோப்பைத் தொடரில் இறுதி போட்டி தவிர அனைத்து போட்டியையும் நியூசிலாந்து அணி வென்றதற்கு மக்கலத்தின் பங்கு அளப்பரியது. பீல்டிங், பவுலிங் இரண்டிலும் புரட்சி ஏற்படுத்தினார். நியூசிலா ந்தின் அப்போதைய நம்பர் 1 பவுலர் டிரெண்ட் போல்ட்டை தொடர்ந்து 10 ஓவர்கள் வீச வைத் தார். பீல்டிங்கில் கிடுக்கிப்பிடி போட் டார். ஒருநாள் போட்டியில் டெஸ்ட் போட்டிக்கான பீல்டிங்கில் ஆட் களை நிறுத்தியதால் எதிரணி பட்ஸ்மேன்கள் அதிர்ச்சி அடைந் தனர். நியூசிலாந்து அணிக்கு எதிராக 40 ஓவர் கூட பெரும் பாலான அணிகள் விளையாட முடியவில்லை, அவுஸ்திரேலிய அணியால் கூட 160 ரன்களை குவிக்க முடியவில்லை. அத் தனை துல்லியமாக விளை யாடியது நியூ சிலாந்து.

மக்கலம் சிறந்த பட் ஸ்மேன், சிறந்த பீல்டர், சிறந்த விக்கெட் கீப்பர், சிறந்த கப்டன் என்பதையும் தாண்டி சிறந்த ஜென்டில்மன். தனது தாய்நாட்டுக்கு எதிராக எந்த வீரர் சிறப்பாக விளையாடினாலும் கை கொடுத்து பாராட்டுவது அவரது வழக்கம். மக்கலம் ஸ்லெட்ஜிங்கில் ஈடுபடுவதை விரும்ப மாட்டார், அவரை யாரா வது வம்பிழுத்தாலும் வாய்த்தக ராறு இருக்காது, சிறு புன்னகை யுடன் கடந்து விடுவார். பிரண் டன் மக்கலத்துக்கு எக்கச்சக்க ரசிகர்கள் இந்தியாவில் உண்டு. குறிப்பாக ரசிகைகளும் அதிகம், டாட்டூ பிரி யர். சென்னை அணிக்காக மக்கலம் சில ஆண்டுகள் விளையாடியபோது சென்னை அவருக்கு மிகவும் பிடித்துபோய் விட்டது. மக்கலத்துக்கு இரண்டாவது தாய் வீடு சென்னை.

சி.எஸ்.கே ரசிகர்களுக்கும், மக் கலத்துக்கும் இடையே யான பாசம் அதிகம். நியூசிலாந்து அணிக்கு கப்டனாக இருந்தாலும் டோனிக்கு கீழ் விளையாடுவதை பெருமையாக கருதுவார் பிரண்டன் மக்கலம். இத்த னைக்கும் அவரது கப்ட ன்சிக்கும், டோனியின் கப்டன்சிக்கும் எக்கச்சக்க முர ண்பாடு உண்டு. ஒரு கூட்டுக் கிளியாக இருந்த சி.எஸ். கே இப்போது உடைந்து விட்டது. அடுத்த ஆண்டு ராஜ்கோட் அணிக்காக விளையாடவு ள்ளார் மக்கலம். இந்திய ரசிகர் கள் மக்கலத்தை இந்திய மைதானங்களில் ஐ.பி.எல் போட்டிகளில் பார்க்கலாம்.



## ஐ.நா.ஆணையர் அல் ஹுசைனின் வருகைக்காக

# நம்பிக்கையுடன் காத்திருப்போம்





ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் இலங்கை விஜயத்தை நிறைவு செய்து நாட்டை விட்டு வெளியேறும் போது மீண்டும் வருவேன் என்று தெரிவித்திருந்தார்.

ஐ.நா.ஆணையரின் இலங்கை விஜயத்தின் போது பல எதிர்பார்ப்புகள் மேலோங்கியிருந்தன.

அதேவேளை அவரின் அடுத்த விஜயம் எப்போது இடம் பெறும் என்ற எதிர்பார்ப்பும் மேலோங்கியுள்ளது. வடக்குக்கு ஐ.நா ஆணையர் விஜயம் மேற்கொள்வார் என்று அறிவிக்கப்பட்டது இன்னும் அதிக எதிர்பார்ப்பை முன்பே உருவாக்கியது.

பொதுவாக வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வடக்குக்கு விஜயம் மேற்கொள்ளும் போது தமிழ் மக்களின் பிரதான கோரிக்கைகள் முன்வைக்கப்படும்.

அதில் மீள்குடியேற்றம், காணாமற்போனவர்களின் விடுதலை. அல்லது தகவல் வெளியீடு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்பன கட்டாயம் உள்ளடங்கும்.

ஐ.நா. ஆணையர் சயிட் அல் ஹுசைன் கடந்த எட்டாம் திகதி யாழ். வருகை தந்த போதும் இந்த மூன்று கோரிக்கைகளும் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தன.

வலி.வடக்கு மக்கள் தமது சொந்த இடங்களை இழந்த நிலையில் மீள்குடியேற்றத்தை எதிர்பார்த்து காத்திருக்கும் நலன்புரி முகாமிற்கும் ஐ.நா. ஆணையர் இதன்போது விஜயம் மேற்கொண்டிருந்தார்.

சபாபதிப்பிள்ளை நலன்புரி முகாமிற்கு சென்ற பின்னர் ஐ.நா. ஆணையர் மீள்குடியேற்றம் குறித்த முக்கிய அறிவிப்பை விடுத்திருந்தார்.

“**நான் யாழ்ப்பாணத்திற்கு அடுத்த தடவை வரும் போது நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்கள் அனைவரும் தமது சொந்த இடங்களில் மீள் குடியேறி இருப்பார்கள்**” என்று கூறியிருந்தார்.

ஐ.நா. ஆணையரின் இந்தக் கூற்று மீள்குடியேற்றத்தை எதிர்பார்த்து பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு மகிழ்ச்சியையளித்துள்ளது.

வலி.வடக்கு மக்கள் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் கடந்த ஆறு ஆண்டுகளாக பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த மக்களின் போராட்டங்களுக்கு மதிப்பளிக்கும் விதமாகவும் நியாயமான கோரிக்கைகளுக்கு சர்வதேச சமூகம் செவி சாய்த்தே ஆக வேண்டும் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளது.

நலன்புரி நிலைய மக்களுக்கு மீள்குடியேற்றம் இடம் பெறும் என்றவாக்குறுதியை ஐ.நா ஆணையர் வழங்குவதற்கு முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆறு மாதத்துக்குள் மீள்குடியேற்ற பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என்ற வாக்குறுதியை வழங்கியிருந்தார்.

கடந்த 2015 ஆண்டு நத்தார் பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய விழாவின் போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஜனாதிபதி இந்த வாக்குறுதியை வழங்கியிருந்தார்.

நலன்புரி நிலைய மக்களை நேரில் சென்று சந்தித்து அவர்களுடன் அளவளாவிய பின்னர் ஜனாதிபதி மைத்திரி இந்த வாக்குறுதியை வழங்கியிருந்தார்.

போர்க்காலம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் 2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணமாவட்டத்தை பொறுத்தமட்டில் வலிகாமம் வடக்கு பகுதியைத்தவிர ஏனைய பகுதி மக்களின் கோரிக்கைகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டன.

மகிந்த ஆட்சிக் காலத்தில் மக்களின் மீள்குடியேற்றத்துக்கு பதிலாக இராணுவக் குடியிருப்புக்கள் ஆங்காங்கே முளைத்ததோடு வலிகாமம் வடக்கில் உயர்பாதுகாப்பு வலயம் இராணுவம் குடியிருப்பு பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தது.

இராணுவத்தினர் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணியில் விவசாய நடவடிக்கைகளிலும் ஹோல் ஃப் மைதானம் அமைத்தும் ஹோட்டல்கள் அமைத்தும் வளமான வாழ்க்கையை நடத்தினர். வளமான பூமியை பறிகொடுத்து விட்டு வலி.வடக்கு மக்கள் ஏதிலியாக நலன்புரி நிலையங்களிலும் நண்பர்கள், உறவினர்கள், வாடகை வீடுகளிலும் வசதி வாய்ப்புக்கள் எதுவுமின்றி வாழ்ந்து வருகின்றனர். பிறரின் உதவிகளைநாளாந்தம் எதிர்பார்த்து காத்திருக்கும் மக்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் உரிய முறையில் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. மழையிலும் வெயிலும் அம் மக்கள் படும்பாட்டை அரசு அறிந்திருந்தும் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள மகிந்த அரசு முன்வரவில்லை. மகிந்த ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர் வலி.வடக்கில் மீள் குடி யேற்றம் சாத்தியப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஐ.நா.ஆணையர் அல் ஹுசைனின் யாழ். வருகை அதனை மேலும் உறுதிப்படுத்தியுள்ளதால் வலி.வடக்கிலிருந்து உயர் பாதுகாப்பு வலயம் அகற்றப்பட்டு மக்களின் வாழ்விடங்கள் விடுவிக்கப்படவுள்ளன.

ஐ.நா. ஆணையர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளும் போது எதிர்பார்த்த ஒரு விடயம் வெற்றியளித்துள்ளது. அதேவேளை காணாமற் போனவர்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு உரிய பதிலை அரசிடம் இருந்து அவரால் பெற்றுக்கொடுக்க முடியவில்லை. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை யாழிலுள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாட ஐ.நா ஆணையாளர் ஹுசைன் வருகை தந்த போது,காணாமற்போனவர்களின் உறவினர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

இதனைக் கண்ணுற்ற ஐ.நா. ஆணையர் காணாமற்போனவர்களின் உறவினர்களின் கோரிக்கைக்கும் மக்களின் போராட்டத்துக்கும் மதிப்பளித்து வாகனத்திலிருந்து இறங்கி அவர்களை நோக்கி கையெடுத்து கும்பிட்டபடி எதிர்கொண்டார்.

அதேவேளை காணாமற்போனவர்களின் உறவினர்களை முதலமைச்சரின் அலுவலகத்தில் சந்தித்து ஐ.நா. ஆணையர் கலந்துரையாடினார்.

அதுமட்டுமன்றி காணாமற்போனவர்களின் விபரங்கள் ஐ.நா. ஆணையரிடம் வடக்கு முதலமைச்சரினால்கையளிக்கப்பட்டது.

வலி.வடக்கு மக்களின் மீள்குடியேற்றம், காணாமற் போனவர்களின்உறவினர்களின் கோரிக்கை என்பவற்றுடன் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரமும் ஆணையருடன் கலந்துரையாடப்பட்டது. இவ்வாறு ஐ.நா.ஆணையரின் யாழ். வருகை தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை மீண்டும் வெளிப்படுத்ததக்க தருணத்தில் ஏற்படுத்திக் கொடுத்ததோடு உரிய பதிலை அரசு வழங்கியாக வேண்டும் என்ற சூழ்நிலையையும்ஏற்படுத்தியுள்ளது.

மகிந்த அரசுபோன்று மைத்திரி அரசு செயற்படாது சர்வதேச நாடுகளுடனும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்துடனும் இணைந்து செயற்பட முற்பட்டுள்ளது என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி வெளிப்படுத்தியுள்ள ஐ.நா. ஆணையரின் இலங்கை வருகை தமிழர்களின் நீண்டகாலகோரிக்கையை மீண்டும் சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச் சென்றது.

காண்டீபன்




# விசாரணை

## திரைவிமர்சனம்

அதிகார வர்க்கத்தின் அடியாளாக இயங்கும் பொலிஸாரின் மனச்சாட்சியை குறுக்கு 'விசாரணை' செய்யும் தமிழ் சினிமாவின் பெருமிதப் படைப்பு!

முகமற்ற, முகவரியற்ற எளிய மனிதர்களுக்காக துளி வீரியம் குறையாமல், இம்மி சமரசம் இல்லாமல் இப்படி ஒரு படம் தந்ததற்காக இயக்குநர் வெற்றிமாறனை ஆரத்தழுவிக்கொள்வோம்.

முகவரியற்ற 'கேர் ஆஃப் பிளாட்ஃபார்ம்' குடிமகனோ, அரசியல் லாபிகளில் மல்ட்டிமில்லியன் புரட்டும் கோடீஸ்வரனோ... அதிகாரம் கழுத்தை இறுக்கினால் துரும்பும் தப்பாது என்பதை, முதுகுத்தண்டு சில்லிட விபரிக்கிறது **'விசாரணை'** யின் ஒவ்வொரு நிமிடமும்!

தினேஷ், ஆந்திராவில் ஒரு மலிகைக்கடையில் வேலைபார்க்கிறார். முருகதாஸ் உள்ளிட்ட தினேஷின் ஏனைய மூன்று நண்பர்கள் அங்கேயே வேறு சிறு வேலைகள் செய்கின்றனர்.

நால்வருக்குமே இரவுகளை பூங்காவில் உறங்கிக் கழித்து, காசை மிச்சம்பிடிக்கும் வயிற்றுப் பிழைப்பு. அப்படியான ஒரு பூங்கா இரவு விடிகிறது... மிக மோசமாக! எந்தக் காரணமும் சொல்லாமல் தினேஷ் மற்றும் நண்பர்களை திடீரென அதிகாலையில் அழைத்துச் செல்லும் ஆந்திர பொலிஸ், அடி வெளுத்து எடுக்கிறது. உயிரை மட்டும் மிச்சம் வைத்து உடலின் ஒவ்வோர் அணுவிலும் வலி பாய்ச்சுகிறது பொலிஸின் ட்ரீட்மென்ட். உயிர்த் துளி வரை ஊடுருவி நடுங்க வைக்கும் சித்திரவதை. இத்தனையும் எதற்கு என்றே புரியாமல் அடிபட்டு முடங்கிக் கிடக்கிறார்கள் இளைஞர்கள். விசாரணைகளுக்கு இடையில் அவர்களிடம் கேட்கப்படும் கேள்வி ஒன்றே ஒன்று தான். ஒப்புக் கொள்கிறீர்களா?.

எதை ஒப்புக்கொள்ள வேண்டும், தாங்கள் செய்த குற்றம் என்ன? என்று தெரியாத அந்த இளைஞர்கள், மேலும் மேலும் உயிர் சிதைக்கப்படுகிறார்கள். தாங்கள் கைதுக்கான காரணம் தெரிந்து, அதிர்ந்து, சூழ்ந்திருக்கும் இக்கட்டு உணர்ந்து தவித்துத் தத்தளிக்கிறார்கள். அப்போது எதிர்பாராத திருப்பமாக தமிழக பொலிஸான சமுத்திரக்கனி மூலம், ஆந்திர பொலிஸ் பிடியில் இருந்து தப்பித்து தமிழகம் திரும்புகிறார்கள். வீட்டுக்குக் கிளம்பும் முன், சென்னையில் சமுத்திரக்கனியின் கட்டுப்பாட்டில் இருக்கும் பொலிஸ்நிலையத்தை ஆயுதபூஜைக்காக சுத்தம்செய்து தரச் சொல்கிறது பொலிஸ். அதற்காக அங்கு தங்கும் ஓர் இரவில் நடப்பவை நடுக்கமூட்டும் திருப்பங்கள். அந்த இரவு தினேஷுக்கும் நண்பர்களுக்கும் எப்படி விடிந்தது என்பது... வெடவெடக்கச்செய்யும் கிளைமாக்ஸ்!

படம் தொடங்கும்போது தினேஷ் பிடித்துச் செல்லப்படும் இரவு, இறுதிக்காட்சியில் திரையில் கவியும் இரவு... இரண்டு இரவுகளுக்கு இடையில் சாமானியர்களின் வாழ்க்கை நூலிழை உத்தரவாதம்கூட இல்லாமல் அல்லாடும் அவலத்தை முகத்தில் அறைகிறது படம். சைல்டு ஸ்பெஷலிஸ்ட், ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட் நிபுணர்களைப் போல என்கவுன்டர் ஸ்பெஷலிஸ்ட்களையும் கொண்டாடப்பட வேண்டிய நாயகர்களாகச் சித்திரிக்கும் சினிமாக்களுக்கு மத்தியில், என்கவுன்டர் கொலைகளுக்குப் பின்னால் இருக்கும் அதிகார அரசியலின் ஒவ்வொரு கண்ணியையும், நுட்பமாக வெளிக்கொண்டு வந்த நேர்மை, படைப்பை வேறு தளத்துக்குக் கொண்டுசெல்கிறது. பொலிஸாரின் சித்திரவதையும் அடக்குமுறையும் எந்த எல்லை வரை செல்லும் என்பதற்கு இந்தப் படம் உண்மைக்கு மிக நெருக்கமான ரெஃபரென்ஸ்.

பேர் என்ன

அப்சல்.

ஐ.எஸ்.ஐ.எஸ்-ஸா... அல் கொய்தாவா?

'இல்ல சார்... தமிழ்நாட்ல இருந்து வந்து வேலைபார்க்கிறேன்.

அப்போ எல்.ரீ.ரீயா?'- பெயர், இன அடையாளங்களைக்கொண்டே ஒருவரைக் குற்றவாளியாக்கி விடும் மனநிலை.

உன்னை, குற்றவாளியைக் கண்டுபிடிக்கவா சொன்னேன்... கேஸை முடிக்கத்தானே சொன்னேன்!"

அட சும்மா இருங்க சார்... கோட்டால உள்ளே வந்துட்டு, சிஸ்டம் புரியாமப் பேசிக்கிட்டு!"

'எத்தனை வருஷமா டிபார்ட்மென்ட்ல இருக்கீங்க, இன் னும் 'தொழில்' கத்துக்கலையே..!" - பொலிஸாரின் கறுப்புப் பக்கங்களில் சகஜமாக நடக்கும் அராஜகங்களை பளாரென உணர்த்தும் வசனங்கள்.

'ஐயா... என் கன்ட்ரோல்ல இருக்கிற ஸ்டேஷன்ல என்னைக் கேட்காம வந்து எப்படி நீங்க இப்படிப் பண்ணலாம்?" என அதிகபட்ச நேர்மையுடன் மேலதிகாரிகளுக்கு எதிராக தன் குறைந்தபட்ச அதிகாரத்தைக்கொண்டு கேள்விகேட்கிறார் சமுத்திரக்கனி. பின்னர் இக்கட்டான தருணத்தில், உங்க கன்ட்ரோல்ல இருக்கிற ஸ்டேஷன்ல இப்படி எல்லாம் நடந்திருக்கு. இதுக்கு யார் பொறுப்பு? என்று சமுத்திரக்கனியின் பொறுப்பு உணர்ச்சியை அவருக்கு எதிராகவே பிரயோகிக்கும் மேலதிகாரிகளின் நைச்சிய அரசியல்... கிடுகிடுக்கச் செய்யும் அத்தியாயங்கள்.

முக்கியமாக, படம் நெடுக 'சிஸ்டம்' என்ற சொல் பல இடங்களில் வருகிறது. பொலிஸில் தனிப்பட்ட நபர்களின் நல்லெண்ணம் ஒரு துரும்பைக் கூட கிள்ள உதவாது என்பதையும், அந்த சிஸ்டம் முழுவதுமே கறைபடிந்து கிடப்பதையும் அழுத்தமாகச் சொல்கிறது படம்.

ஆந்திராவில் பொலிஸ் முன்னிலையில் தங்களைத் தாங்களே சிக்கவைத்துக் கொள்ளும் 'கமரா ஒளிப்பதிவு' நாடகத்தில் நடிக்கிறார்கள் தினேஷ் குழுவினர். தமிழகத்தில் தங்கள் உடைமைகள் தங்களுக்கு முன்னரே 'குடி அமர்த்தப்பட்டிருக்கும்' விபரீதம் புரிந்தும் புரியாமல் பரிதவிக்கிறார்கள்.

இரண்டுமே பொலிஸ் நிலையங்களில் சகஜமாக நிகழும் நிகழ்வுகள் என்பதை நினைத்தாலே... அந்தச் சிவப்புக் கட்டடங்களின் மேல் கிலிகொள்ளச்செய்கிறது. பொலிஸ் என்ற சிஸ்டத்தின் ஒவ்வோர் அணுவும் எப்படிச் செயற்படுகிறது என்பதை மிக மிக நுணுக்கமாக ஆராய்ந்து, உண்மைச் சம்பவங்களின்பின்னணியை இணைத்து, நேர்மையான, உண்மையான அரசியல் சினிமாவைக் கொடுத்திருக்கிறார் இயக்குநர் வெற்றிமாறன். வெ.சந்திரகுமார் என்கிற கோவை ஆட்டோ ஓட்டுநர், தனக்கு நேர்ந்த உண்மைச்சம்பவங்களைக் கொண்டு எழுதிய 'லாக்கப்' என்ற நாவலின் தழுவல்தான் இந்தக் கதை. படம் தொடங்கும் போதும் முடியும்போதும் ஓர் எழுத்தாளனுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்கியது சிறப்பு.

படத்தின் முதல் பாதிதான் லாக்கப் நாவல். இரண்டாம் பாதி முழுக்க தமிழகத் தலைநகரில் நடந்த சில உண்மைச் சம்பவங்களின் சாயல் நிரம்பியிருக்கிறது. சம்பவங்களில் மட்டும் அல்ல... பாத்திர வடிவமைப்பிலும் சமூக யதார்த்தத்தின் உளவியலை நேர்த்தியாகப் பொருத்தியிருக்கிறார் இயக்குநர். நம்மளைக் கொல்ல மாட்டாங்கடா என ஏனைய நண்பர்கள் சொல்லும்போது, இல்லல்ல... கண்டிப்பா கொன்னுடுவாங்க' என்கிறான் அப்சல். ஒரு முஸ்லிம் இளைஞனுக்கே உரிய உள்ளுணர்வு அது. ஆந்திர பொலிஸ் ஸ்டேஷனில் ஒரு பயிற்சி பெண் பொலிஸ், தினேஷுக்கு செல்போன் கொடுத்து உதவுகிறார். அதே பொலிஸ் நிலையத்தில் சீனியர் பெண் பொலிஸ் வழக்கம்போல் இயங்குகிறார். 'சிஸ்டத்துக்குள்' புதிதாக உள்ளே வரும் ஒரு பெண்ணின் மரத்துப்போகாத மனச்சாட்சியும், சிஸ்டத்துக்குள்ளேயே ஆழ்ந்துவிட்ட இன்னொரு பெண்ணின் துருவேறிய மனச்சாட்சியும் மிக இயல்பாகக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

சமுத்திரக்கனியின் நடிப்புதான், மொத்த படத்தையும் உயிர்த்துடிப்புடன் தாங்கி நிற்கிறது. அதிகாரத் திமிரும் ஆயுத பலமும் நிரம்பிய பொலிஸாருக்குள் மனச்சாட்சியுடன் செயற்பட முயற்சிக்கும் ஒரு மனிதனின் ஊசலாட்டத்தை, கையறு நிலையை, குற்ற உணர்ச்சி நிறைந்த மனச்சாட்சியை, தன் உடல்மொழியில் அற்புதமாகக் கொண்டுவந்திருக்கிறார் சமுத்திரக்கனி. இது வேற லெவல் கனி!

அதிகாலைக் குளிரில் நடுங்கி, பொலிஸ் அடிக்கு அலறி, உயிர் பயத்தில் வெடவெடக்கும் தினேஷ், 'எனக்கு பல்லுதான் அழகுனு அம்மா சொல்லும் என டார்க் ஹியூமர் செய்யும் முருகதாஸ், நம்மளைக் கொன்னுருவாங்கடா என உயிர் நடுங்கும் அப்சல்... என அந்த நண்பர்கள் கூட்டத்தின் மிகையில்லா நடிப்பு, படத்தின் பெரும்பலம். 'ஒவ்வொரு உயிரும் இந்தப் பூமிக்கு வர்றதுக்கு ஒரு காரணம் இருக்கு. அது போறதுக்கும் ஒரு காரணம் இருக்கணும் என எப்போதும் நைச்சியமாகப் பேசும் இ.ராமதாஸ் பாத்திரம், அசத்தல். அவரை நாம் எல்லா பொலிஸ் ஸ்டேஷன்களிலும் பார்க்கலாம். அதிகாரத் தரகராக வரும் கிஷோரின் நடிப்பும், அவர் பேசும் வசனங்களும் கிளாசிக். சரவணசுப்பையாவின் 'டிப்ளமட்டிக்' குயுக்தி, பிரசாதம் தந்து பிரித்து மேயும் அஜய் கோஷ் என அனைத்துப்பாத்திரங்களிலும் சன்னமாகக்கூட பிசிறடிக்காத நடிப்பு.

கிட்டத்தட்ட 'ரியல் டைம்' நிகழ்வுகளாக நடக்கும் சம்பவங்களை, நொடிக்கு நொடி பரிதவிப்புடன் கடத்துகிறது கிஷோரின் படத்தொகுப்பு. எப்பேர்ப்பட்ட கலைஞனை காலம் பறித்துக்கொண்டது என்பதை அழுத்தமாக உணர்த்துகிறது. ஜி.வி. பிரகாஷின் பின்னணி இசை, காட்சியின் அச்சத்தை ஒரு படி உயர்த்துகிறது. இருளும் ஒளியுமாகப் பயணிக்கும் கால அடுக்குகளைக் கலையாமல் அடுக்குகிறது ராமலிங்கத்தின் ஒளிப்பதிவு.

அதிகாரவர்க்கம் எனும் ஒக்டோபஸின் ஒவ்வொரு கரத்திலும் சொட்டும் இரத்தத் துளிகளை உண்மைக்கு நெருக்கமாக அல்ல... உண்மையாகவே காட்சிப்படுத்தியிருக்கிறார் வெற்றிமாறன். ஆனாலும் சில கேள்விகள் எழுகின்றன. பொலிஸ் ஸ்டேசனில் பொய் வழக்குகள் போடுவதற்கு என்றே சில பழகிய குற்றவாளிகள் இருப்பார்கள். ஆத்திர அவசரத்துக்கு அவர்கள்தான் குற்றவாளிகளாக நிறுத்தப்படுவார்கள். இதில் எந்தத் தொடர்பும் இல்லாத, தமிழ் பேசும் ஒரே காரணத்துக்காக இவர்கள் மீது வழக்கு பாய்வது சற்றே நெருடல். மேலும், அவ்வளவு அடித்து நொறுக்கப்பட்டவர்கள், அடுத்தடுத்த காட்சிகளில் அதற்கான சுவடே இல்லாமல் இயல்பாக நடமாடுவது இடறல். இது ஒரு நுணுக்கமான அரசியல் படம் என்பதால், வேறு ஒரு கேள்வியை எழுப்பவேண்டியிருக்கிறது.

படம் முடியும்போது திரையரங்கில் பெரும் அமைதி எழுகிறது. 'பொலிஸ்கிட்ட சிக்கினா அவ்வளவுதான் என்ற அச்சம் நம் மனதைக் கவ்வுகிறது. வெற்றிமாறனின் நோக்கம், பொலிஸாரின் இரக்கமற்ற முகத்தை வெளிக்கொண்டு வருவதே. ஆனால் அதன் விளைவு, பொலிஸ் குறித்து பொது மனதில் உறைந்திருக்கும் அச்சத்தை மேலும் உயர்த்துகிறது என்றால், விசாரணை ஏற்படுத்தும் உளவியல் விளைவை குறுக்கு விசாரணை செய்யத்தான் வேண்டும்.

சட்டத்தின் இருட்டு மூலைகளில் அரசியல் கட்சிகளும் அதிகார வர்க்கமும் ஆடும் கண்ணாமூச்சி விளையாட்டு, இடஒதுக்கீட்டில் பதவிக்கு வந்தாலே ஏளனமாகப் பார்க்கப்படும் பார்வை என அரசியலின் அத்தனை அழுக்குகளையும் சொல்லி வெற்றிமாறன் மேற்கொண்டிருக்கும் இந்த விசாரணை... நம் அரசு இயந்திரங்களை மேற்கொள்ளச்சொல்கிறது சத்திய சோதனை.

எளியவர்களின் வலி பேசும் வலிமையான படைப்புக்கு, சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கிறோம்.

SINGER FINANCE இடமிருந்து மட்டுமே
பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டிக்காக
அதிகடன் தொகை குறைந்த வட்டி வீதத்தில்




தொடர்புகளுக்கு
சுஜந்தன் 077 7 391 449
தர்ஷன் 077 7 009 666
தனு 077 9 357 124
இல.86, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்

# தமிழ் மீதும் சைவத்தின் மீதும் ஈழமக்களுக்கு அதிக பற்றுறுதி

## தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பாஸ்கரன் புகழாரம்



*கணபதி பாஸ்கரன் இவர் 1951 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் திகதி மாயவரம் மயிலாடு துறையில் பிறந்த இவர் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகத்தில் 1989 ஆம் ஆண்டு தத்துவத்துறை பேராசிரியராக சேர்ந்து அங்கு அனைத்து பதவிகளிலும் கடமையாற்றி பதிவாளராக இருந்து ஓய்வு பெற்றிருந்தார். கடந்த 6 மாதங்களாக அங்கு துணை வேந்தராக பணியாற்றி வருகிறார்.*

*உலகளவில் 2000 ஆம் ஆண்டின் சிறந்த மனிதர் எனும் பட்டத்தை அமெரிக்க நிறுவனம் ஒன்று வழங்கியிருந்தது. இந்தியாவின் சிறந்த கல்வியாளர் மற்றும் ஆய்வாளர் எனும் விருதும், சைவ சித்தாந்த வித்தகர்,திருவாவடுதுறை ஆதீனத்தால் நற்றமிழ் நாவலர் எனும் பட்டம் போன்ற பல்வேறு பட்டங்களையும் விருதுகளையும் பெற்றுள்ளார்.*

தமிழ் நாட்டு மக்களை விட ஈழத்து மக்களுக்குத் தான் தமிழ் மீதும் சைவத்தின் மீதும் அதிக பற்றுறுதியும் அக்கறையும் உள்ளது என்பதை நாம் அனைவரும் அறிந்துள்ளோம். அப்படியான ஒரு இத்தில்முதல்முறையாக சைவ மாநாடு நடப்பது மிக மகிழ்சியான விடயம்

1996 இல் உலக சைவ மாநாட்டை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடத்தியிருந்தேன். 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்ற மாநாடு அது. இன்றும் அனைவராலும் பேசப்படுகின்ற ஒரு மாநாடு ஆகும்.

அதேபோன்று சைவத்திலும் தமிழிலும் அக்கறை அதிகமாக உள்ள மக்கள் வாழும் ஈழத்தின் பண்பாட்டை அடையாளமாகக் கொண்ட இந்து நாகரிகத் துறையால் முதன்முறையாக உலக சைவ மாநாட்டை நடத்துவது மிக பொருத்தமான விடயமும் பெருமையான விடயமும் ஆகும்.

**பல்கலைக்கழகம் என்பது மாணவர்களின் அறிவாற்றலை மேம்பாடு செய்வதற்காக மட்டும் அல்லாது சமுதாய மேம்பாட்டுக்கும் சமுதாய பணியாற்றலுக்குமே அவர்களின் கல்வி பயன்பட வேண்டும் என்பதை மாணவர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும.**

எமது பல்கலைக்கழகத்தில் புதிதாக நூல் கொடை இயக்கம் எனும் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். அதாவது பல்கலைக்கழக நூலகத்துக்கு மக்கள் படித்து பயன்பெற்ற நூல்களை கொடுத்து மக்களுக்கும் பல்கலைக்கழகத்துக்கும் இருக்கும் உணர்வுபூர்வமான ஒரு அடையாளமாக இச் செயற்பாடு அமைகின்றது. இளைஞர்களுக்கு நூலின் முக்கியத்துவம் தெரியாது. அவற்றை சேகரித்து வைத்தால் பல்கலையில் ஒரு பொக்கிஷமாக இருக்கும் என்பதே இதன் நோக்கம் ஆகும்.

யாழ். பல்கலையில் சைவ சித்தாந்த துறை ஆரம்பிக்கவுள்ளதாக கூறியிருந்தார்கள் என்பது மிகவும் அவசியமான ஒன்று. சைவமும் தமிழும் உள்ள இடத்தில் சைவ சித்தாந்த துறை ஆரம்பித்தால் மேலும் விரிவான, ஆழமான ஆய்வுகளை செய்ய வாய்ப்புக்கள் உண்டு.

இங்குள்ள மாணவர்கள் ஆய்வுகளை மிகவும் நுட்பமாகவும் ஆர்வமாகவும் மேற்கொள்வதை நான் பல ஆய்வுகளில் கண்டுள்ளேன். பல ஆய்வுகளை மதிப்பீடு செய்துள்ளேன். அதில் மிகவும் ஆர்வமாக ஈடுபடுவதை கண்டுள்ளேன். எனவே சைவ சித்தாந்த துறையை ஆரம்பித்தால் சிறப்பாக இருக்கும்.

யாழ். பல்கலைக்கழகத்தில் அதிகமான மாணவர்கள் உள்ளனர். உயிரோட்டமான பல்கலைக் கழகம். பாடத்திட்டம் மிக விரிவான ஒன்றாக இருக்கிறது. ஆசிரியர்கள் நல்ல ஈடுபாட்டுடன் பயிற்சி வழங்குவதை நேரடியாக பார்த்துள்ளேன்.

தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகத்துக்கும் இலங்கை பல்கலைக்கழகங்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது. இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களில் இருந்தும் பேராசிரியர்கள் பலர் அங்கு வந்து ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்கள்.

உலகத்தில் உள்ள தமிழர்களை ஒன்றிணைத்து பல்கலைக கழகத்துடன் தொடர்பை ஏற்படுத்தி கல்வி ஆய்வு தொடர்பான உறவை ஏற்படுத்தும் நோக்கில் அனைத்து பல்கலைக்கழகத்திலும் இருந்து எமது பல்கலைக்கழகத்துக்கு மாணவர்கள் வந்து பண்பாடு தொடர்பான விளக்கங்களை பெற்று கொள்வதற்கான ஏற்பாடுகளை ஆரம்பித்துள்ளோம். மாணவர்களுக்கான அனைத்து செலவுகளையும் பல்கலைக்கழகம் பொறுப் பேற்கும். யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்தும் மாணவர்கள் எமது பல்கலைக்கு வந்து பயன் பெறுவதற்கான இது தொடர்பான தொடக்க நிலை வேலைகள் மேற்கொள்ளப்படுகிறன.

பல்கலைக்கழக மானியங்களால் எமது நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் வெளிநாடுகளில் பட்டப்படிப்புகளை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்த உத்தரவுக்கு தடை வாங்கி தற்போதும் வெளிநாடுகளில் பட்டப் படிப்புகளை நடத்தி வருகிறார்கள்.

அதேபோன்று இந்தியாவில் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் வருவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. இங்கு வருவதில் பிரச்சினை இல்லை. தொலை தூரக் கல்வி தொலை தூரத்தில் இருப்பவர்களுக்குத்தான் வழங்க முடியும். எனவே எமது நாட்டு பல்கலைக்கழகங்கள் அனைத்தும் இந்தத் தடை உத்தரவுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன. எனவே மாற்றம் வரும்.

உலகத்தில் பல தத்துவங்கள் உண்டு. ஆனால் அனைத்து தத்துவங்களும் அன்பை தான் குறிப்பிடுகிறது. அன்புதான் இறைவனை அடைவதற்கு வழி என குறிப்பிடுகிறது. ஆனால் உலகில் நடைபெறும் போர், சண்டை உயிரிழப்பு போன்றனவற்றிற்கு காரணமாக சமயத்தை கூறுகிறார்கள். சமயத்தின் பெயரால் தீவிர வாதம் உருவாகின்றது என தெரிவிக்கின்றார்கள். உண்மையான காரணம் அது அல்ல.

சமயத்தை சார்ந்து தீவிர வாதத்தை பேசுகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் சமயத்தின் அடிப்படைக் கோட்பாட்டை அறிந்து கொள்ளவில்லை என்பதே உண்மை. சமயம் அன்பைத் தான் கூறுகின்றது என்பதை அவர்கள் அறிந்திருந்தால் இன்று உலகளாவிய ரீதியில் இலட்சக்கணக்கான உயிரிழப்புகள் நடை பெற்றிருக்க மாட்டாது.

அனைத்து சமயமும் அன்பை காட்டுவது போல் அனைத்து மனிதர்களும் மனிதத்தை கடைப் பிடிக்க வேண்டும்.மனிதத்தை கடைப்பிடித்தாலே அன்பு தொணடு என்பது தானாக வந்து விடும். எநதவொரு பகை, சண்டை, பொறாமை எதுவும் இருக்காது.

மனிதர்களிடையே மகிழ்ச்சி நிலைக்காததற்கு காரணம் ஏன் என்றால் எம்மை பற்றி எமக்கு தெரியாது. ஏன் வாழுகிறோம் என்பது தெரியாது. ஒவ்வொன்றிற்கும் ஒரு காரணத்துடன் தான் அனைத்து வேலைகளையும் செய்கிறோம். எதற்காக வாழ்கிறோம் என்பது பற்றி நாம் சிந்திப்பதில்லை. பிறப்பதில் இருந்து இறப்பதுவரை தான் வாழ்க்கை என நினைக்கிறோம்.

எல்லாவற்றையும் தாண்டி நாம் வாழ்கின்ற வாழ்க்கைக்கு ஒரு நோக்கம் இருக்க வேண்டும். அந்த நோக்கத்தை பற்றி சிந்தித்தால் அதை நாம் அறிந்து கொண்டால் முழுமையான மகிழ்ச்சியை பெற்றுக்கொள்ள முடியும். அதனூடாக மனிதம் எமக்குள் உருவாகும் அன்பு இருந்தால் அமைதி உண்டாகும்,

உலகமயமாக்கல் காரணமாக நாகரிகம் நடைமுறைவாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்த வகையில் தற்காலத்தில் இளைஞர்களுக்கு பல கதவுகளை திறந்து விட்டால் அவர்கள் எதை கடைப்பிடிப்பது என்பது தெரியாமல் இலகுவில் வெளிநாட்டு கலாசாரங்களுக்கு அடிமையாகி விடுகிறார்கள். பெருமையாக இருப்பதே எமக்கு ஆபத்தாகவும் இருப்பது என்பது தற்போதைய கலாசாரம் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. இளவயதினருக்கு எந்த துறையையும் தெரிந்து கொள்ள வேண்டும் எனும் ஆவல் அதிகமாக உள்ளது. எனவே ஒரு கலாசாரத்தில் உள்ளவர்களுக்கு பல கலாசாரங்களை இலகுவில் தெரிந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும் போது கவன சிதறல்கள் அதிகமாக இருக்கிறன.

ஒரு பாடத்தை படித்தால் அதை ஆழமாக படித்து அதை முழுமையாக அறிந்து கொள்ள முடியும். ஆனால் பல பாடத்தை படிக்கும் போது நுனிப்புல் மேய்தல் போல தான் இருக்க வேண்டும். ஒன்றிலும் கவனம் செலுத்த முடியாது. ஆழமாக போகாமல் அகலமாக போவதற்கு இளைஞர்களுக்கு பல வாய்ப்புக்கள் கிடைத்திருப்பதால் கலாசாரங்களை கடைப்பிடிக்காமல் பண்பாட்டு சிதறல்கள் ஏற்படும் நிலை காணப்படுகிறது. இதை தவிர்க்க முடியாது. கண்டிப் புக்கள் அதிகமானால் அதை தேடும் ஆர்வம் அதிகமாகிவிடும்.

அதை கண்டுகொள்ளாமல் விட்டால் அவர்களாகவே உணர்ந்து செயற்படும் காலம் விரைவில் உருவாகும். மாறிக்கொண்டுவரும் சூழலில் எமது கலாசாரம் மறுபடியும் தானாக வரும்.

ஆரம்ப காலத்தில் இருந்த கல்வி முறை தனி மனித மேம்பாடு அறிவாற்றலை உயர்த்துவதில் இருந்தது.

ஆனால் இன்று பொருளாதார அடிப்படையில் தான் மாணவர்களின் எண்ணம் உள்ளது. பொருளாதாரத்தை நோக்கி வாழ்க்கை முறை போகின்றது அதேபோல் கல்வியும் செல்கிறது. மாணவர்களை குறை சொல்ல முடியாது. புற செயலுக்கு தான் முக்கியத்துவம் கொடுக்கிறோம் .அக செயலுக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்தால் மாத்திரமே இளைஞர்கள் பக்குவமடைந்திடுவார்கள்.

ஆய்வுகளை செய்து நூலகத்தில் வைக்கின்றார்கள். அதை நல்ல நூல்களாக கொண்டு வந்தால் அந்த ஆய்வின் பயன் மக்களை சென்றடையும்.அது மட்டுமல்லாமல் ஆய்வாளர்களை பற்றி மக்களும் அறிந்து கொள்ள முடியும். இது பெரிய வாய்ப்புகளை உருவாக்கும்.

ஆய்வுகளை முறையாக வெளிப்படுத்தினால் சிறந்த பலனை அறிய முடியும். அதற்கு சமூகத்துக்கு தேவையான ஆய்வுகளை வெளிக்கொண்டு வருவதற்கு அரசும் ஒத்துழைக்க வேண்டும். அதேபோல வரலாற்று ரீதியான ஆய்வுகளை மேற்கொள்ளும் போதும் வரலாற்று ரீதியான உண்மைகளை வெளிபபடுத்தும் போதும் நல்ல எதிர்காலம் ஆய்வாளருக்கு உண்டு.

அத்துடன் ஆய்வுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு தன்னம்பிக்கை குறைவாக உள்ளது. இதன் காரணமாக ஆய்வுகள் முடங்கிப்போய் உள்ளது. படித்தவர்களுக்கு தொடர்புடைய பணியை கொடுத்தால் சிறந்த எதிர்காலம் அனைவருக்கும் கிடைக்கும். அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டால் சிறப்பாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

நேர்காணல்
பொ.சோபிகா

# facebook

## பேச ஆட்கள் தேவை



டேய் பாலாஜி. பிறந்த நாள் வாழ்த்துக்கள் டாஎன்று வாழ்த்துக்களையே அதட்டலாக பாலாஜியிடம் தெரிவித்தார் அப்பா.

இந்தா காசு. இத செலவுக்கு வச்சிக்கோ. போகும்போது போற வழியில இருக்குற நம்ம தாத்தாவுக்கு சாப்பாடு வாங்கி கொடுத்துட்டு அப்புறம் ஊர் சுத்த போ என்றார் அப்பா.

காசையும் ஆசிர்வாதத்தையும் ஒரு சேர வாங்கி கொண்டு அப்பாவிடமிருந்து விடை பெற்றான் பாலாஜி.

ஹோட்டலில் தாத்தாவுக்கு சாப்பாடை வாங்கிக்கொண்டு அவரோட வீட்டுக்கு விரைந்தான்.

வீட்டுக்குள் நுழைந்து தாத்தாவை தேடினான். அவர் கட்டிலில் படுத்திருந்தார்.

அவர் அருகில் சென்று இந்தாங்க தாத்தா சாப்பாடு என்றான் பாலாஜி. சாப்பாட்டை வாங்கிக் கொண்டு அவன் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார்.

என்ன தாத்தா உங்களுக்கு வேற ஏதாவது வேணுமா" என்று கேட்டான். ஆமாம் என்று இலேசாய் தலையாட்டினார் .

என்ன வேணும்னு சொல்லுங்க வாங்கி தந்துட்டு போறேன்" என்று வேண்டா வெறுப்பாய் கேட்டான் பாலாஜி.

"நீ என்கிட்டே ஒரு 10 நிமிஷம் பேசுறியா" என்று மெல்லிய குரலில் கேட்டார்.

அதை கேட்டதும் பாலாஜியின் மனது அதிர்ந்தது. என்ன சொல்ல வரீங்க" என்று தெளிவுபடுத்த மறுபடியும் கேட்டான்.

இல்ல என்கிட்டே ஒரு 10 நிமிஷம் பேசுறியானு கேடடேன் என்றார் தாத்தா. ஏன் இப்படி சொல்றார்னு அவனுக்கு புரியாமல் சரி என்று தலையாட்டி விட்டு அவரிடம் இருந்து சிறிது தூரம் தள்ளி பேச அமர்ந்தான்.

பாலாஜியும் அவன் தாத்தாவும் பல விசயங்களை பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது பாட்டி இறந்ததை பற்றி அவனிடம் பேசும்போது சோகத்தில் தாத்தா அழ ஆரம்பித்து விட்டார். என்னடா இது வம்பா போயிடிச்சே என்று மனசுக்குள் நினைத்துக் கொண்டு உங்களுக்கு என்ன நடிகர புடிக்கும் என்று பேச்சை மாற்றினான் பாலாஜி.

கண்ணை துடைத்துக் கொண்டே எனக்கு எப்பவுமே M.G.R தான்பா. அவரோட ஸ்டைலான நடிப்பும் அசத்தலான நடை உடை பாவனை எல்லாத்திலும் அவர் தான்பா டாப்பு. அவர நாங்கலாம் நடிகரா பார்த்ததில்ல கடவுளா தான் பார்த்திருக்கோம் என்று மகிழ்ச்சி பொங்க கூறினார்.

M.G.R பற்றி புகழ்ந்து கொண்டு இருக்கும் போது தாத்தாவின் கண்ணிலிருந்து கண்ணீரும் (ஆனந்த கண்ணீர்) உதட்டிலிருந்து மகிழ்ச்சியின் சிரிப்பும் ஒரு சேர வெளிவந்து கொண்டே இருந்தது.

சிறிது நேரம் கழித்து தான் நேரத்தை பார்த்தான். அதற்குள் அரை மணி நேரம் ஓடிப்போயாச்சு என்று பதறி சரி தாத்தா நான் கிளம்புறேன்னு சொல்லிவிட்டு எழுந்து நின்றான்.

என் கூட உட்கார்ந்து பேசியதற்கு ரொம்ப நன்றிபா என்று இரு கரங்களை கை கூப்பி அவனுக்கு நன்றி தெரிவித்தார்.

தாத்தா கை கூப்பி வணங்கியதும் அவனுக்கு மிகவும் சங்கடமாய் போனது. அதெல்லாம் ஒன்னும் இல்ல என்பது போல தலையாட்டினான் பாலாஜி.

இல்லபா. அடுத்தவங்க கூட இவ்வளவு சந்தோசமாய் பேசி எத்தனை மாசம் ஆச்சின்னு எனக்கே ஞாபகம் இல்லபா." என்று நா தழுதழுக்க சொன்னார் தாத்தா.

அவனால் அதற்கு மேல் பேச முடியவில்லை. தாத்தாவிடம் சைகையாலே கிளம்புறேனு சொல்லிவிட்டு அங்கிருந்து விடை பெற்றான்.

வண்டியில் போகும்போது தாத்தாவின் பேச்சு அவனுக்கு ஞாபகத்துக்கு வந்து வந்து போனது. அப்போது தான் அவனுக்கு புரிந்தது முதியவர்கள் பேச ஆளில்லாமல் தவிக்கிறார்கள் என்று.

அப்பொழுதிலிருந்து பாலாஜி அடிக்கடி தாத்தா வீட்டுக்கு போய் பேச ஆரம்பித்தான். தாத்தாவும் மிகவும் மகிழ்ச்சியோடு இருந்தார். படுத்த படுக்கையாய் இருந்தவர் சந்தோசத்தில் வெளியே வந்து நடமாட கூட ஆரம்பித்து விட்டார்..

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 632

Search for people, places and things
Nagendram Home

சரவணபவன் கிருபவன்




லொலிப்பப் விதுசன்




சாள்ஸ் நியூமன்



சர்மி சர்மிளா




முத்துச்சாமி கருபன்




சாம்பவன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 20

## வலிப்பு

(கடந்த வார தொடர்ச்சி)

**காக்கை வலிப்பை முற்றாக குணப்படுத்த முடியுமா?**

வேறுபட்ட மருந்து மாத்திரைகளால் 75% மான வலிப்பு நோயாளிகளிற்கும் சத்திர சிகிச்சை மற்றும் விசேட தூண்டல் முறைகள் மூலம் மேலும் 10% மான நோயாளிகளுக்கும் வலிப்பினை குணப்படுத்த முடியும். இதன்படி பார்க்கையில் ஒட்டுமொத்தமாக 85-90% மான நோயைக் குணப்படுத்த வாய்ப்புக்கள் உள்ளன.

**எல்லா வலிப்புக்களிற்கும் மருத்துவ சிகிச்சை அவசியமானதா?**

இல்லை

பின்வரும் வலிப்பு வகைகளிற்கு பொதுவாக மருந்து மாத்திரைகள் தேவையில்லை

- காய்ச்சலுடனான வலிப்பு
- நீண்ட காலத்திற்கு ஒருமுறை ஏற்படும் வலிப்பு

**காக்கை வலிப்புள்ள பிள்ளைகள் சாதாரண பிள்ளைகளைப் போன்று கல்வி கற்க முடியுமா?**

ஆம்

இவர்கள் சாதாரண பிள்ளைகளைப் போன்று விளையாடவும் கல்வி கற்கவும் முடியும். இவர்களை சாதாரண பிள்ளைகளைப் போன்று எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி விளையாட்டிலும் கல்வியிலும் ஊக்கப்படுத்துதல் வேண்டும்.

**வலிப்பு வியாதியினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் அதிக கவனத்துடன் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமா?**

இல்லை. அளவுக்கு அதிகமாக இப் பிள்ளைகள் பாதுகாக்கப்பட்டால் இவர்களின் மனவளர்ச்சி குன்றிவிடும். இவர்களினால் சாதாரண வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள்ள இயலாமல் போய்விடும். இந்நிலைக்கு காக்கை வலிப்பு நேரடிக்காரணமாகாது.

**இந் நோயை பேய், பிசாசு விரட்டுதல், மாந்திரீகம் பார்த்தல் போன்ற முறைகள் மூலம் குணப்படுத்த முடியுமா?**

இவை விஞ்ஞான ரீதியான சிகிச்சை முறைகள் அல்ல.

**வகுப்பறையில் மாணவன் ஒருவனுக்கு வலிப்பு வந்தால் என்ன செய்யவேண்டும்?**

1. காயம் ஏற்படாதவாறு அருகில் இருக்கும் கதிரை மேசைகளை விலக்கிவிட வேண்டும்.
2. நோயாளியை ஒருபக்கமாக படுக்கவைக்க வேண்டும்.
3. ஏனைய மாணவர்கள் வலிப்புடையவருடன் நிற்பதை தடுக்க வேண்டும்.
4. வலிப்பு நீண்டநேரத்திற்கு நீடிக்குமாயின் அவரை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவேண்டும்.

**காக்கை வலிப்புடைய பிள்ளையை பாடசாலையில் வைத்திருப்பது ஆபத்தானதா?**

வீட்டிலும் சரி பாடசாலையிலும் சரி எதிர்பாராத சந்தர்ப்பங்களிலேயே ஏற்படுகின்றது. பாடசாலை செல்லும் வயதுடைய மாணவர்கள் வீட்டில் இருப்பதால் அவர்களின் கல்வி பாதிப்படைகின்றது. ஆசிரியர்கள் பிள்ளையை பூரணமாக குணமாக்கிய பின்புதான் பாடசாலை அனுப்பும் படி பெற்றோரிடம் வலியுறுத்துவதை தடுக்கவேண்டும்.

**காக்கை வலிப்புள்ள மாணவனை பாடசாலைக்கு அனுப்ப முன் பெற்றோராகிய நீங்கள் என்ன அறிந்திருத்தல் அவசியம்?**

1. வலிப்பு நோய்க்குரிய மருந்தினை வைத்திய ஆலோசனைப் படி நேரத்திற்கு பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும்
2. நேரம் தவறாது நிறையுணவு வகைகளை பிள்ளைகளுக்கு வழங்குதல் வேண்டும்.
3. பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்புவதை தவிர்க்க வேண்டும்.
4. வகுப்பாசிரியர்களுக்கும் சக மாணவர்களுக்கும் இது பற்றி தெரிவிக்க வேண்டும்.
5. நீச்சல் அடித்தல் மற்றும் மரம் ஏறுதல் தவிர்ந்த ஏனைய விளையாட்டுக்களில் பிள்ளைகளை அனுமதிக்க வேண்டும்.
6. பிள்ளைகளை குறைந்தது 6 மணித்தியாலங்களாவது உறங்கவிட வேண்டும்.

**காக்கை வலிப்புடைய திருமணவயதினருக்கு எவ்வாறான ஆலோசனைகளை வழங்க விரும்புகிறீர்கள்?**

அவர்கள் சந்தோசமான திருப்திகரமான திருமண வாழ்க்கையை வாழலாம். இதற்கு வலிப்பு ஒரு தடை அல்ல. அத்துடன் சாதாரண தம்பதிகள் போல் பிள்ளைகளையும் பெறலாம். ஆனால் குறிப்பாக பெண் பிள்ளைகள் திருமணத்திற்கு முன் இது சம்பந்தமாக வைத்திய ஆலோசனை ஒன்றை பெற்றிருத்தல் இன்றியமையாதது.

**வலிப்பு நோய் உடையவர்கள் கர்ப்பம் தரிப்பது பற்றி உங்கள் ஆலோசனைகள் என்ன?**

1. இவர்கள் கர்ப்பம் தரிக்க எந்தவித தடையும் இல்லை. ஆனால் கருத்தரிக்க முன் வைத்தியரின் ஆலோசனை ஒன்றை பெற்றிருத்தல் இன்றியமையாதது.
2. எதிர்பாராதவிதமாக கருத்தரித்திருந்தால் மருந்தை நிறுத்தாமல் கூடிய விரைவில் வைத்திய ஆலோசனையை பெறுங்கள்.
3. நீங்கள் மகப்பேற்று மருத்துவரை முதலில் சந்திக்கும் போது உங்களுக்கு வலிப்பு வியாதி இருப்பதைப் பற்றி தெரிவியுங்கள் .
4. கர்ப்பம் தரிக்க முன்பு இருந்தே போலிக்அசிட் எனப்படும் விற்றமின்களை எடுக்க வேண்டும்.
5. ஒழுங்கான உணவுப் பழக்கங்களும், ஓரளவு உறக்கமும் இக் காலத்தில் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

**வலிப்பு நோய் உடையவர்கள் தொழில் பார்ப்பதில் ஏற்படும் பிரச்சினைகள் எவை?**

சாதாரண தொழிலாளர் போல் இவர்கள் வேலை பார்க்கலாம். ஆனால் நீங்கள் வேலையைத் தெரியும் முன் பின்வருவனவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்

1. வலிப்பு ஓரளவுக்கேனும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டும்.
2. பின்வரும் சந்தர்ப்பங்களை தவிர்த்தல் வேண்டும்

2.1 ஆபத்தான இயந்திரங்களுடனான வேலை
2.2 நெருப்புடனான வேலை
2.3 உயரமான இடத்தில் இருந்து செய்யும் வேலை
2.4 இரவு நேர வேலைகள்

**வலிப்பினை இனங்காணும் பொழுது எவ்வாறான முதலுதவிகளை வழங்கலாம்?**

வலிப்பு ஏற்படுகின்ற பொழுது உடலிலுள்ள தசைகள் இறுக்கமடையும் அதேவேளையில் குரல்வளையிலுள்ள தசைகளும் இறுக்கம் அடைகின்றன. இதன் பொழுது தற்காலிகமான மூச்சுத்திணறல் ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால் வலிப்பு அசாதாரணமாக நீண்ட நேரத்திற்கு நீடிக்குமாயின் இறப்பும் நிகழலாம். எனவே நோயாளி உபாதைக்கு உட்பட்டிருக்கும் நேரத்தில் உரிய முதலுதவிச் சிகிச்சையளிப்பது இன்றியமையாதது.

1. முதலுதவி வழங்குபவர் பதற்றம் அடையாது இருத்தல் வேண்டும்
2. வலிப்பு நோயாளியின் சுற்றுப் புறத்திலுள்ள நோயாளிக்கு ஆபத்து விளைவிக்கும் பொருட்களை அகற்ற வேண்டும்
3. நோயாளிக்கு வலிப்பு ஆரம்பித்த நேரத்தினை குறித்துக் கொள்ள வேண்டும்
4. நோயாளிக்கு வலிப்பு நோய் முற்று முழுதாக நிற்கும் வரை நோயாளியுடன் இருத்தல் வேண்டும்
5. வலிப்பின் பொழுது தலை அடிபடுதலை தலையணை ஒன்றைப் பயன்படுத்தி தவிர்த்துக் கொள்ள முடியும்.
6. எக்காரணம் கொண்டும் உடலில் அல்லது கை கால்களில் ஏற்படும் வலிப்பின் போதான உதறல்களை நிறுத்த முற்படக் கூடாது.
7. வலிப்பின் பொழுது நோயாளியின் வாய்க்குள் திண்ம அல்லது திரவப் பதார்த்தங்களை விடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
8. மீண்டும் ஒருமுறை வலிப்பு நீடிக்கும் நேரத்தை அவதானிக்கவும்.
9. வலிப்பு 5 நிமிடங்களை விடக் கூடிய நேரம் நீடிக்குமாயின் உடனடியாக வைத்தியசாலையின் அவசரப் பிரிவிற்கு நோயாளியை அனுமதிப்பது அவசியம்.
10. கை கால் உதறல்கள்குறையுமிடத்து நோயாளியை இடது அல்லது வலது புறமாக பாதி திரும்பிய நிலையில் வைத்து சீரான சுவாசம் ஏற்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்துவது அவசியம். இதன் பொழுது சுவாசக் குழாயினுடைய தொழிற்பாட்டை திண்ம உணவுப் பதார்த்தங்கள், கட்டுப் பற்கள் அல்லது அது போன்ற வேறு ஏதேனும் பொருட்கள் இடையூறு விளைவிக்கின்றதா என வாய்க்குளிக்குள் சோதித்தல் வேண்டும்.
11. சுவாச வீதமானது ஏதாவது காரணத்தினால் குறைவடையும் போது உடனடியாக வைத்திய உதவியை நாடுதல் அவசியம்.

**வலிப்பு நோயாளர்கள் பின்பற்ற வேண்டிய உணவுப் பழக்க முறைகள் யாவை?**

இதெற்கென பிரத்தியேகமான உணவு முறைகள் எதுவுமில்லை. இருப்பினும் வயதிற்கேற்ற வகையில் நேரந்தவறாது உணவு உட்கொள்ளுதல் இன்றியமையாதது ஆகும்.

**"காக்கைவலிப்பு உங்கள் வாழ்க்கையை இருள்மயமாக்காது! தைரியத்துடனும் விவேகத்துடனும் அதற்கு முகங்கொடுங்கள்"**

திருமதி. அஜந்தா கேசவராஜ்
விசேட நரம்பியல் நிபுணர்.

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0782075424 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.